பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 18 | திங்கட்கிழமை | (02.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 227

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

பொதுசன நூலகம்
- 2 AUG 2004
மாநகர

# இராணுவக் கட்டமைப்பில் அரசு பாரிய மாற்றங்களை செய்கிறது

## யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன்

(நமது நிருபர்)

**இலங்கையின் இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பிரகாரம் குடாநாட்டின் புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் பதவியேற்கவிருக்கின்றார்.**

திருகோணமலையின் கட்டளைத் தளபதியாக உள்ள மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக நியமனம் பெறவுள்ளார்.

தற்போது யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக உள்ள சுசில் சந்திரபால தொண்டர் படைத் தளபதியாக நியமனம் பெறுகிறார்.

இதேவேளை, தொண்டர்படைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையக அதிகாரியாக தொடர்ந்தும் பதவி வகிப்பார்.

யாழ். மாவட்ட துணைத் தளபதியாக இருக்கின்ற மேஜர் ஜெனரல் குலதுங்க திருகோணமலைத் தளபதியாகவும் வன்னிக் கட்டளைத் தளபதியாகவிருக்கின்ற மேஜர் ஜெனரல் வி.எஸ்.கே. விஜயசூரிய இராணுவத்தின் தலைமையக இயக்குநராகவும் நியமனம் பெறவுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புலனாய்வாளர் விடுதலைப் புலிகளால் கைது

(அம்பாறை)

பெரியபுல்லுமலையில் நேற்றையதினம் இராணுவப் புலனாய்வாளர்கள் இருவர் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்திற்கு அருகில் உள்ள பெரியபுல்லுமலையில் வைத்து ஆறுமுகம் ரவிச்சந்திரன் மற்றும் செல்லத்துரை சந்திரசேகரம் ஆகிய இருவரும் இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் செல்லிட தொலைபேசியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது இவர்களுக்கு துணையாகச் செயற்பட்ட குணபண்டா சின்னவன் என்பவரும் எஸ்.எல்.ஆர் துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(த-121)

## கொழும்பு நகரை பாதுகாக்க தீவிர சோதனை நடவடிக்கை

### அமுலாகும் என்கிறார் திலக் ரணவிராஜா

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் யாவும் ஒருசிலரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டவையே. இதனால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது.

கடந்த காலங்களில் நாடு யுத்த சூழல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக பொலிஸாரின் நடவடிக்கைகள் திசை திருப்பப்பட்டன என்றார்.

இதேவேளை, கொழும்பு பிரதேசத்தில் தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்புச் செயற்திட்டத்தை மேலும் பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இச் செயற்திட்டம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விசேடமாக நெடுந்தூர பேருந்துகள், மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் என்பன இடை இடையே நிறுத்தப்பட்டு சோதனையிடப்படவுள்ளன. (த-121)

## ஷெல்காஸின் விலை ரூ. 70 ஆல் அதிகரிப்பு

(கொழும்பு)

ஷெல்காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை நேற்று நள்ளிரவு முதல் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஷெல்காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுவரை 620 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த 12.5 கிலோகிராம் நிறையுள்ள காஸ் சிலின்டர் இன்று முதல் 690 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் விலை அதிகரிப்புக்கு வர்த்தக வாணிப அமைச்சு அங்கீகாரம் அளிக்கவில்லை என்றும் ஷெல்காஸ் நிறுவனமே இவ் விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## போராளிகள் ஏழு பேர் உட்பட 10பேர் அக்கரைப்பற்றில் கைது

### மூவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்

(மட்டக்களப்பு)

அம்பாறை - அக்கரைப்பற்றில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஏழுபேர் உட்பட பத்துத் தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தம்பிலுவிலில் இருந்து மட்டக்களப்பு நோக்கி யாழ். நகர தனியார் வர்த்தக நிலைய விற்பனை வாகனமொன்றில் பிரஸ்தாப நபர்கள் 10 பேரும் சென்றுகொண்டிருந்தனர்.

இதன்போது அக்கரைப்பற்று சோதனை நிலையத்தில் இந்த வாகனத்தை சோத

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகம் முன் இன்று பட்டதாரிகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உயர்தேசிய கணக்கியல், முகாமைத்துவ, வர்த்தகப் பட்டதாரிகள் யாழ். செயலகம் முன்பாக இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகளை பொருத்தமான அரச துறைகளில் பயிலுநர்களாக இணைத்துக் கொள்வதற்காக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வெளியிடப்பட்ட பெயர்களில் தமது பெயர்கள் உள்ளடக்கப்படாமையைக் கண்டித்தே அவர்கள் இப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

உயர் தேசிய டிப்ளோமாதாரிகளுக்கான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் அகதிகள் 17 பேர் நேற்று தலைமன்னாரை வந்தடைந்தனர்

(தலைமன்னார்)

**தமிழக அகதி முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் மேலும் சுமார் 17 பேர் சட்டவிரோதமான முறையில் பாக்குநீரிணை ஊடாக நேற்று அதிகாலை தலைமன்னாரை வந்தடைந்துள்ளதாக மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

சட்டவிரோதமான முறையில் மீன்பிடிப் படகில் நேற்று அதிகாலை தலைமன்னாரை வந்தடைந்த 17 தமிழ் அகதிகளையும் இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து மன்னார்ப் பொலிஸார் மூலம் மன்னார் மாவட்ட நீதிபதி முன்நிறுத்தப்பட்டனர்.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 17 தமிழ் அகதிகளில் அதிகமானவர் பெண்கள் என்றும் இவர்களில் 8 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனையோர் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

(புத்தளம்)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.


புத்தளம் தில்லையடி புனித அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயத்திற்கு முன்பாக இந்த ஆர்பாட்டம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணிதம் பகுதி - 1
ஆக்கம்:
திருமதி துளசி நவரத்தினராசா
ஆசிரியை

# வெள்ளம் பாதித்த பங்களாதேஷில் தொற்றுநோய் பரவும் அபாயம்

வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வங்கதேசத்தில், தொற்றுநோய்கள் காரணமாக ஏராளமானவர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வங்கதேசத்தில் இந்த ஆண்டு பருவமழை கடும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆயிரத்து 300க்கும் மேற்பட்டோர் வெள்ளத்திற்கு பலியாகியுள்ளனர். தற்போது வெள்ளம் வடிந்துகொண்டிருந்தாலும், மக்கள் தொற்றுநோயால் பாதிக்கப்படுவது அதிகரித்துள்ளது.



நேற்றுமுன்தினம் மட்டும் 7ஆயிரம் பேர் வயிற்றுப்போக்கு உட்பட தண்ணீர் தொடர்பான பல நோய்களால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன் இதுபோன்ற வெள்ளச் சீரழிவை பார்த்ததில்லை. குடிநீர் மற்றும் உணவு போன்றவற்றிற்கு கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்று டக்கா நகர மக்களில் பலர் தெரிவித்துள்ளனர்.

பல இடங்களில் குப்பை மற்றும் அசுத்தமான கழிவுகளில், வெள்ள நீர் தேங்கி நிற்பதால் நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் மட்டும் கடந்த மூன்று வாரங்களில் ஒரு இலட்சம் கிராமப்புற மக்கள் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுள்ளனர். ஒவ்வொருநாளும் புதிதாக 500 நோயாளிகள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். தலைநகர் டக்காவில் மட்டும் 25இலட்சம் பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உணவு மற்றும் இருப்பிடம் இன்றி தவித்து வருகின்றனர். நிவாரண உதவிகளும் முழு அளவில் கிடைக்காததால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(யே)

# துருக்கி நாட்டைச் சேர்ந்த 2 சாரதிகள் ஈராக்கில் கடத்தல்

ஈராக்கில் துருக்கி நாட்டைச்சேர்ந்த 2லாரி டிரைவர்களை ஜோர்தான் நாட்டுத் தீவிரவாத இயக்கம் கடத்திச்சென்றுவிட்டது.



ஈராக்கில் பணி புரிநதவரும் வெளிநாட்டு லாரி டிரைவர்களை தீவிரவாத இயக்கங்கள கடத்தி வருகின்றன. ஈராக்கில் பணிபுரியும் குவைத் லாரி போக்குவரத்து கம்பெனியில் பணிபுரிந்துவந்த இந்தியர்கள் 3பேர் உட்பட 7லாரி டிரைவர்களை கறுப்பு கொடிகள் என்ற பேருடைய தீவிரவாத இயக்கத்தினர் கடத்திச்சென்று பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். அவர்களை மீட்க பலவழிகளில் முயற்சிகள் நடந்துவருகின்றன.

இந்த நிலையில் ஈராக்கில் பணிபுரிந்த துருக்கி நாட்டைச்சேர்ந்த இரண்டு லாரி டிரைவர்களை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர். ஜோர்தானில் உள்ள அபுமுசாப் அல் ஜர்குவாவி என்ற தீவிரவாத இயக்கம் இவர்களை கடததிச்சென்றுவிட்டதாக அல்ஜீரா டெலிவிசனில் புதிய வீடியோ டேப் ஒளிபரப்பப்பட்டது. ஈராக்கில் உள்ள துருக்கி கம்பெனியை அடுத்த 48மணிநேரததில் மூடாவிட்டால் அந்த 2 டிரைவர்களையும் கொன்றுவிடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர். (யே)

# பெண்ணுரிமைப் போராட்டங்களால் குடும்ப முறைக்கு ஆபத்து

அதிகாரத்திற்காகவும் ஆண்-பெண் சமத்துவத்திற்காகவும் நடத்தப்படும் நவீன பெண்ணுரிமைப் போராட்டங்கள்,பாரம்பரிய குடும்பமுறைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன எனறு வத்திக்கான கவலை தெரிவித்துள்ளது. சேர்ச்சுகள் மற்றும் உலகத்தில் ஆண்-பெண் ஒத்துழைப்பு என்ற தலைப்பில் போப் ஜோன் பாலின் வாடிகன் அலுவலகம், 37பக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது.



பெண்கள் மதிக்கப்பட வேண்டும். பணி செய்யும் இடங்களில் அவர்களுக்கு சமஉரிமை இருக்க வேண்டும். அதேசமயம், ஆண்-பெண் என்ற பாலியல் வேறுபாடுகளும் இருக்கவேண்டும். சமீப ஆண்டுகள், பெண்கள் பிரச்சினையில் புதிய அணுகுமுறையைக் கணடுவருகின்றன. அதிகாரத்திற்காகவும், ஆண்-பெண் சமத்துவத்திற்காகவும் நடத்தப்படும் நவீன கால பெண்ணுரிமைப் போராட்டங்கள், பாரம்பரியமான குடும்பமுறைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன. ஓரினச் சேர்க்கை திருமணத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை அது உருவாக்கி இருக்கிறது.

கத்தோலிக்க சேர்ச்சுகளில் பெண் பாதிரியார்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர். அதிகார துஷ்பிரயோகங்களைச் சந்திக்கும் பெண்கள், அதற்குத் தீர்வாக தங்களுக்கும் அதிகாரங்கள் வேண்டும் என்று கருதுகின்றனர். இதன் காரணமாக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே மோதல் போக்கு ஏற்படுகிறது. குடும்ப முறையைப் பாதிக்க இது காரணமாகிறது. பாலின வேறுபாட்டையே அழிக்க, பெண்ணுரிமைப் போராட்டங்கள் முயற்சிக்கின்றன. பெண்கள் ஆற்றக்கூடிய 'தாய்மை' கடமை அங்கீகரிக்கப்பட வேண்டும். பெண்களின் உண்மையான பணியாக சமூகம் அதை மதிக்கவேண்டும்.

அதேசமயம், பெண்கள் வேலைக்குச் செல்வதற்கும் அதிகார நிலைகளைப் பெறுவதற்கும் எல்லைகள் இருக்கக்கூடாது. பெண்களின் அடையாளமாக தாய்மை இருந்தாலும், சந்ததிகளைப் பெருக்குவதற்கு அவர்கள் மட்டுமே முழுக்காரணம் என்று கருதக்கூடாது. முழுநேர தாய்மார்களை இழிவாகக் கருதக் கூடாது. தாய்மார்களுக்கு அவர்களின் குடும்ப வாழக்கையை சீர்குலைக்காதவாறு, வெளியில் எளிதாக வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு அரசாங்கங்கள் உதவவேண்டும். மதபோதகர்கள் அந்தஸ்து ஆண்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பது, கிறிஸ்துவின் இதயத்தில் பெண்கள் இடம்பெறுவதை எந்த வகையிலும் பாதிக்காது. கிறிஸ்து, தனது திருத்தூதர்களாக ஆண்களை மட்டுமே தேர்ந்தெடுத்தார். எனவே, பெண்கள் மதபோதகர்கள் ஆவதற்கு விதிக்கப்பட்ட தடையை மாற்ற முடியாது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(யே)

## WORLD NEWS உலக தரிசனம்

# அமைச்சரின் கொலை முயற்சிக்கு தீவிரவாதப் பிரிவு பொறுப்பேற்பு

பாகிஸ்தான் வருங்காலப் பிரதமரும், தற்போது நிதியமைச்சருமான சவுஹத் அஸிஸை படுகொலை செய்ய நாங்கள்தான் முயற்சிசெய்தோம் என அல்கெய்டா அமைப்பின் ஆதரவு பெற்ற ஒரு தீவிரவாத அமைப்பு தெரிவித்தது.



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே நேற்றுமுன்தினம் வருங்காலப் பிரதமர் சவுஹத் அஸிஸ் சென்றுகொண்டிருந்தபோது அவரை மனித வெடிகுண்டு வெடித்து படுகொலை செய்ய முயற்சி நடந்தது. இந்தக் கொலை முயற்சிக்கு நாங்கள்தான் காரணம் என்று அல்கெய்டா இயக்கம் சார்பாக ஒரு 'தீவிரவாத இயக்கம் இண்டர்நெட் மூலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பதஹ்ஜங்சலிருந்து அமெரிகக ஆதரவாளரான அஸிஸ் வந்துகொண்டிருந்தபோது அவரை படுகொலைசெய்ய எங்கள் இயக்கத்தின் வீரர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால் அவர் இன்னும் உயிருடன் வாழ கடவுள் விரும்புகிறார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அரபுமொழியில் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையானது இஸ்லாமிய தீவிரவாத பிரிவுகளின் செய்திகளை வெளியிடும் இஸ்லாமிக் வெப்சைட்டில் வெளியிடப்பட்டிருந்தது.

(யே)

# கடத்தல்காரர்களின் கோரிக்கையை குவைத் கம்பெனி ஏற்றுக்கொண்டது

இந்தியர்கள் உட்பட 7பேர்களை ஈராக்கில் கடத்தி பிணைக் கைதிகளாக வைத்துள்ள தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்க குவைத் கம்பெனி சம்மதித்து உள்ளது.




தீவிரவாதிகளுடன் ஈராக் நாட்டு துணை அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது தவிரவாதிகள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். ஈராக்கில் உள்ள குவைத் கம்பெனியை மூட வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர். மேலும் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் இந்தியர்களின் தலைகளைத் துண்டித்து விடுவோம் என்று 2முறைகெடு விதித்தனர். இந்தக கெடு நேற்று இந்திய நேரப்படி இரவு 8.30 மணியுடன் முடிவடைந்தது. கெடு முடிவதற்குள் இந்தியப் பிரதிநிதி ஈராக்கிற்கு விரைந்தார். மேலும் தீவிரவாதிகளின் கோரிக்கையை குவைத் கம்பெனி ஏற்றுக்கொள்ளாவிட்டால் மத்தியஸ் தம் செய்வதில் இருந்து விலகப்போவதாக ஈராக் துணை மந்திரி அறிவித்தார்.

இந்த நிலையில் தீவிரவாதிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக குவைத் போக்குவரத்துக் கம்பெனி அறிவித்துள்ளது.

பலூஜாவில் அமெரிக்க இராணுவத்தால் தாக்குதல் நடத்தியதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவும் குவைத் கம்பெனி ஒப்புக்கொண்டுள்ளது. இதை குவைத் கம்பெனியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஷேக்ஹிலும் அல்-துலாமி நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் தெரிவித்தார்.

(யே)

# காலக்கெடு முடிந்தது இந்தியர்களின் கதி என்ன?

ஈராக்கில் கடத்தப்பட்ட இந்தியர்களின் தலையைத் துண்டிப்போம் என்ற தீவிரவாதிகளின் கெடு முடிந்தது.

ஆனால் இந்தியர் 3பேர்களின் கதி என்னவென்று தெரியவில்லை.



எங்கள் கோரிக்கையை குவைத் கம்பெனி ஏற்காவிட்டால் கடத்தப்பட்ட இந்தியர்களின் தலைகளைத் துண்டிபபோம் என்று தீவிரவாதிகள் கெடு விதித்திருந்தனர். அவர்கள் விதித்த கெடு நேற்று இரவு 8.30மணியுடன் முடிந்தது. ஆனால் இந்தியர்கள் தலைகள் துண்டிக்கப்பட வில்லை. அதே சமயத்தில் அவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. அவர்கள் கதி என்னவாயிற்று என்று நேற்று நள்ளிரவு 2 மணிவரை மர்மமாக இருந்தது. இதற்கிடையில் தீவிரவாதிகளின் கோரிக்கையை ஏற்பதாக குவைத கம்பெனி அறிவித்துள்ளது.

இதற்கு தீவிரவாதிகளிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை. இந்தநிலையில பாங்கொக் நகரில் நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு டெல்லி திரும்பிய பிரதமர் மன்மோகன்சிங் நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில், கடத்தப்பட்ட இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட கெடு முடிந்தது. அவர்களை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேவைப்பட்டால் ஈராக்கில் உள்ள இந்தியர்களை திரும்ப அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (யே)

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து வெற்றிநோக்கி !

தற்பொழுது எக்பஸ்ரனில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியருக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றியை நோக்கி வீறுநடைபோடுகிறது.






566ஓட்டங்களுக்கு 9விக்கெற்றுக்களை இழந்தநிலையில் இங்கிலாந்து அணி தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்திய அணி 336ஓட்டங்களுக்குத் தமது சகல விக்கெற்றுக்களையுமிழந்தனர். சர்வான் இங்கிலாந்திற்கெதிரான தனது கன்னிச் சதத்தைப்பெற்றார். 139ஓட்டங்களுககு அவர் ஆட்டமிழந்தார். பிரையன் லாரா 95ஓட்டங்கள் எடுத்தார். டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம ஓடடங்களைப்பெற அவர் இன்னும் 20ஓட்டங்களைப்பெறவேண்டும். இவருக்கு முதல் மூவரே இந்த எண்ணிக்கையைக் கடந்துள்ளனர்.

தொடர்ந்து துடுப்பாட்டத்திற்கு மேற்கிந்தியரை அழைப்பதைத் தவிர்த்த இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் மீண்டும் தமது அணியைத் துடுப்பாட்டத்திற்கு இட்டுச் சென்றார் நேற்றைய ஆட்டமுடிவின்போது இங்கிலாந்து அணி 148ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுக்களை இழந்திருந்தது. ஏற்கனவே 230ஓட்டங்களால் அவ்வணி முந்நிலையில் இருக்கிறது. (யே)

# அகில இந்தியக் கூடைப்பந்து போட்டி சென்னையில் ஆரம்பம்

26வது ஆண்டு மாக்னோலியா கோப்பைக்கான அகில இந்திய கூடைப்பந்துப் போட்டி சென்னையில் ·நேற்று முதல் நடைபெறுகிறது. சாந்தோம் மான்ட்போர்ட் உள்ளக விளையாட்டரங்கில் 8ஆம்





திகதிவரை நடைபெறும் இப் போட்டியில் இந்தியாவில் உள்ள முன்னிலை அணிகள் அனைத்தும் பஙகேற்றுள்ளன. தனது பொன்விழா ஆண்டை முன்னிட்டு ஏஸ் கூடைப்பந்து கிளப் இப் போட்டியை நடத்துகிறது.

இப போட்டியில் 2முறை பட்டம் வென்றுள்ள இந்தியன் வங்கி. 9முறை பட்டம் வென்றுள்ள இந்தியன ஓவர்சீஸ்வங்கி கஸ்டம்ஸ், மனமகிழ் மன்றம் ஆகியவற்றுடன் திருச்சியில் சமீபத்தில் நடைபெற்ற மாநில சம்பியன் ஷிப்பில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியைத் தோற்கடித்து. சரித்திரம்படைத்த ஐ.சிஎ.்.ப் ஆகியன சென்னையிலிருந்து இப் போட்டிக்குத் தேர்வு பெற்றுள்ளன.

4பிரிவாக முதலில் லீக் அடிப்படையில் ஆட்டங்கள் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதி நாக் அவுட் ஆட்டத்துக்கு முன்னேறும்.

முதலிடம்பெறும் அணிக்கு ரூ.30ஆயிரமும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு ரூ.15ஆயிரமும் 3வது இடத்தை எட்டும் அணிக்கு ரூ.7,.500ம் ரொக்கப் பரிசு வழங்கப்படவுள்ளது.

பரிசாக மொத்தம் ரூ.57ஆயிரம் வழங்க உள்ளோம் என ஏஸ் கிளப்பின் நிர்வாகத் தலைவரும் முன்னாள் இந்திய வீரருமான எம். எஸ்.வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார். (யே)

# பல்கலை ஹொக்கி இறுதியில் வட்டு-ஓல்ட் கோல்ட்ஸ் வெற்றி

யாழ்மாவட்ட ஹொக்கிச் சங்கம், மாவட்ட ரீதியில் அதில் அங்கம்வகிக்கும் கழக அணிகளுக்கு இடையில் யாழ்.பல்கலைக்கழக ஆடுகளத்தில நடாத்திவந்த ஹொக்கிப் போட்டித் தெடரின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும கடந்த வெள்ளிக்கிழமை கே.கணேசநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றன.



இறுதி ஆட்டத்தில் வட்டு-ஓல்ட் கோல்ட்ஸ் ஸ்போட்ஸ்கழக அணி அதனை எதிர்த்தாடிய யாழ்பலகலைககழக அணியை 2:0என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.


தொடக்க முதல், இறுதி வரை வெகுபோட்டா போட்டியாய் இருந்த இந்த ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி 40வது நிமிடத்தில் ஒரு கோலையும், ஆட்டம் நிறைவுபெறுவதற்கு 8 நிமிடங்கள் இருக்கையில் இரண்டாவது கோலையும் போட்டது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக எஸ்.சாந்திகரன், எஸ்.செல்வச்சந்திரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் அவர்களும் சிறப்பு விருந்தினராக J.D.சயீன்டிறன் ஆகியோர் கலந்துகொண்டனர். (யே-110)

# சர்வதேச கரபந்தில் இந்தியா ஈரானை வென்றது

துபாயில் நடைபெற்றுவரும் ரஷீத் சர்வதேச கரபந்துப் போட்டியில் இந்திய அணி ஈரானை 3-1என்ற செற்களில் தோற்கடித்தது.



8வது ரஷீத் சர்வதேச கரப் பந்துப் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் துபாயில் நடாத்தப்பட்டு வருகிறது. சர்வதேச அணிகள பல கலந்துகொண்டு விளையாடிவரும் இந்தப் போட்டியின் ஒரு ஆட்டத்தில் இந்தியாவும் ஈரானும் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 27-25,17-25,25-19,25-20 என்ற புள்ளிகளில் ஈரான் அணியை தோற்கடித்தது. இந்திய அணி 90 நிமிட நேரம் போராடி வெற்றி பெற்ற இந்த ஆட்டத்தில் சுப்பாராவ், பிரதீப் ஆகியோரது தாக்குதல் ஆட்டமும், ஸ்ரீகாந்த், கபில்தேவ், ஆகியோரது சிறப்பான ஆட்டமும் வெற்றிக்கு உதவியது.

இந்திய அணி வீரர் கபில்தேவ் இந்தப் போட்டியின் சிறந்த வீரராக தேர்வு பெற்றார்.

இன்று நடைபெறும் ஒரு ஆட்டத்தில் இந்திய அணி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஜீனியர் அணியுடன் மோதுகிறது. (யே)

# ஆசியக் கால்பந்து போட்டி ஜப்பான் அரை இறுதியில்

ஆசியக்கோப்பை கால்பந்து அரையிறுதியில் நுழைந்தது ஜப்பான. ஆசிய அளவில முன்னணி அணிகள் மோதும் ஆசியக்கோப்பை கால்பந்துத் தொடர் சீனாவில் நடக்கிறது. இந்தத் தொடர் தற்போது காலிறுதியை எட்டிவிட்டது. சீனாவின் மேற்குப் பகுதியில் உள்ள சோன்கிங் நகரில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ஜப்பான், ஜோர்தான அணிகள் மோதின. ஆரம்பம முதல் ஆட்டம் வெகு விறுவிறுப்பாக இருந்தது.



இரு அணிகளும் மிகக் கடுமையாகப் போராடின. கோல் அடிப்பது கடும் சவாலாக இருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலை வகித்தன.

இதையடுத்து, பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. இதை ஜப்பான் அருமையாகப் பயன்படுத்திக் கொண்டது. 4-3என்ற கோல்கணக்கில் ஜோர்தானை வீழ்த்தி, அரையிறுதிக்குள் நுழைந்தது. (யே)

# விளையாட்டுச் செய்திகள்


ATHENS 2004

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 11 தினங்கள்

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி XIV

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் வில்வித்தை உள்ளக மைதானம்

எதென்ஸின் கலிமார் மாரோவில் அமைக்கப்பட்டுள்ள வில்வித்தை உள்ளக விளையாட்டு மைதானம் எதென்சுக்குப் புதிய அறிமுகமாகும். ஆயினும் முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்ற பிரதான மைதானத்திலேயே இதுவும் அமைக்கப்பட்டுள்ளது.



ஸ்பைரோஸ் லூயிஸ் எனப்படும் கிரேக்க தூதன் இங்குதான் வெற்றிச்செயதி கொண்டு வந்து வீழ்ந்து இறந்ததாகக் கூறப்படுகிறது. மரதன் போட்டிகளின் முடிவும் இம்முறை இங்குதான் இடம்பெற இருக்கிறது.

செயூஸ் ஆலயம் மற்றும் ஆக்கோ மோலியஸ் நினைவுத்தூபிகளுக்கு எதிரில் இருக்கும் இம் மைதானத்தின் இருமருங்கிலும் 35ஆயிரத்திற்குமதிகமான பெதுமக்கள் மரதன் வீரர்களுக்கு உற்சாகமளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

180மரதன் வீரர்களும், 128வில்வித்தை வீரர்களும் பங்குபற்றவுள்ள இப் போட்டிகள் ஓகஸ்ட் 15 தொடக்கம் 29வரை நடைபெறவுள்ளன.

(யே)

# பேச்சுகளை மீள ஆரம்பிக்குக

# அமெரிக்கா அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு புலிகளையும் அரசாங்கத்தையும் அமெரிக்கா கேட்டுள்ளது.

மீண்டும் போர் ஏற்படும் அபாயம் இருப்பதாக விதார் ஹெல்கீசன் எச்சரித்த இரு நாட்களின் பின்னர், அமெரிக்கா, இவ் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என இரு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் டொனால்ட் தெரிவித்துள்ளார்.

நோர்வே தரப்பினரின் அனுசரணைப் பணிக்கு அமெரிக்கா பூரண ஆதரவை வழங்கும்.

மேலும், இலங்கையின் சமாதானம் பற்றி தற்போதுள்ள நிலை தொடருமாயின் உதவி வழங்கும் நாடுகள் தமது உதவியை வழங்க முடியாது போகலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டொனால்ட், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, சமாதானச் செயலக அதிகாரிகள் போன்றோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினார்.

நேற்று முன்தினம் இந்தியா சென்றுள்ள இவர், இலங்கை சமாதானம் தொடர்பாக இந்தியாவின் பங்களிப்புப் பற்றி தெரிவிக்கையில்,

இது இரு இறைமையுள்ள நாடுகள் தொடர்பானது. இரு நாடுகளும் இதுபற்றிக் கலந்துரையாடி ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும் என்றார்.

இலங்கையில் சமாதானம் நிலவினால் பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளையும் அபிவிருத்தியையும் இலங்கை ஈட்டமுடியும்.

அமெரிக்கத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் போட்டியாளர் வெற்றி பெற்றாலும் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் பிரதி வெளிநாட்டுக் கொள்கையில் பெரிதான மாற்றங்கள் ஏற்படாது.

ஆனால், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ரிச்சட் ஆர்மிரேஜ், மேலும் பல உயர் அதிகாரிகளின் தனிப்பட்ட இலங்கை பற்றிய அக்கறைகள் பெறமுடியாதவையாகிவிடும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (6)

## 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு

# தாய்லாந்து சென்ற ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

தாய்லாந்தின் தலைநகர் பாங்ஹொக்கில் நடைபெற்ற வின்ஸ்ரெக் மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நாடு திரும்பினார்.

பாங்ஹொக்கில் 2 நாட்களாக நடைபெற்ற வின்ஸ்ரெக் மாநாட்டில் அங்கத்துவ நாடுகளுக்கு இடையில் போக்கு வரத்து, சுற்றுலா மற்றும் வர்த்தகத் தொடர்புகள் என்பன தொடர்பாக நெருக்கமான உறவுகளை வளர்ப்பது குறித்து ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துளளது.

தாய்லாந்தின் தலைநகரான பாங்ஹொக்கில் கடந்த 30 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெற்ற வின்ஸ் ரெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 29 ஆம் திகதி தாய்லாந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

## நல்லொழுக்கத் தினப் போட்டிகள்

சர்வதேச நல்லொழுக்கத் தினததை முன்னிட்டு எதிர்வரும ஒக்டோபர் மாதத்தில் போரூட் நிறுவறுனத்தினால் மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தப்பட விருக்கின்றன.

மாணவரிடையே நல்லொழுக்கத்தை மேம்படுத்தும் முகமாக நடாத்தப்படவிருக்கும் இப் போட்டிகள் 3 பிரிவுகளாக பேச்சு, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய துறைகளில் நடாத்தப்படவுள்ளதாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கேட்டுள்ளார். (உ-122)



சாவகச்சேரி லிகோரியார் ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த யாழ்.ஆயர் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களை பங்குத் தந்தையும், பங்கு மக்களும் அழைத்துச் செல்லும் காட்சி.

## மாணவர் வரவு குறைவைக் காரணமாக்கி

# பாடசாலைகளை மூடுவது தவிர்க்கப்படவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது



மாணவர்களின் வரவு குறைவாகவுள்ளது என்பதைக் காரணமாகக் காட்டி பாடசாலைகள் மூடப்பட்டு வருவது தவிர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

பிரதேச செயலகத்தின் நிர்வாக அதிகாரி எஸ். இராசதுரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அங்கு தொடந்தும் குறிப்பிடுகையில்,

யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் தற்போது மாணவர்களின் வருகை பெரிதளவில் குறைந்து வருவது உண்மையான நிலைப்பாடு.

ஆயினும் இந் நிலையினைச் சுட்டிக்காட்டி மூடுவது நல்லதல்ல. நாம் எமது எதிர்காலச் சந்ததியை மையமாகக்கொண்டே எமது தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.

இயங்குகின்ற பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாக இருக்கின்றது என்பதைக் காரணமாகக் கொண்டு, பாடசாலைகள் மூடப்படுவதை அதிகாரிகள் தவிர்த்துக்கொள்ளல் வேண்டியது மிக முக்கியமாகும். எமது இனத்தின் கல்விச் செல்வத்தைப் பூடோடு அழித்துவிட முனையும் சக்திகளுக்கு எதிராக இக் காலகட்டத்தில் நாம் விழிப்பாக இருக்கவேண்டும் என்றார்.

அத்துடன், இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேசசெயலர் பிரிவிலுள்ள வாதரவத்தை கிராமத்துக்கு பஸ் போக்குவரத்துச் சேவை ஒன்றினை அவசியமாக நடாத்தும் படி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அங்கு பிரசன்னமாகியிருந்த வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை அதிகாரிகளிடம் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

எனினும், வடபிராந்தியப் போக்குவரத்துச் சேவையில் போதிய பஸ் வண்டிகள் இல்லாமையினால் பொதுமக்களின் அந்தியாவசியமான போக்குவரத்துத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் இருப்பதாக போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, விவசாயம், வீதிகள் உள்ளிட்ட மற்றும் பல் வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (16)

## திருக்குறள் வினாடி - வினா போட்டிகள்

(புத்தூர்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் நினைவாக யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவரிடையே நடாத்தப்படவிருக்கும் திருக்குறள் வினாடி - வினா போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை சார்பாக தரம் 12,13 வகுப்புக்களைச் சேர்ந்த மூவர் கொண்ட குழு பங்குபற்றும் இப் போட்டி, ஒழிபியலில் முதல் 10 அதிகாரங்களை உள்ளடக்கியதாக அமையும்.

இதற்கான விண்ணப்ப முடிவு தினம் இம் மாதம் 10 ஆம் திகதியாகும்.

இப்போட்டிகளின் முதற்கட்டம் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியும், இறுதிக் கட்டம் மூன்றாம் திகதியும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கும், அதிகூடிய புள்ளியைப்பெறும் மூன்று மாணவர்களுக்கும் செப்ரெம்பர் 10 ஆம் திகதி இடம்பெறும நிறுவுநர் விழாவில் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுமென கல்லூரி அதிபர் வி.ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.



திருவிழாத் திருப்பலியினை ஒப்புக்கொடுக்கும் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அடிகளாரையும், அருட்தந்தையர்களான அருட் செல்வன் ரவிச்சந்திரன் அவர்களையும் படத்தில் காணலாம்.

## யாழ்.மாவட்டத்தில் இயங்கி வரும்

# நலன்புரி நிலையங்களில் அண்மைக்காலமாக குடும்பச் ச்சரவுகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கி வரும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற பெரும்பாலான குடும்பங்கள் மத்தியில் குடும்பச் சச்சரவுகள், வீட்டு வன்முறைச் சம்பவங்கள் என்பன அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

இதன் காரணமாக மேற்படி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர், சிறுமிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் அச்ச நிலைமைகள் தோன்றியுள்ளதுடன், தமது கல்வியில் நாட்டம் செலுத்த முடியாதபடி வீட்டுச் சூழல் மற்றும் புறச்சூழல்கள் அமைந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அத்துடன், இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தரங்கள் மேம்படுத்தப்படாமல் இருப்பதால், அங்கு நிலவுகின்ற சுகாதார, குடிநீர், மலசலகூடம் மற்றும் இருப்பிடப் பிரச்சினைகள் மூலம் பல பிரச்சினைகள் உருவெடுத்துவருகின்றன.

இது இவ்வாறு இருக்க இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களில் இளவயதில் மணம் முடித்த இளம் தம்பதிகள் மத்தியில் பலமான விரத்தி, குடும்பத்தை வழிநடத்துவதற்கான வருமானம் போன்றவை போதாமை காரணமாக மணமுறிவுச் சம்பவங்களும் ஏற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (16)

## விலை அதிகரிப்பு

(கொழும்பு)

செல்காஸ் சிலிண்டரின் விலை நேற்று நள்ளிரவு முதல் 70 ரூபாவால் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இதுவரை காலமும் 620 ரூபாவிற்கு விற்பனையான 12.5 கிலோக்கிராம் எடையுள்ள செல் காஸ்சிலிண்டர் ஒன்றின் விலை 690 ரூபாவாக அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

செல்காஸ் இறக்குமதிக்காக அரசு இதுவரைகாலமும் வழங்கி வந்த உதவி நிவாரணங்களை நிறுத்தியிருப்பதாலேயே இதனது விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,64)



புதித்தாகக் கட்டப்பட்ட ஆலயப்பீடத்தினை குருமுதல்வர் நீக்கிலாஸ் அடிகளார் மந்தரிக்கும் காட்சி.

# கல்விப் பொதுத் தராதர (சா/த)
# மாதிரிப் பரீட்சை - 2004
## General Certificate of Examination (Ord. Level)
## Model Examination - 2004

ஆக்கம் :
திருமதி. துளசி நவரத்தினராசா (ஆசிரியை)
(பயிற்றப்பட்ட விசேட கணிதம், கலைப்பட்டதாரி)
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

**கணிதம் பகுதி I**

**நேரம்: 1 மணித்தியாலம்**


**எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.**
**(செய்கைகள் காட்டப்பட வேண்டும்)**

1. கூட்டுக : 7.6 + 76.3

2. சுருக்குக : 16 x (-1)

3. 4kg அரிசியின் விலை ரூபா 128 எனில், 1½ kg அரிசியின் விலையைக் காண்க.

4. உருவில் $x$ இன் பெறுமானத்தைக் காண்க.





5. $P=\{1,3,5,7,9\}$ எனில், n (P) ஐக் காண்க.

6. கஜன் பொருளொன்றை ரூ. 750 இற்கு வாங்கி ரூ. 775 இற்கு விற்றால், அவனுக்குக் கிடைக்கும் இலாபம் எவ்வளவு?


7. $\frac{x}{2} = 5$ எனில், $x$ இன் பெறுமானத்தைக் காண்க.

8. காரணிகளைக் காண்க $3x+6$

9. தரப்பட்ட உருவின் சுற்றளவைக் காண்க.




10. உருவில் $x$ இன் பெறுமானத்தைக் காண்க.




$10 \times 1 = 10$ புள்ளிகள்

| |
|---|
| |
| 10 புள்ளிகள் |

11. 5% ஆண்டு வட்டிப்படி, ரூபா 5000 இற்கு 2½ வருடங்களில் பெறப்படும் எளிய வட்டி யாது?

12. $a = b + cd$ என்பதில் c ஐ எழுவாயாக மாற்றுக.

13. சுருக்குக : $\frac{7}{y-1} - \frac{2}{1-y}$

14. 2, 5, 8, 11, ...... எனும் எண் தொடரில்,


1) பொது வித்தியாசம்

2) முதலுறுப்பு என்பவற்றைக் காண்க.

15. சுருக்கி எளிய சேடாகத் தருக?

$\sqrt{12} + \sqrt{27}$

16. B யிலிருந்து பார்க்கும்போது A இன் திசைகோள் 210° எனில், A யிலிருந்து B இன் திசைகோள் யாது?





17. 18, 20, 26, 20, 06, 12, 04, 10, 10, 10 எனும் பரம்பலின்

1) ஆகாரம் 2) இடையம் என்பவற்றைக் காணக.


18. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல்,

$\log_2 8 + \log_2 128$ இன் பெறுமானத்தைக் காண்க.

19. உருவில் $B\hat{A}C = 35^0$ , $B\hat{C}D = 100^0$ எனில், $x$ இன் பெறுமானத்தைக் காண்க?




20. அருகிலுள்ள உருவில் a, m இன் பெறுமானங்களைக் காண்க.




$10 \times 2 = 20$ புள்ளிகள்

21. $2x+3y=7$ , $3x+2y=8$ என்பவற்றைத் தீர்க்காமல் $(x+y)$ இன் பெறுமானத்தைக் காண்க.

22. $y = 3x+5$ எனும் நேர்கோட்டின்,

1. படித்திறன் யாது? 2. வெட்டுத்துண்டு யாது?


3. தரப்பட்ட நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும், வெட்டுத்துண்டு 2ஐக் கொண்டதுமான நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

23. $1011_{\text{இரண்டு}} + 302_{\text{நான்கு}}$ ஐ சுருக்கி விடையை அடி நான்கில் தருக.

24. $3x - 2 > 0$ எனும் சமனிலியைத் தீர்த்து எண்கோட்டில் குறித்துக் காட்டுக.

25. AB, CD என்பன வட்டங்களின் பொதுத் தொடலிகளாகும்.


1) $A\hat{B}C$ இன் பருமனைக் காண்க.





26. ஒருவன் 7% பங்கு இலாபம் தரும் ரூ.10 பங்குகளை ரூ. 12 வீதம் வாங்குவதற்கு ரூ.2400 ஐ முதலீடு செய்தான்.

(i) அவன் வாங்கிய பங்குகள் எத்தனை?
(ii) அப்பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
(iii) அவனது வருட வருமானம் யாது?


27. உருவில் O வட்டத்தின் மையமாகும். CD இன் நீளம் யாது?





28. படத்தில் நிறம் தீட்டிய 7 cm ஆரையுடைய ஆரைச்சிறை வெட்டி அகற்றப்படின் எஞ்சிய பகுதியின் பரப்பளவைக் காண்க.




29. முக்கோணி ABC இல் $CX \perp AB$ ஆகும். $AB = 8cm, BC = AC = 5cm$ எனில் CX இன் நீளத்தைக் காண்க.




30. இம்மூன்று கோடுகளில் இருந்தும் சம தூரத்தில் அமையும் புள்ளியைக் காண்பதற்கான பரும்படிப்படத்தை வரைக.



(10x 3 = 30 புள்ளிகள்)

| |
|---|
| |
| 10 புள்ளிகள் |

**நாளை கணிதம் பகுதி - I இற்கான விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**இல:16 ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

- இவ்வினாத்தாளில் 22 வினாக்கள் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- பின்வரும் பந்தியை வாசித்து விடை எழுதுக.

அமெரிக்காவின் பழங்குடி மக்கள் பதினோராம் நூற்றாண்டிலேயே இறப்பரை அறிந்திருக்கிறார்கள். பதினோராம், பன்னிரண்டாம் நூறறாணடைச் சேர்ந்த இறப்பர் பொருட்கள் இன்றைய புதைபொருள் ஆய்வாளருக்கு மிகவும் முக்கிய சான்றாக விளங்கு கின்றன.

அமெரிக்க மக்களிடமிருந்தே ஐரோப்பிய மக்கள் இறப்பரைப் பற்றித் தெரிந்து கொண்டனர். ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தோராம் ஆண்டில் "சார்ள்ஸ் குட் இயர்" என்ற அமெரிக்கர், இறப்பரை அன்றாட உபயோகத்திற்குப் பயன்படுத்துவது பற்றிச் சிந்தித்தார். அவரது நோக்கம் இலேசான வெப்பம் இறப்பரைத் தாக்கத்தினாலும் இறப்பர் உருகி விடுவதைத் தடுத்து அதன் கெட்டித தன்மையை இழக்காமல் இருக்கச் செய்ய முடியுமா என்பதைக் கண்டறிவது தான். தனது முயற்சியில் அவர் வெற்றி யும் பெற்றார்.

**(01) கீழே தரப்படும் கருத்துக்களுடன் பந்தியில் உள்ள கருத்தும் ஒத்துப்போனால் 'R' எனவும் ஒத்துப்போகவில்லை எனின 'W' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(i) இறப்பர் பற்றிய அறிவு பதினோராம் நூற்றாண்டிலேயே அமெரிக்க பழங்குடி மக்களிடமிருந்தீது. (.............)

(ii) ஐரோப்பிய மக்களிடம் இருந்து அமெரிக்க மக்கள் இறப்பர் பற்றிக் கேட்டறிந்து கொண்டனர். (..............)

(iii) இறப்பர் பற்றிய ஆராய்ச்சியில் சார்ள்ஸ் குட் இயர் என்பவர் ஈடுபட்டார். (...............)

**(02) பின்வரும் சொற்களின் கருத்தை எழுதுக.**

(i) "புதைபொருள் ஆய்வாளர்" (.......................................)

(ii) "கெட்டித்தனம்" (.......................................)

**(03) பின்வரும் சொற்களின் ஒத்தசொல் தருக.**

(i) சான்று (.................) (ii) உபயோகம் (.......................)

(iii) நோக்கம் (.................) (iv) முயற்சி (.......................)

**(04) கீழே உள்ள கூட்டினுள் தரப்பட்டுள்ளவற்றைக் கொண்டு விடை எழுதுக.**

| |
|---|
| விகடம், கணக்கு வழக்கு, நெறு நெறு, பெரிய பெரிய, சோவென, காசினி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு, பால்போல் நிலவு, கண்ணன் வந்தான் |

(i) அடுக்குத் தொடர் (.......................................)

(ii) இணைமொழி (.......................................)

(iii) இரட்டைக்கிழவி (.......................................)

(iv) பழமொழி ஒன்று (.......................................)

(v) உவமைத் தொடர் ஒன்று (.......................................)

| |
|---|
| **புடோல், கத்தரி, தென்னை, பூசணி, மிளகாய், பனை, அறுகு, தேயிலை, இறப்பர் மரம்** |

**(05). மேலே தரப்பட்ட தாவரங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(i) படர்ந்து வளருபவை எவை? (.......................................)

(ii) செடியினத்தைச் சேர்ந்தவை எவை? (.......................................)

(iii) இலங்கையின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிர் இனங்கள் எவை? (.......................................)

(iv) யாழ்ப்பாணத்தின் கற்பகதரு என அழைக்கப்படுவது எது? (.......................................)

(v) எண்ணெய் உற்பத்தியில் பயன்படுவதும் பெரும்பாலும் கரையோரங்களில் நன்றாக வளர்வதுமான மரம் எது? (.......................................)

**(06). சுருக்கமான விடை தருக.**

(i) தேயிலை என்பதன் ஆங்கிலப் பதம் என்ன? (..........)

- இலங்கையில் தேயிலை வளரும் பிரதேசங்களில் அமைந்த நான்கு நகரங்களை எழுதுக.

(ii) (.........................) (iii) (.........................)

(iv) (.........................) (v) (.........................)

- உலகின் தேயிலை பயிரிடப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக.

(vi) (.........................) (vii) (.........................)

(viii) (.........................)

(ix) இலங்கைக்கு தேயிலையை அறிமுகப்படுத்திய நாட்டவர் யார்? (.........................)

(x) இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது. (.........................)

(xi) இலங்கையில் இருந்து தேயிலையை வாங்கும் ஒரு நாட்டின் பெயரை எழுதுக. (.........................)

**(07).**

(i) இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் யாது? (.........................)

(ii) இறப்பரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் 02 பொருட்கள் தருக?

(.........................) (.........................)


**(08). கீழ்வரும் படத்தில் காணப்படும் இரண்டு தவறுகளை எழுதுக.**




(i) (.........................)

(ii) (.........................)

**(09). கீழ்வரும் படத்தை அவதானித்து விடை எழுதுக.**





(i) 'கிளே'யால் ஒட்டிய நிலையில் நீரை புனலினுள் ஊற்றத் தொடர்ந்து செல்லுமா? (.........................)

(ii) நன்கு 'கிளே' பூசி ஒட்டிய நிலையில் நீரை புனலினுள் ஊற்ற தொடர்ந்து போத்தலினுள் செல்லுமா? (.........................)

(iii) வினா (ii) இல் உமது விடைக்கான காரணம் என்ன? (.........................)


**(10). இப்படத்தை நன்கு அவதானித்து விடை எழுதுக.**




(i) அருகேயுள்ள படத்தில் காட்டியவாறு ஒழுங்கு செய்த போது முதலில் விழும் குண்டூசி எது (.......)

(ii) இறுதியாக விடும் குண்டூசி எது?(.......)

**(11). உமது வகுப்பில் மின்காந்தமொ[...] தல் பற்றி நீர் கற்றிருக்கின்றீர். அத்தகைய[...] தத்தின் படம் கீழே தரப்பட்டுள்ளது.**




இவ் வரிப்பட[...] என்னும் எ[...] குறிக்கப்பட[...] பெயர்களை[...]

(i)(1) (.........................)

(ii)(2) (.........................)

(iii)(3) (.........................)

**(12). கீழ்வரும் செயற்பாடுகளுக்கான [...] விளக்கி எழுதுக.**

(i) சீமெந்துத் தரையில் ஊற்றப்பட்ட தண[...] வதற்கு பொலித்தீன் பைகளைப் பயன்படு[...] னையே பயன்படுத்துகின்றனர்.

(.......................................)

(ii) சமையல் வேலைக்குப் பயன்படுத்தப்ப[...] கரண்டிக்கு மரப்பிடி போடப்பட்டுள்ளது.

(.......................................)

**(13) ஒரு புத்தகக் கடையில் 5 மாணவ[...] செய்த பயிற்சிப் புத்தகங்களின் விபர[...]**

| மாணவர்கள் | புத்தகங்க[...] |
|---|---|
| A | தமிழ், ஆங்கிலம், |
| B | சமூகக்கல்வி, ஆங்[...] |
| C | ஆங்கிலம் |
| D | தமிழ், சமூகக்கல்[...] |
| E | சமூகக்கல்வி, சம[...] |

(i) கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் தெ[...] சிப் புத்தகம்.

(1) தமிழ் (2) கணிதம் (3) ஆங்கில[...]

(ii) குறைந்த எண்ணிக்கையான மாணவர்க[...] பயிற்சிப் புத்தகம்.

(1) தமிழ் (2) கணிதம் (3) ஆங்கிலம் [...]

(iii) ஆங்கிலத்தைத் தெரிவு செய்த மாண[...]

(1) 1 (2) 2 (3) 3

(iv) ஒரே ஒரு மாணவனால் மட்டும் தெரிவு செ[...] சிப் புத்தகமும் மாணவனும் முறையே

(1) சமயம் - A (2) கணிதம் -B (3) B- சம[...]

(v) ஆங்கிலத்தைத் தெரிவு செய்யாத மாண[...] கல்வியைத் தெரிவு செய்த மாணவர் எண்[...] முறையே

(1) D,3 (2) D,4 (3) 4, C

(vi) தமிழைத் தெரிவு செய்தோர்

(1) B, C (2) A,D (3) C, D

(vii) புத்தகக் கடை என்பதன் ஆங்கிலப் ப[...]

(1) Book Shop (2) Book Stop (3) Book Cen[...]

(viii) சமூகக்கல்வி, ஆங்கிலம் என்ற இரு [...] தெரிவு செய்த மாணவர்களின் எண்ணிக்[...]

(1) 1 (2) 2 (3) 3

(ix) C என்ற மாணவன் தனது புத்தகத்தை இர[...] வேண்டி ஏற்படின் அவனிடம் இரவல் கேட்கக் கூடி[...]

(1) A (2) D (3) E

கள் எவை? (..........................................)

ாணத்தின் கற்பகதரு என அழைக்கப்படுவது எது?

(..........................................)

ய் உற்பத்தியில் பயன்படுவதும் பெரும்பாலும்
ாரங்களில் நன்றாக வளர்வதுமான மரம் எது?

(..........................................)

**கமான விடை தருக.**

லை என்பதன் ஆங்கிலப் பதம் என்ன? (..........)

கையில் தேயிலை வளரும் பிரதேசங்களில்
நான்கு நகரங்களை எழுதுக.

....................) (iii) (..........................)

....................) (v) (..........................)

கின் தேயிலை பயிரிடப்படும் நாடுகளின் பெயர்
எழுதுக.

....................) (vii) (..........................)

.........................)

கைக்கு தேயிலையை அறிமுகப்படுத்திய
வர் யார்? (..........................)

கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே
ந்துள்ளது. (..........................)

கையில் இருந்து தேயிலையை வாங்கும் ஒரு
ன் பெயரை எழுதுக. (..........................)

கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையும் அமைந்
இடம் யாது? (..........................)

பரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் 02
ட்கள் தருக?

....................) (..........................)

**ரும் படத்தில் காணப்படும் இரண்டு தவறுகளை
க.**

**ன்ணாடிக் கோல்** (i) (..........................................)

**— போத்தல்**

(ii) (..........................................)

**நீர்**

**ரும் படத்தை அவதானித்து விடை எழுதுக.**

**— புனல்**
**— கிளே**
**— நீர்**
**— போத்தல்**

(i) 'கிளே'யால் ஒட்டிய நிலையில் நீரை புனலினுள் ஊற்றத் தொடர்ந்து செல்லுமா?

(..........................................)

(ii) நன்கு 'கிளே' பூசி ஒட்டிய நிலையில் நீரை புனலினுள் ஊற்ற தொடர்ந்து போத்தலினுள் செல்லுமா?

(..........................................)

i) இல் உமது விடைக்கான காரணம் என்ன?

..........................................)

**த்தை நன்கு அவதானித்து விடை எழுதுக.**

**கக் கோல்**





**மெழுகு**
**குண்டூசி**
**ங்கி**

(i) அருகேயுள்ள படத்தில் காட்டியவாறு ஒழுங்கு செய்து போது முதலில் விழும் குண்டுசி எது (.......)

யாக விடும் குண்டுசி எது?(.......)

**(11). உமது வகுப்பில் மின்காந்தமொன்றைத் தயாரித்தல் பற்றி நீர் கற்றிருக்கின்றீர். அத்தகைய ஒரு மின்காந்தத்தின் படம் கீழே தரப்பட்டுள்ளது.**




இவ்வரிப்படத்தில் 1, 2, 3, என்னும் எண்களால் குறிக்கப்படும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i)(1) (..........................................)
(ii)(2) (..........................................)
(iii)(3) (..........................................)

**(12). கீழ்வரும் செயற்பாடுகளுக்கான காரணத்தை விளக்கி எழுதுக.**

(i) சீமெந்துத் தரையில் ஊற்றப்பட்ட தண்ணீரை அகற்றுவதற்கு பொலித்தீன் பைகளைப் பயன்படுத்தாது சாக்கினையே பயன்படுத்துகின்றனர்.

(..........................................)

(ii) சமையல் வேலைக்குப் பயன்படுத்தப்படும் உலோகக் கரண்டிக்கு மரப்பிடி போடப்பட்டுள்ளது.

(..........................................)

**(13) ஒரு புத்தகக் கடையில் 5 மாணவர்கள் தெரிவு செய்த பயிற்சிப் புத்தகங்களின் விபரம் வருமாறு.**

| மாணவர்கள் | புத்தகங்கள் |
|---|---|
| A | தமிழ், ஆங்கிலம், சமயம் |
| B | சமூகக்கல்வி, ஆங்கிலம், கணிதம் |
| C | ஆங்கிலம் |
| D | தமிழ், சமூகக்கல்வி |
| E | சமூகக்கல்வி, சமயம், ஆங்கிலம் |

(i) கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்த பயிற்சிப் புத்தகம்.

(1) தமிழ் (2) கணிதம் (3) ஆங்கிலம் (4) சமயம்

(ii) குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்த பயிற்சிப் புத்தகம்.

(1) தமிழ் (2) கணிதம் (3) ஆங்கிலம் (4) சமூகக்கல்வி

(iii) ஆங்கிலத்தைத் தெரிவு செய்த மாணவர் எண்ணிக்கை

(1) 1 (2) 2 (3) 3 (4) 4

(iv) ஒரே ஒரு மாணவனால் மட்டும் தெரிவு செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகமும் மாணவனும் முறையே

(1) சமயம் - **A** (2) கணிதம் -**B** (3) **B**- சமயம் (4)**B**- கணிதம்

(v) ஆங்கிலத்தைத் தெரிவு செய்யாத மாணவனும் சமூகக் கல்வியைத் தெரிவு செய்த மாணவர் எண்ணிக்கையும் முறையே

(1) **D, 3** (2) **D,4** (3) **4, C** (4)**D, C**

(vi) தமிழைத் தெரிவு செய்தோர்

(1) **B, C** (2) **A,D** (3) **C, D** (4)**A, D,E**

(vii) புத்தகக் கடை என்பதன் ஆங்கிலப் பதம்

(1) **Book Shop** (2) **Book Stop** (3) **Book Centre** (4)**Book Depo**

(viii) சமூகக்கல்வி, ஆங்கிலம் என்ற இரு புத்தகங்களையும் தெரிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை

(1) **1** (2) **2** (3) **3** (4)**4**

(ix) C என்ற மாணவன் தனது புத்தகத்தை இரவல் கொடுக்க வேண்டி ஏற்படின் அவனிடம் இரவல் கேட்கக் கூடிய மாணவன் யார்?

(1) **A** (2) **D** (3) **E** (4) **B**

(x) D இற்கு இரவல் கொடுக்கக் கூடியவர்களில் மிகவும் பொருத்தமானவர்கள்

(1) **A, E** (2) **B,A** (3) **C,B** (4) **E,C**

**(14) மாதவன் தான் நின்ற இடத்தில் இருந்து வடக்கு நோக்கி 10 m தூரம் நடந்து பின் மேற்கு நோக்கி 5 m தூரம் நடந்த பின் தெற்கு நோக்கி 10 m தூரம் நடந்து சென்றார்.**

(i) மாதவன் தான் நடக்க ஆரம்பித்த இடத்தில் இருந்து தற்போது எத்திசையில் உள்ளார். (...........)

(ii) மாதவன் தான் நடக்க ஆரம்பித்த இடத்தில் இருந்து தற்போது எவ்வளவு தூரத்தில் உள்ளார். (...........)

**(15) கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களை அவதானிக்குக.**

| 0.2, ½, 5, 3¾, 36, 49 | இவற்றில் இருந்து பின்வருவனவற்றுக்கு உதாரணம் தருக.

(i) இரட்டை எண்ணாகவும், தசம எண்ணாகவும் உடைய எண் (......)

(ii) ஒற்றை எண்ணாகவும் சதுர எண்ணாகவும் உடைய எண் (.......)

(iii) கலப்புப் பின்ன எண் (......)

**(16) கூட்டுக்குள் தரப்பட்டுள்ள இயல்புகளைப் பொருத்தமான திண்ம உருவின் அருகே எழுதுக.**

6 முகம், 12 விளிம்பு, 6 உச்சி, 6 விளிம்பு, 4 முகம், 9 விளிம்பு

(i) கனவுரு (ii) நான்முகி (iii) அரியம்

**(17)** நந்து பழக்கடை வைக்க விரும்பினான். சுந்து பழக் கடையை விட பலசரக்குக்கடையை வைக்க விரும்பினான். பிந்து பழக்கடை, பலசரக்குக்கடையிலும் பார்க்க தளபாடக் கடையை வைக்க விரும்பினான். சந்துவும், பிந்துவும் வைக்க விரும்பாத தொழில் முயற்சி என்ன? (.............)

**(18) பின்வருவனவற்றை சரியாக குறியீடுகளுடன் எழுதுக.**

(i) 600 கிராம் (.......) (ii) 300 மில்லி லீற்றர் (.......)

(iii) 100 சதம மீற்றர் (........) (iv) 12 கிலோ கிராம் (........)

(v) 100 செக்கன் (........) (vi) 10 மிலலி கிராம் (........)

**(19)** மாதாந்த சேமிப்புப் பழக்கம் உடைய ரமணன் மாதம் மாதம் ரூபா 250 பணத்தை வங்கியில் இட்டு வந்தான். அவன் 2002ம் ஆண்டு ஆவணி மாதம் தனது சேமிப்புப் பழக்கத்தை ஆரம்பித்தான் எனின், 2004ஆம் ஆண்டு 4ம் மாத முடிவில் அவனது கணக்கில் எவ்வளவு பணம் இருக்கும்?

**(20)** ஒரு கணித்தல் பொறி தன்னுள் வழங்கப்படும் எண்ணை இரட்டிப்பாக்கித் தரும். இந்தக் கருவியில் ஆரம்பத்தில் 5 என்னும் இலக்கம் சேர்க்கப்பட்டு வரும் விடைகள் தொடர்ந்து 6 தடவை இரட்டிப்பாகும் வண்ணம் கட்டளை இடப்பட்டது. இக் கட்டளைப்படி செயற்பட்டால் 5 என்னும் எண் இப்போது எத்தனையாக மாறி இருக்கும்?

**(21)** ஒரு தொழிலாளி தனது வயலின் ½ பகுதியை முதல் நாளும் மிகுதியின் அரைப் பகுதியை இரண்டாம் நாளும் பண்படுத்தினான். 3ம் நாள் மிகுதியின் அரைப் பகுதியைப் பண்படுத்தினான். அவனது வயல் காணியின் அளவு 120 ஏக்கர் ஏனின் இன்னும் பண்படுத்த எத்தனை ஏக்கர் நிலப் பரப்பளவு உள்ளது?

**(22)** '*தாவரங்கள் அளவுக்கு அதிகமாக வெட்டுவோமாயின*' என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

(i) (..........................................)

(ii) (..........................................)

(iii) (..........................................)

(iv) (..........................................)

(v) (..........................................)

(vi) (..........................................)


# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**இல:15** **ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

**✤எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**♦கீழே உள்ள படத்தை நன்கு அவதானித்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய செயற்படுக.**



01. மேசையின் மீதுள்ள ஐஸ்கிறீம் கப்பின் அருகே 'I' என எழுதுக

02. மேசையில் உள்ள ரொபிகளின் எண்ணிக்கையை மேசையின் நிருதி மூலையில் எழுதுக?


03. மேசையில் வைக்கப்பட்டுள்ள "கரட்" இன் அருகே "Carrot" என எழுதுக?

04. இப்படத்தில் உள்ள மிகப் பெரிய குறைபாடு/ தவறு என்ன?
(........................................................................................)

05. ஒரு வாழைப்பழம் ரூ. 4.00 எனின் இங்குள்ள வாழைப்பழத்தை வாங்க எவ்வளவு பணம் தேவை?
(........................................................................................)

**♦மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அருகேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

06. கீழ்வரும் உருக்களில் வித்தியாசமான உரு




(1) (2) (3) (4)

07. பொருட்கள் வெப்பத்தினால் விரிவடையும் பண்புடையவை இந்த இயல்பை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த வாழ்வில் பல்வேறு கருமங்கள் நடைபெறுகின்றன. கீழவரும் சந்தர்ப்பங்களில் வெப்பத்தின் விரிவு பயன்படுத்தப்படாத சந்தர்ப்பம் எது?
1) வண்டில் சில்லுக்கு வளையம் இடும்போது வளையத்தைச் சூடாக்கல்
2) ரயில் தண்டவாளங்களுக்கிடையே இடைவெளி விட்டிருத்தல்
3) மோதிரத்தை விரலில் இருந்து கழற்றுவதற்காக மோதிரத்தைச் சூடாக்கல்
4) சோடா மென்பானங்கள் போத்தலில் முழுமையாக நிரப்பப்படாது விடுதல்

08. விழா ஒன்றில் கலந்துகொண்ட பியதாச மயக்கமடைந்து விழ அவனை விழவிடாது அபூபக்கர் தாங்கிப் பிடித்தான். இதை அறிந்த பாலசுப்பிரமணியம் குளிர்நீருடன் பியதாசாவை நோக்கி வந்தார். ஸ்ரீபன், பியதாசவை தனது காரில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்.
1) அந்த விழாவில் கலந்து கொண்ட யாவரும் தமிழர் ஆவர்.
2) அந்த விழாவில் முஸ்லிம்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை
3) அந்த விழாவில் கலந்து கொண்டவர்கள் பியதாசாவின் உறவினர்கள்
4) அந்தவிழாவில் பல இன மக்களும் கலந்து கொண்டனர்


09. சுந்து, நந்து, பிந்து ஆகிய மூவரும் உயரமான ஆண்கள், சுதாமதி, காந்திமதி இருவரும் உயரம் குறைவான பெண்கள். சுதாமதி, பிந்து ஆகிய இருவரும் ஐஸ்கிறீம் உண்பதில்லை. இவர்களில் எவர் ஐஸ்கிறீம் உண்பவரும் உயரம் குறைவானவரும் ஆவர்.
1) சுதாமதி 2) காந்திமதி 3) சுந்து 4) நந்து

10. $\frac{250}{1000}$ என்னும் பகுதி நிழற்படுத்தப்பட்டுள்ள உரு



(1) (2) (3) (4)

11. "தானியங்கள், அரிசி, மண்ணெய்" என்பவற்றுக்குரிய அடங்கல் வரிப்படம்



(1) (2) (3) (4)

**♦கீழே உள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களின் கருத்துடன், ஒத்துப்போகும் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

12. மாணவர்கள் பரீட்சையில் **அக்கறை** காட்டினால் தான் சிறந்த பெறுபேற்றை அடையலாம்.
1) பராமரிப்பு 2) ஆர்வம் 3) கவலையீனம் 4) சரியாக

13. இந்த **யுத்தம்** எப்போது ஓய்வுக்கு வருமோ?
1) குத்துச்சண்டை 2) அமைதி 3) சமர் 4) வீரம்

14. பங்குனி மாதத்தில் ஒருநாள் **கடுமையான** வெய்யிலில் அகப்பட்ட நான் காய்ச்சலுக்கு உள்ளானேன்.
1) அகோரமான 2) மிதமான 3) நன்றான 4) குளிர்மையான

15. **காற்றுள்ள** போதே தூற்றிக்கொள்
1) காற்று வீசும் போது 2) காற்று மெதுவாக வீசும் போது
3) சமயம் சரியாக அமையும் போது 4) புயல் வேளையில்

16. சில விடயங்களைப் **பகிரங்கமாகப** பேசுதல் ஆபத்தை உண்டாக்கும்
1) அந்தரங்கம் 2) வெளிப்படை 3) உரத்து 4) நேரடியாக

**♦ கீழே சில சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றன. இதன்போது நீர் செய்யக்கூடிய மிகச் சரியான வழிமுறையைத் தெரிவு செய்க.**

17. நீர் வீதியால் பாடசாலை நோக்கி நடந்து சென்ற போது வீதியில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறி எல்லோரும் சிதறி ஓடுகின்றார்கள்.
இப்போது நீர் செய்யக் கூடியது,
1) அப்பொருள் உள்ள இடத்திற்குச் சென்று ஆராய்தல்
2) எல்லோருக்கும் நன்மை வேண்டி கடவுளை வழிபடுதல்
3) இவ்விடத்தில் நின்றவாறே குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவுக்குத் தகவல் கொடுத்தல்
4) எல்லோருடனும் சேர்ந்து ஓடல்

18. உமது வீட்டில் மின்சாரம் சென்று கொண்டிருந்த வயர் (கடத்தி) ஒன்று அறுந்து நிலத்தில் வீழந்துவிட்டது.
உடனடியாக நீர்,
1) ஓடிச்சென்று கடத்தியை எடுத்து இணைப்பீர்
2) அப்பா அம்மா எல்லோருக்கும் காட்டுவீர்
3) உடனடியாக பிரதான ஆழியை நிறுத்துவீர்
4) மின்சார அலுவலகத்திற்குத் தொலைபேசியில் அறிவிப்பீர்

19. உமது நண்பர் ஒருவர் பாடசாலை நேரத்தில் படம் பார்க்க வருமாறு கேட்கின்றார். நீர்,
1) அவருடன் சேர்ந்து போவீர்
2) பாடசாலைக்குப் போவீர்
3) அவருக்குப் புத்திமதி சொல்லி வழிப்படுத்துவீர்
4) அவரின் அப்பா அம்மாவிடம் சொல்வீர்

20. கண்ணாடியில் பார்க்கும்போது உருவம் மாறாதிருக்கக் கூடிய எழுத்து,
1) **க** 2) **த** 3) **ப**

21. **E-Mail** என்பது?
1) கணனி மூலம் அனுப்பப்படும் இ
2) அதிவேக கடிதங்கள்
3) பதிவுக் கடிதங்கள்
4) தபாலட்டை

22. இன்ரநெட் (**Internet**) எனப்படு
1) விருத்தியடைந்த நாடுகளினது கல
2) நெற் போடப்பட்ட கட்டடம்
3) மீன்பிடி வலை
4) விளையாட்டுப் பொருள்

23. நிமிடக் கம்பி மணிக்கம்பி பகல் மறுபடி எத்தனை மணிக்கு முந்தும்,
1) பி.ப. 1.00 மணிக்கு 2) பி.
2) 12.00 மணிக்கு 4) பி.

**♦ பொருத்தாமான தொடர்பை இனம் அமையப் பொருத்தமான விடையின் கீழ்க்**

24. A ⟶ Z, B ⟶ Y, C ⟶ X,
1) C ⟶ Y 2) A ⟶ W 3

25. AB, CD, EF, ___, ___
1) BC, DE 2) GH, IJ 3

26. AZ, BY, CX, ___, ___
1) DW, EV 2) BW, CE 3

27. $\frac{AB}{C}$, $\frac{BC}{D}$, $\frac{CD}{E}$, ___, ___
1) $\frac{AC}{D}$, $\frac{BD}{C}$ 2) $\frac{DE}{F}$, $\frac{EF}{G}$ 3)

**♦ கீழ்வரும் வினாக்கனின் ஆரம்பத்தில் நன்கு விபரிக்கின்ற விடையைத் தெரிந்து**

28. சிவதாசன் தன்னுடைய விருப்ப ஆவான்
1) சிவதாசன் ஒரு பைத்தியக்கார
2) சிவதாசன் பண்டிதன் ஆவான்
3) சிவதாசன் தன்போக்கில் நடப்

29. பிரதீபன் செய்தது மிகவும் பே
1) பிரதீபன் கீழ்த்தரமான செயலை
2) பிரதீபன் சிக்கலான செயலைச்
3) பிரதீபன் சித்தி பெறுவது கஸ்

30. பரீட்சையில் சித்தி பெறுவது காரியமல்ல.
1) பரீட்சையில் சித்தி பெறுவது
2) பரீட்சையில் சித்தி பெறுதல்
3) பரீட்சையில் சித்தி பெறுவது


**♦சரியான விடையைப் புள்ளிக்கோட்டில்**

31. இன்று திங்கட்கிழமை, நாளை சென்ற வெள்ளிக்கிழமை கண்ணன் நேற்று எனக் கூறினான். கண்ணன் வ பிறந்தான் எனவும், அவனின் பிறந்த எழுதுக.
1) நாள்

32. ஒரு வகுப்பில் 12 சிறுவர்கள் இ அவர்களை **A,B** எனும் இரு குழுக்க **A** யிலிருந்து ஒரு சிறுவன் குழு **B** இரு குழுக்களிலுமான எண்ணிக்கைகள குழு **B** யிலிருந்து ஒரு சிறுவன் குழு டால் குழு **A** யிலான எண்ணிக்கை கு கையின் இரு மடங்காக இருக்கும். கு சிறார்கள் இருக்கிறார்கள்.


.......................................

தி நிழற்படுத்தப்பட்டுள்ள உரு



(3) (4)

ரிசி, மண்ணெய்'' என்பவற்றுக்குரிய



(3) (4)

**களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களின்**
**ம் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க்**

ட்சையில் **அக்கறை** காட்டினால்
றை அடையலாம்.
ர்வம் 3) கவலையீனம் 4) சரியாக
பபோது ஓய்வுக்கு வருமோ?
அமைதி 3) சமர் 4) வீரம்
ஒருநாள் **கடுமையான** வெய்யிலில்
ச்சலுக்கு உள்ளானேன்.
தமான 3) நன்றான 4) குளிர்மையான
தே தூற்றிக்கொள்
து 2) காற்று மெதுவாக வீசும் போது
மையும் போது 4) புயல் வேளையில்
**பகிரங்கமாகப** பேசுதல் ஆபத்தை

வெளிப்படை 3) உரத்து 4) நேரடியாக
**கள் தரப்படுகின்றன. இதன்போது நீர்**
**ன வழிமுறையைத் தெரிவு செய்க.**
டசாலை நோக்கி நடந்து சென்ற
ன்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறி
கின்றார்கள்.
க் கூடியது,
ள்ள இடத்திற்குச் சென்று ஆராய்தல்
ன்மை வேண்டி கடவுளை வழிபடுதல்
வாறே குண்டு செயலிழக்கச் செய்யும்
ல் கொடுத்தல்.
சர்ந்து ஓடல்
மின்சாரம் சென்று கொண்டிருந்த வயர்
து நிலத்தில் வீழ்ந்துவிட்டது.

தியை எடுத்து இணைப்பீர்
ல்லோருக்கும் காட்டுவீர்
ான ஆழியை நிறுத்துவீர்
த்திற்குத் தொலைபேசியில் அறிவிப்பீர்
ஒருவர் பாடசாலை நேரத்தில் படம்
கின்றார். நீர்,
போவீர்
போவீர்
மதி சொல்லி வழிப்படுத்துவீர்
அம்மாவிடம் சொல்வீர்
ார்க்கும்போது உருவம் மாறாதிருக்கக்

1) க 2) த 3) ப 4) ட

**21.** **E-Mail** என்பது?
1) கணனி மூலம் அனுப்பப்படும் இலக்ரோனிக் கடிதங்கள்
2) அதிவேக கடிதங்கள்
3) பதிவுக் கடிதங்கள்
4) தபாலட்டை

**22.** இன்ரநெட் (**Internet**) எனப்படுவது?
1) விருத்தியடைந்த நாடுகளினது கணனி மூல தகவலமைப்பு
2) நெற் போடப்பட்ட கட்டடம்
3) மீன்பிடி வலை
4) விளையாட்டுப் பொருள்

**23.** நிமிடக் கம்பி மணிக்கம்பி பகல் 12 மணிக்கு முந்தியது. மறுபடி எத்தனை மணிக்கு முந்தும்,
1) பி.ப. 1.00 மணிக்கு 2) பி.ப. 1.05 மணிக்கு
2) 12.00 மணிக்கு 4) பி.ப. 2.00 மணிக்கு

♦ **பொருத்தாமான தொடர்பை இனம் கண்டு இடைவெளியில் அமையப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

**24.** A → Z, B → Y, C → X, D → W, E → ------
1) C → Y 2) A → W 3) P → Q 4) E → V

**25.** AB, CD, EF, ___, ___
1) BC, DE 2) GH, IJ 3) EF, GH 4) CE, IJ

**26.** AZ, BY, CX, ___, ___
1) DW, EV 2) BW, CE 3) DX, EV 4) EV, FV

**27.** $\frac{AB}{C}$, $\frac{BC}{D}$, $\frac{CD}{E}$, ____, ____
1) $\frac{AC}{D}$, $\frac{BD}{C}$ 2) $\frac{DE}{F}$, $\frac{EF}{G}$ 3) $\frac{EG}{F}$, $\frac{DE}{G}$ 4) $\frac{FG}{E}$, $\frac{GH}{I}$

♦ **கீழ்வரும் வினாக்களின் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தை நன்கு விபரிக்கின்ற விடையைத் தெரிந்து அதன் கீழ்க கோடிடுக.**

**28.** சிவதாசன் தன்னுடைய விருப்பப்படி வேலை செய்பவன் ஆவான்
1) சிவதாசன் ஒரு பைத்தியக்காரன்
2) சிவதாசன் பண்டிதன் ஆவான்
3) சிவதாசன் தன்போக்கில் நடப்பவன்

**29.** பிரதீபன் செய்தது மிகவும் மோசமான வேலையாகும்
1) பிரதீபன் கீழ்த்தரமான செயலைச் செய்தான்
2) பிரதீபன் சிக்கலான செயலைச் செய்தான்
3) பிரதீபன் சித்தி பெறுவது கஸ்டம்

**30.** பரீட்சையில் சித்தி பெறுவது அவ்வளவு இலேசான காரியமல்ல.
1) பரீட்சையில் சித்தி பெறுவது கூடாது
2) பரீட்சையில் சித்தி பெறுதல் பயம்
3) பரீட்சையில் சித்தி பெறுவது கஸ்டம்

♦**சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


**31.** இன்று திங்கட்கிழமை, நாளை மறுநாள் 16ம் திகதி, சென்ற வெள்ளிக்கிழமை கண்ணன் தனது பிறந்த தினம் நேற்று எனக் கூறினான். கண்ணன் வாரத்தின் எந்த நாளிற் பிறந்தான் எனவும், அவனின் பிறந்த திகதி எது எனவும் எழுதுக.
1) நாள் 2) திகதி

**32.** ஒரு வகுப்பில் 12 சிறுவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர் அவர்களை **A,B** எனும் இரு குழுக்களாகப் பிரித்தார். குழு **A** யிலிருந்து ஒரு சிறுவன் குழு **B** இற்று மாற்றப்பட்டால் இரு குழுக்களிலுமான எண்ணிக்கைகள் சமனாக அமையும். குழு **B** யிலிருந்து ஒரு சிறுவன் குழு **A** யிற்கு மாற்றப்பட்டால் குழு **A** யிலான எண்ணிக்கை குழு **B** யிலான எண்ணிக்கையின் இரு மடங்காக இருக்கும். குழு **A** யில் எத்தனை சிறார்கள் இருக்கிறார்கள்.

**33.** ஒவ்வொரு திங்கட்கிழமையும் பாடசாலையின் காலைக் கூட்டத்தில் மாணவர் தலைவன் ஒருவன் உரை நிகழ்த்துவது வழக்கம். கடைசித் திங்களன்று காலைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியவன் அஜித் ஆவான். அஜித் இன்னும் ஐந்து வாரங்களில் கூட்டத்தில் மீண்டும் உரை நிகழ்த்த வேண்டும். கடைசித் திங்கட்கிழமை யூன் 17 ஆம் திகதியாக இருந்தால் அடுத்து அவன் காலைக் கூட்டத்தில் உரையாற்ற வேண்டிய திகதி யாதாக இருக்கும்?

**34.** ஒரு கூட்டில் 4 மஞ்சள் வர்ணக் குருவிகளும் 6 நீல வர்ணக் குருவிகளும் சில பச்சை வர்ணக் குருவிகளும் இருந்தன. அங்கு இருந்த பச்சை வர்ணக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் வர்ணக் குருவிகளின் எண்ணிக்கையிலும் கூடுதலாக இருந்தது. ஆனால், அது நீலவர்ணக் குருவிகளின் எண்ணிக்கையிலும் குறைவாகவே காணப்பட்டது. கூட்டில் இருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

**35.**




பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் இருநிலைகள் அருகே காட்டப்பட்டிருக்கின்றன. இச்சதுர முகியில் கறுப்பு நிறம் பூசப்பட்ட பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது?

♦ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**36.** ஒரு பிச்சைக்காரன் தெருவோரத்தில் படுத்திருக்கிறான் இதற்குக் காரணம்
1) அவன் சுகவீனமுற்று இருத்தல் கூடும்
2) அது அவனுக்கு சௌகரியமான இடமாக இருத்தல் கூடும்

**37.** சிறு பிள்ளைகள் மூத்தோர் சொற்கேட்க வேண்டும். இதற்குக் காரணம்
1) சிறுபிள்ளைகள் நல்லவை தீயவை யாவை என அறிந்திராமை
2) மூத்தவர்கள் சிறுபிள்ளைகளிலும் வயது கூடியவர்களாக இருக்கின்றமை

**38.** வெள்ளம் ஏற்படும் போது வியாபாரிகள் பொருள்களின் விலைகளை உயர்த்துகின்றார்கள். இச்செயலுக்கு ஒப்பானது
1) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
2) எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்

**39.** தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதன் கருத்து
1) ஒருவர் தான் செய்த செயலின் பலனை அனுபவிப்பார்
2) முயற்சி திருவினையாக்கும் என்பதாகும்.

**40.** ஒரு காரியத்தைத் தொடர்ந்து முயற்சி செய்து வந்தால் பலன் கிடைக்கும் என்னும் பொருளில் அமைந்த பழமொழி
1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2) அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும்

**அன்பு மாணவர்களே இவ்வினாப் பத்திரத்திற்குரிய விடைகளை வலம்புரிக்கு அனுப்பத் தேவையில்லை**

**அடுத்த வினாத்தாள் புதன்கிழமை வெளிவரும்**

# ஆங்கிலமொழி திறனாய்வுப் போட்டிகள்

(31.07.2004 இல் வெளியானதன் தொடர்ச்சி)

**விசேட சித்தி(தரம் -4)**

என்.தனுஷிகா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தி, க.ஜேந்தினி-நாவற்குழி மகாவித்தி, க.நிஷானி-வரணி மகாவத்தி, எஸ்.ரூபகண்ணன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தி, ஜெ.கம்ஷனா- சாவக்சேரி மகளிர் கல்லூரி, ஞா.விதுர்ஷன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட, எம்.கஜிபா - உஷன் இராமநாதன் மகாவித்தி, கு.மீரா-கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி,ஜே.சங்கீர்த்தனன் - மிருசுவில் அ.த.க. பாட, ஜெ.எழில்யன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.

**விசேட சித்தி (தரம்-5)**

த.அபிநயா-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.

**திறமைச் சித்தி**

ஜே.ஜதுஷா-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி, தெ.தாட்சாயினி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ரி.துஜீவா-அல்லாரை அ.த.க.பாட, ந.கேகாயன் -சாவச்சேரி இந்து ஆரம்பப் பாட, மு.லக்ஷியா- மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தி.

**சித்தி**

சி.செந்தூர்குமரன்- கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தி, ஜெ.கஜீனா- நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.

**உரத்து வாசித்தல் (தரம்-5)**

**1ஆம்இடம் :-** கே.நளினி-அல்லாரை அ.த.க.பாட.
**2ஆம் இடம் :-** பா.ராகவி-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
**3ஆம்இடம்:-** க.பிரியங்கா-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.

**விசேட சித்த**

ம.கஜீபன்- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி,கே.சரண்யா-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.

**படங்கள் ஒழுங்கமைத்தல் (தரம்-4)**

**1ஆம் இடம் :-** ரி.வைத்திகன்-உஷன் இராமநாதன் மகாவித்தி.
**2ஆம் இடம் :-** க.அரவிந்தன்-நாவற்குழி மகாவித்தி.
**3ஆம் இடம் :-** ஸ்ரீ.கிறிஸ்டி-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.

**விசேட சித்தி**

சி.கிருஷனா- சரசாலை ஸ்ரீகணேசாவித்தி, என்.கீர்த்திகா-சரசாலை ஸ்ரீகணேசா வித்தி.

**(தரம்-5)**

**1ஆம்இடம் :-** ச.ராம்ராஜ் சாவகசசேரி இந்து ஆரம்பப் பாட.
**2ஆம்இடம :-** பா.தீபகுகன்-சாவகசசேரி இந்து ஆரம்பப் பாட.
**3ஆம்இடம்:-** ப.ஜீவிதன்-கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தி.

**விசேட சித்தி**

எஸ்.நிதுஷா-கைதடி நுணாவில் அ.த.க பாட, ஸ்ரீ.கார்த்திகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, பா.துளசி-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி, எஸ்.லாவண்யா-கைதடி நுணாவில் அ.த.க.பாட.

**பாடல்-குழு**

**1ஆம்இடம் :-** சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.
**2ஆம்இடம் :-** மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தி.
**3ஆம்இடம் :-** கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தி,
**3ஆம்இடம் :-** நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.

**பாடல் ஒப்புவித்தல்**

**1ஆம்இடம் :-** சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
**2ஆம்இடம் :-** சாவகச்சேரி அ.த.க.பாட.
**2ஆம்இடம் :-**சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.
**3ஆம்இடம் :-** மீசாலை வீரசிங்கம் மகாவித்தி. (29)

## ஆக்கத்திறன் போட்டி

(இணுவில்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சமூகக் கல்வி ஆக்கத்திறன் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் தமது ஆக்கங்களை இராமநாதன் கல்லூரியில் அன்று காலை 8.30ற்கு சாட்சிப்படுத்துமாறும், 10.30ற்கு மதிப்பீடு செய்யப்பட்டு, சிறந்த ஆக்கங்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-122)

## ஆறு இடங்களில் கண்ணி அகற்றப்பட்டது

(மட்டக்களப்பு)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் போது மட்டக்களப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் 6 இடங்களில் பூரணமாகியுள்ளதாக சர்வதேச கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான 'மெக் இன்' வெளிக்களத் தொழில்நுட்ப முகாமையாளர் டானியல் ஏ றொலிவ்ஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து 'மெக்' நிறுவனம் கண்ணிவெடிகளை அப்புறப்படுத்தி வருகின்றது.

பாலையடி வெட்டை, கண்ணபுரம் கிழக்கு, வவுணதீவு, காயங்கேணியில் இரு இடங்கள் மற்றும் ஏறாவூர் விபுலானந்தர் வித்தியாலய வளாகம், புல்லுமலை வித்தியாலய வளாகம் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 300ற்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டு உரியவர்களிடம் அவை கையளிக்கப்பட்டுள்ளன. (உ-18,61)

## உடுவில் கோட்ட கணித,விஞ்ஞான அறிவுப்போட்டி முடிவுகள்

(இணுவில்)

உடுவில் கோட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட கணித, விஞ்ஞான அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதில் வெற்றியீட்டிய ஐவரின் பெயர்கள் முறையே வருமாறு,

| | | |
|---|---|---|
| **தரம்-6** | இ.நீதன் | - இணுவில் இந்துக் கல்லூரி. |
| | ம.சுபானு | - இராமநாதன் கல்லூரி. |
| | சி.வடிவேற்கரசன் | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | ர.சாம்பவி | - இராமநாதன் கல்லூரி. |
| | ஜீ.வருணன் | - இணுவில் இந்துக் கல்லூரி. |
| **தரம்-7** | க.நிரோஜன் | - தாவடி இ.த.க. பாடசாலை. |
| | ப.ஜெயதர்மினி | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | ஜெ.தட்சாயினி | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | பா.ரஜிதரன் | - இணுவில் இந்துக் கல்லூரி. |
| | க.கிசோர் | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| **தரம்-8** | பா.சாலினி | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | க.தேவசேனானி | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | பி.லக்சி | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | ந.கோகினி | - இணுவில் மத்திய கல்லூரி. |
| | வே.அஜந்தினி | - இணுவில் மத்திய கல்லூரி. |
| **தரம்-9** | த.வைஸ்ணா | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | உ.சகானா | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | ரா.தனுஜா | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | ம.குணதீபா | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | சி.நிரூபன் | - இணுவில் மத்திய கல்லூரி. |
| **தரம்-10** | அ.சர்மிகா | - இராமநாதன் கல்லூரி. |
| | பால்ராஜ்கிரிபரன் | - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி. |
| | சி.துஷ்யந்தி | - இராமநாதன் கல்லூரி. |
| | ச.சுஜிதா | - இராமநாதன் கல்லூரி. |
| | வே.வித்தியா | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| **தரம்-11** | பா.கோபி | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | பா.கல்பனா | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | இ.அஜித்தா | - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. |
| | சி.கார்த்திகா | - உடுவில் மகளிர் கல்லூரி. |
| | கு.கீர்த்தனா | - உடுவில் மகளிர் கல்லூரி. |

(உ-122)

# இடைக்கால நிர்வாக சபை விவகாரம்; அரசு, ஐ.தே.க. முயற்சிகளை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமய நடவடிக்கை

(கொழும்பு)

தமிழர்தாயகத்தில் இடைக்காலநிர்வாக சபையினை ஏற்படுத்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை தோற்கடிக்கத்தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஹெல உறுமயவின் இந்நிலைப் பாடுகுறித்து அதன் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்தின தேரர் கருத்து வெளியிட்ட போது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பன புலிகளால் கோரப்பட்டிக்கும் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது குறித்து தீவிரம் காட்டிவருகின்ற போதும், அது குறித்துத் தமது உண்மையான நிலைப்பாட்டை இன்னமும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தவில்லை.

இந்நிலையில் புலிகளிடம் வழங்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபையினது அம்சங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படாது அதனை வழங்க முற்படுவது நாட்டின் இறைமைக்குப் பாதகமான சூழலை உருவாக்கும்.

அரசாங்கமும் ஐக்கிய தேசியக்கட்சியும் பொதுமக்களை திசைதிருப்பி இடைக்கால நிர்வாகசபையினை புலிகளிடம் கையளிக்க முயல்வது புலிகள் கையில் தனி ஈழத்தை வழங்குவதாக அமைந்துவிடும்.

எனவே, அரசினதும் ஐக்கிய தேசியக்கட்சியனதும் இத்தகைய முயற்சிகளை நிறைவேற்றுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

இதனாலேயே இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது குறிதத பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

இதைவிட அரசும் ஐக்கிய தேசிய கட்சியும் இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவது குறித்து தமது தீவிரப் போக்கினை கடைப்பிடித்து வந்தால் இம் முயற்சிக்கு எதிராக மக்களை அணிதிரட்டிச் செயறபடவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4,62)

### சீர்திருத்துப் பிரிவிற்கு செஞ்சிலுவைக்குழு விஜயம்

கிளிநொச்சி கனகபுரம் சீர்திருத்தப் பிரிவிற்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழு கடந்த 29, 30ஆம் திகதிகளில் விஜயம்செய்து அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களைச் சந்தித்து உரையாடி, அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்தனர்.

பின்னர் மல்லாவி வதிவிடப் பிரதிநிதி, பாதுகாப்புப்பிரிவு அதிகாரி, பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர் ஆகியோர் சீர்திருத்தப் பொறுப்பாளர் நரேன், தமிழீழ காவல்துறைப் பரிசோதகர் குணரட்ணம், கனகபுரம் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் சுதர்சன் ஆகியோரிடம் கலந்துரையாடி சீர்திருத்தப் பிரிவை மனிதாபிமான அடிப்படையல்பேணி வருவதற்காகத் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

### முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா

காரைநர் பிட்டியோலையில் அமரர் பேரம்பலம் ஞாபகார்த்த முன்பள்ளியொன்று அமைக்கப்படவுள்ளது. இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

பிட்டியோலை ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் மணிகலாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பொதுச் சுடரினை மாவீரர் ரதிபனின் தந்தையான கிருஷ்ணபிள்ளை ஏற்றி வைத்தார்.கட்டடத்திற்கான அடிக்கல்லை காரைநகர் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் வே.சிற்சபேசன் நாட்டினார். (246)

# நாட்டில் உள்ள 12வகையான பற்றீரியாக்கிருமிகள் மூலம் நுளம்புகளை அழிக்க முடியுமாம்

(கொழும்பு)

டெங்கு மலேரியா - யானைக்கால் ஆகிய நோய்களைப் பரப்பக் கூடிய நுளம்புகளை உயிரியல் ரீதியில் அழிக்க கூடிய 12 வகையான பற்றீரியா கிருமிகளை இலங்கையில் உருவாக்க முடியும் என இரு விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கைத்தொழில், தொழில் நுட்ப நிலையத்திலும் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திலும் கடந்த 2 வருடங்களாக நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக இது சாத்தியமாகி இருக்கின்றது.

மேற்படி, இரு நிறுவனங்களிலும் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்களாகப் பணியாற்றிவரும் டாக்டர் ராதிகா சமரசேகரா, டாக்டர் இந்திரா வீரசிங்க ஆகியோரே இந்தக் கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட மணல், நீர் மாதிரிகளில் இருந்து இவ்வகையான பற்றீரியாக் கிருமிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகைய பற்றீரியாக் கிருமிகள் நுளம்புகளின் ஆரம்ப பருவத்தில் புகுந்து அவற்றைக் கொன்றுவிடும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

டெங்கு, மலேரியா, யானைக்கால் ஆகிய நோய்களைக் கொண்டுவரும் நுளம்புகள் பரவும் இடங்களில் இந்த பற்றீரியாக் கிருமிகளை வளர விடுவதன் மூலம் நுளம்புகளை ஆரம்பித்திலேயே கொன்றுவிடலாம், எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.(60,10)



கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளங்கேற்றி வைப்பதையும், பாடசாலை அதிபர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம் எம்.கே.தாஸ்)

# சுகாதார சேவையை மேம்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

மாகாண மட்டத்தில் பொதுசுகா தார சேவையை மேம்படுத்துவதற்கு புதிய திட்டம் ஒன்றை ஆரம் பித்துச் செயற்படுத்தப் போவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துளளது.

இப்புதிய திட்டம் பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சுகாதார அமைச்சர்களின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மாகாணங்களில் தற்போது எதிர் கொள்ளப்படும் சுகாதாரப் பிரச்சி னைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதே அத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். (உ-8)

# இன்று ஒரு தகவல்

## கழுதையும் கற்றுக்கொடுக்கும்

ஒரு சராசரி மனிதனின் இயல்பு என்ன? இன்பம் வந்தால் துள்ளிக்குதிப்பான். துன்பம் வந்தால் சோர்ந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவான். இவன் தான் சராசரி மனிதன். ஆனால் ஒருவன் இன்பம் வந்தால் அதற்காக மகிழ்வடைவதில்லை. துன்பம் வந்தால் அதற்காக சோர்ந்து விடுவதில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இருந்தால் அவன் சாதாரண ஆளில்லை.

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடிக் கொண்டு ஒரு பெரியவர் வந்தார். "ஐயா! ஞானத்தில் சிறந்த ஞானம் எது?" என்று கேட்டார். இதற்கு அந்த ஞானி என்ன பதில் சென்னார் தெரியுமா? "இன்பத்தினால் மகிழ்ச்சியடையமாலும் துன்பத்தினால் சோர்வடையாமலும் இருப்பது தான் அது" என்றாராம் ."சரி சுவாமி அப்படிப்பட்ட ஞானம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டிருக்கிறார் இவர். "அதை ஒரு கழுதையிடமிருந்து நான் கற்றுக்கொண்டேன்" என்றாராம் அவர்.

இவருக்கு ஒன்றும்புரியவில்லை. ஒரு மாதிரி முழித்திருக்கிறார். இதை அவர் புரிந்துகொண்டார்." நீங்கள் நாளை காலையில் நமது ஆசிரமத்திற்கு வாருங்கள் புரிய வைக்கிறேன்" என்றார். சரி என்று இவர் போய்விட்டார்.

மறுநாள் காலையில் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். ஞானி அவரைக்கூப்பிட்டு உட்கார வைததார். "வாருங்கள் வந்து இப்படி உட்காருங்கள். சிறிது நேரத்தில் இந்த வழியாக ஒரு கழுதை போகும அதைக் கவனியுங்கள்" என்றார். இவருக்கு இன்னும் ஒன்றும் புரியவில்லை. குழப்பமாக இருந்தது. இருந்தாலும் அந்த ஞானி சொன்னது போலவே உட்கார்ந்திருந்தார்.

சிறிது நேரத்தில் அந்த வழியாக ஒரு கழுதை சென்றது. அதன் முதுகில் நிறைய அழுக்குத் துணிகள். அதைச் சுமந்துகொண்டு போகின்றது. ஒரு சலவைத்தொழிலாளி அதை ஓட்டிக்கொண்டு போகிறார். சிறிது தூரத்தில் ஒரு ஆறு இருக்கிறது. அங்கே போய் துணிகளைச் சுத்தம் செய்து விட்டு பின்னேரம் திரும்பி வருவார்.

ஞானி சொன்னது போலவே இந்தப்பெரியவர் அழுக்கு மூட்டையைச் சுமந்து செல்லும் அந்தக் கழுதையைக் கவனித்தார். கழுதை போய்விட்டது. அதன் பின் ஞானியைத் திரும்ப்பிப்பார்த்தார். இப்போது அந்த ஞானி சொன்னார். "பின்னேரம் வரைக்கும் நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும்" என்றார். அதே மாதிரி இவரும் இருந்தார்.

மாலை நேரம் அந்த ஞானி சொன்னார் "ஐயா... இப்போது சிறிது நேரத்தில் அந்தக்கழுதை இந்த வழியாகத் திரும்பிவரும் அதையும் கவனியுங்கள் " என்றார். இவரும் கவனித்தார். கழுதை வந்தது. அதன் முதுகில் சலவை செய்யப்பட்ட துணி மூட்டை. அது தன்பாட்டுக்கு அவற்றைச்சுமந்து கொண்டு போனது. பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுமையிழந்துவிட்டார்.

சரி சுவாமி. இந்தக்கழுதைக்கும் உங்கள் ஞானத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டார். இப்போது அந்த ஞானி சென்னார். "ஐயா இந்தக் கழுதை இதே மாதிரித் தினமும் காலையில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்துகொண்டு ஆற்றுக்குப் போகிறது. மாலையில் வெண்மையான, சுத்தமான துணிகளைச் சுமந்து கொண்டு ஊருக்குத்திரும்பிப் போகிறது.

காலையில் போகும்போது முதுகில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்துகொண்டு போகிறோமே என்ற வருத்தமும் அதற்கு இல்லை. மாலையில் திரும்பி வரும்போது சுத்தமான துணிகளைச் சுமந்துகொண்டு வருகினறோமே என்ற மகிழ்ச்சியும் இல்லை. இதைப் பார்த்துத்தான் நானும் அதுபோன்ற ஞானத்தைக் கற்றுக்கொண்டேன்" என்றார்.

அதனால் யார் கற்றுக்கொடுக்கிறார் என்பதை விட எதைக்கற்கிறோம் என்பது தான் முக்கியம். ஒரு திரைப்படம் பார்க்கிறோம். ஒரு அருவி கொட்டுவது போல் காட்சி வருகிறது. தண்ணீர் வழிகிறது. படம்முடிந்ததும் அந்தத் திரை நனைந்து போயா இருக்கும்? ஒரு தீப்பிடித்து எரியும் காட்சியைப் பார்க்கிறீர்கள். காட்சி முடிந்ததும் அந்த வெண்திரை கருகிப் போயா இருக்கும்?

படத்தில் வரும் தண்ணீரும் நெருப்பும் அந்தத் திரையைப் பாதிப்பதில்லை. நாம் அந்தத்திரையைப போல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப்பக்குவம் வந்துவிட்டால் இன்பமும் துன்பமும் நம்மை ஒன்றும் செய்துவிடமுடியாது.

ஒரு படத்தை பார்க்கும் வரை சிரிக்கலாம், அழலாம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது அழுதுகொண்டே வரக்கூடாது. ஒருத்தர் அப்படி வநதார். படம் முடிந்து வெளியே வரும்போது அருவி போலக் கண்ணீர் சிந்திக் கொண்டே வெளியே வந்தார். "ஏன் சார் படம் மிகவும் சோகமா? " என்று கேட்டார் இன்னொருவர். "இல்லை சார்! கூட்டம் மிகவும் குறைவு சார். மொத்தமாகப் படம் பார்க்க வந்தவர்களே 15 பேர் தான் சார்" என்றார். கண்ணரைத் துடைத்துக்கொண்டே "அதற்கு ஏன் சார் நீங்கள் அழுகிறீர்கள்?" என்றார் இவர். "இந்தப் படத்தின் தயாரிப்பாளரே நான் தான் சார்"என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எதிர்க்கட்சியின் நிபந்தனையற்ற ஆதரவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்திற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவை அரசு நிராகரித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் முக்கிய அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திற்கான தனது ஆதரவினை விலத்திக் கொண்டால், தமது நிபந்தனையற்ற ஆதரவு அரசிற்கு இருக்கும் என ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சாளர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியோ ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிச் செல்லப் போவதில்லை எனக்கூறி எதிர்க்கட்சியின் ஆதரவினை நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழீழ விடுதலைப புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்தால் தமது கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகிச் செல்லும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கேகாலையில் வைத்துத் தெரிவித்திருந்தார்.


இந்நிலையில் ஜே.வி.பி. ஆளும் அரசில் இருந்து விலகிச் செல்வதன் மூலம் பாராளுமன்றத்தில் ஆளும் அரசை பலவீனப்படுத்த முயன்றால், சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுத்துச செல்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் என ஐக்கிய தேசியமுன்னணி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(18)

# சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இந்திய பிரதமருக்கு விளக்கம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கலந்துரையாடியுள்ளார்.



வின்ஸ்ரெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்து சென்றுள்ள ஜனாதிபதி நேற்று முன் தினம் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய போதே சமாதான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்க வேண்டும் என ஜனாதிபதி இந்தியப் பிரதமரைக் கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே சிறந்த வழியென்வும், அவ்வாறு நீதியான முறையில் பேச்சுவார்த்தை இடம்பெறுமானால் அதற்கு இந்தியா பூரண ஆதரவை வழங்குமெனவும் தெரிவித்தார்.



இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேபாளப் பிரதமர் சேர் ப:.துர் கியூபாவையும் சந்தித்துப் பேசியிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போது கொழும்புக்கும் காத்மண்டுவுக்கும் இடையில் நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதன் அவசியம் குறித்து நேபாளப் பிரதமர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தவிடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் நேபாளப் பிரதமரும் ஜனாதிபதியும் உடன்பட்டுள்ளனர்.

இலங்கை- நேபாள வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வது பற்றியும் இரு தலைவர்களும் ஆராய்ந்துள்ளனர்.

(60,10)

# இராசி பலன்

**02.08.2004**
**(ஆடி 18, திங்கட்கிழமை)**
**துதிரை மு.இ 8.53மணி வரை**
**அவிட்டம் பி.ப 2.26 மணி வரை**
**இராகுகாலம் 7.34-9.04 மணி வரை**
**சுபநேரம் 12.04-1.34 மணிவரை**
**சித்தம்**

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும், தொழில் வருமானம், மனமகிழ்ச்சி, நல்லவரவேற்பு.

**இடபம்**
தூரதேச செய்தி, லட்சுமீகரம், உற்சாகம், மேன்மை.

**மிதுனம்**
அபகீர்த்தி, கட்டுப்பாடு, எடுத்தகாரியம் தாமதம், உடல் நலக்குறைவு.

**கடகம்**
பிரயாணபயம், வீண் பிரச்சினை, புத்தி சாதுர்யம், எதிர்பாராத நன்மை.

**சங்கம்**
முயற்சி கைகூடும், களஸ்திர நன்மை, செல்வாக்கு, பொருள் சேர்க்கை.

**கன்னி**
செய்தொழில் விருத்தி, காரிய அனுகூலம், உடல்நலம், பகைவர் நேசம்.

**துலாம்**
உறவினர் சந்திப்பு, வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
மாதாசுகம், புதிய விடயம், மனச்சோர்வு, காரியதாமதம்.

**தனுசு**
கூட்டுமுயற்சி, காரிய சித்தி, உற்சாகநிலை, போசன சுகம்.

**மகரம்**
எதிர்பாராத நன்மை, அதிகவார்த்தை, இடமாற்றம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
நல்ல வரவேற்பு, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம், சயன சுகம்.

**மீனம்**
கோபப்படுதல், தொழில் சிந்தை, காரிய தாமதம், பணவிரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# தமிழர் தாயகப் பகுதிகளில் தொழில்நுட்பப் பாடங்களை கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை

*தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் சுட்டிக்காட்டு*

(கொழுமபு)

அரச படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டு எமதுபாடசாலைகளில் முகாம் அமைத்து அவைகளை உடைத்துக் கொண்டும் தமிழ் மாணவர்களைத் தமக்கு எதிராக அரசியலில் ஈடுபடவேண்டாம் என்று மிரட்டி வருகின்றது. இது எவ்வகையில் நியாயமென தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற தமிழீழ வரலாற்றுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பரீட்சையில கடல் வளப் பாடஙகள், தொழில்நுட்பப் பாடங்கள் என்ற வகையில் அறிமுகப்படுத்தப்பட்டன. தொழில்நுட்பப் பாடம் என்ற வகையில் விவசாயம, வர்த்தகம் ஆகிய பாடங்களையே தமிழ் மாணவர்கள் கற்று வருகின்றனர்.

ஏனைய தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவற்றுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அவ்வாறான பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு நியமிக்கப்படுவதில்லை.

இதனால் ஏனைய தொழில்நுட்பப் பாடங்களுக்கு மாணவர் தோற்றுகின்ற வீதம் மிக மிகக் குறைவு, மாறாக 96 வீதமான சிங்கள மாணவர்கள் இவ்வாறான தொழில்நுட்பப் பாடங்களை கற்று வருகின்றனர். அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்படுகின்றன.

இது தவிர, எமது ஏராளமான பாடசாலைகள் இராணுவத்தினரால் அழித்தொழிக்கப்பட்டுள்ளன. சில பாடசாலைகள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இயங்காது முடக்கி வைக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

(121)

# சமூக, கலாசாரப் பிறழ்வுக்கு காரணமாக அமைபவர்கள் தற்கால யுவதிகளே!

**விவாதஅரங்கு - 4**

**சமூக கலாசாரப் பிறழ்வுக்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே! என்ற விவாத அரங்கிற்கு யுவதிகளே காரணம் எனத் தன் வாதத்தினை முன் வைக்கிறார். ஜி.ஜெஸ்ரின்.**

**வாதம் - 5**

வலம்புரி விவாத அரங்கில் முன்வைக்கப்பட்ட சமூக- கலாசாரப் பிறழ்வுக்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களா? யுவதிகளா? என்ற விவாதம் அலசிப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றுதான்! சமூக-கலாசாரப் பிறழ்வுகளில் இரு பாலாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாம்! இருப்பினும் அதிகம் தற்கால யுவதிகள் தான் பிறவுழ் வுக்குக் காரண கர்த்தாக்கள்.

பெண் என்பவள் உன்னதமான,உயர்வான இறைவன் படைப்பு. ஏன்? ஒரு சமூக- கலாசாரத்தின் உயிர் நாடியே பெண்கள் தான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவை பெண்களின் சிறப்பு. ஆனால் தற் கால யுவதிகள் யுவதிகளாக இருக் கின்றார்களா? என்றால் இல்லை! மேலைத் தேச கலாசார வாழ்கை முறைகறை விரும்புவதால் தமிழ் சமூக- கலாசாரப் பிறழவுகள் அதிகரிக்கக் காரணமாகின்றது. ஒரு ஆணின் நடத்தையை விடவும் பெண்களின் நடை, உடை பாவனைகளை வைத்தே கலாசாரக் கட்ட மைப்புக்கள் பகுத்தறி யப்படும். பெண்களால் நல்ல வற்றை ஆக்கவும், தீயவற்றை அழிக்கவும் முடியும் என்றார்கள். ஆனால் தற்கால யுவதிகளே அழிவுப் பாதைக் குள் சிக்கிவிட்டார்கள்! கவர்ச்சியான வெளிநாட்டு ஆடை அமைப்பை ஏன் சிற்பிஜயா எங்கட யுவதிகள் பின்பற்ற வேண்டும்? உளவியல் ரீதியாக ஆராய்ந்து பார்த்தால் தங்களை மற்றவர்கள் பார்க்கவேண்டும் என்ற காரணம் தான். உள்ளாடைகள் வெளித் தெரியும்படியாக கண்ணாடி உடைகளும், ரைற் ஸ்கேட் என்று பெசனாகி விட் டது. இத்தகைய உடைகளை அணிந்து உலாவரு வோரைப் .பார்த்து முதியவர்களால் கூட கலா சாரத்தைப் பேணமுடி யாத சூழல்! இளைஞர் களின் உளம் பாதிக்கப்படும் வகையில் தற்கால யுவதிகள் பின்பற்றும்

அந்நியக் கலாசாரம் தேவையானது தானா?

அந்தக் காலத்தில் பகிடி, சேட்டை விட்டால் தலைகுனிந்து போன யுவதிகள் இருந்தார்கள். பிரச்சினை என்று வருவதில்லையாம்! இன்றைய யுவதிகள் தலைகுனிந்து போகவேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு ஆடவர் கிண்டல் செய்தால் அதற்குப்பதில் கூறத்தான் வேண்டுமா? மௌனம் பெண்கள் ஆயுதம் என்பது பொய்த்துப் போய்விட்டது. **Social** என்ற பெயரில் பல சோகமான சம்பவங்கள் அரங்கேறுகிறது தற்கால யுவதிகளால். இளைஞர் கள் செய்வது அனைத்தையும் பின்பற்றுவதுதான் **Social**லாம்.

"யாழப்பாண நகருக்கு சில தற்கால யுவதிகள் வருகினம் போகினம். கலாசாரப் பிறழ்வான செயற்பாடு களில் ஈடுபடுகினம்" என்றார் பழக்கடை வியாபாரி ஒருவர்.

யாரும் காலம் மாறேக்க கோலங்களும் மாறத் தான் வேணும். பெடியளும் படுமோசம். அதற்கு பெண்டுகள்தான் காரணம் என்றார்.

இதிலிருந்து தற்கால யுவதிகள் தான் சமூக- கலாசாரப் பிறழ்வுக்கும் காரணமாக இருக்கின்றனர். இவற்றை இல்லாமல் செய்ய முடியாதா? என்ற வினா விற்கு நீண்டநேர மௌனத்தின் பின் சொன்னார். உதுகளைத் திருத்த பெடியள்தான் சரி என்று உரையாடலை நிறுத்திவிட்டார்.

கட்புல ரீதியாக ஆண்களை இந்தக் கண்றா விகளை எல்லாம் யார் பார்க்கச் சொன்னது என்று பரவலாகச் சொல்கிறார்கள். வழி எல்லாம் முள் என்பதால் பாதை முழுக்க கம்பளம் விரிப்பதை விட காலுக்கு ஒரு சோடி செருப்புப் போடுவது மேல். சமூக- கலாசாரம் பிறழ்வுபடுகின்றது என்பதற்காக பாதையை மூடுவதா அல் லதுபார்வையை மாற்றுவதா என்பதைவிட கவர்ச்சியான ஆடை அணி ங்களை திருத்துதல் நலம்!

கறுப்புப் பல கையில் இடப் பட்டவெள்ளைப் புள்ளி சர்ச் சைக்கு நடு நிலையான தீர்ப்புக் கிடைக்க வேண்டும். இதனால் தான் தற்கால இளைஞர்களும் யுவதிகளும் தன் னிலை அறிந்து, தான்தோன்றித்தன மான வாழ்க்கையை வெறுத்து, தமிழ் சமூக-கலாசாரத்தைப் பேணுவதற்கும் இது குறித்து விழிப்புணர்ச் சியையும் ஏற்படுத்தி நிற்கின்றது விவாத அரங்கு. சமூக-கலாசார பிறழ் வுக்குக் காரணமாக இருப்பவ்கள் தற்காலத்தில யுவதிகள் தான் என்று என் வாதத்தை முன்வைக்கின்றேன். ★

**-ஜி.ஜெஸ்ரின்- கொழும்புத்துறை**

# அரசியலில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்த இந்தியாவின் மத்தியஸ்தமே சிறந்தது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க மற்றும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் இணக் கப் பாடுகளைக் காண்பதற்கு இந்தியா நடுநிலையாளராக செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

சமாதான செயலகத்தின் முன்னாள் முக்கிய உறுப்பினா ஒருவரே இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

இனப்பிரச்சினை விவகாரம், தமிழீழ விடுதலைப் புலிகளுட னான சமாதானப் பேச்சுக்கள் போன்ற விடயத்தில் ஜனாதி பதி சந்திரிகாவும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வும் கருத்து ஒற்றுமை ஒன்றிற்கு வரவேண்டும்.

தென்னிலங்கை அரசியல் கருத்து ஒறறுமை ஒ[illegible] இல்லா மல் தமிழீழ விடுதலைப்புலிகளு டன் எந்த ஒரு விடயத்திலும் இணக்கப்பாட்டுக்கு வ[illegible]முடியாது. இநத இணக்கமானது இலங்கை யின் நீண்டகால சமாதானத் திற்கு மிகவும் அவசியமானது.

ஏற்கனவே தமிழீழ விடு தலைப் புலிகளுடன் இடம்பெற்ற பேச்சுக்கள் தெற்கில் கருத்து ஒற்றுமை இல்லாத காரணத்தி னாலேயே இடைநிறுத்தப்பட்டி ருந்தன. இவ்வாறான ஒரு கருதது ஒற்றுமையை இந்தியா வே கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவும் தமது பிரதிநிதி களை நியமித்து புதுடில்லி யிலோ அல்லது வேறு ஒரு இடத் திலோ சந்தித்து இந்தியாவின் மத்தியஸ்தத்துடன், தெற்கின் கருத்து ஒறறுமையை அடைவது அவசியம்.

இதுவிடயத்தில் தற்போதைய வெளிவிவகார அமைசசர் லக்ஷ் மன கதிர்காமர், ஜனாதிபதி சந் திரிகா, முன்னாள் அமைச்சர் மலிந்த மொறகொட மற்றும் பிரதமா ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைப் பிரதிநிதித்துவப் படுத்துவதே சரியானதாக இருக் கும்.

இந்தியாவின் தற்போதைய அரசினால் இந்த முயற்சிக்கு முன்னாள் இந்தியப் பிரதமர் ஒரு வர் இணைப்பாளராகக் கடமை யாற்றுவதற்கு நியமிக்கப்பட லாம். இதற்கு முன்னாள் இந்தியப பிரதமர் ஐ.கே. குஜ்ரால் அல் லது நரசிம்ம ராவ் ஆகியோர் தகுந்த பிரதிநிதிகளாவார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (18)

கடந்த ஆண்டுகளை விட

# சுற்றுலாப் பயணிகளின் வருகை இவ்வாண்டில் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியில் 2இலட்சத்து 24 ஆயிரத்து 905 சுற்றுலாப பயணி கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலாச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் இங்கு வந்த சுற்றுலாப பயணிகளிலும் பார்க்க 8ஆயி ரத்து 200 பேர் இம்முறை அதிக மாக வந்துள்ளனர்.

பிரிட்டன்,இந்தியா,ஜேர்மனி, அவுஸ்திரேலியா,பிரான்ஸ், நெதர்லாந்து,ஜப்பான்,ஒஸ்ரியா, சுவீடன் ஆகிய நாடுகளில் இருந்தே இலங்கைக்கு கூடுதலான சுற்று லாப் பயணிகள் வந்துள்ளனர் எனவும், இவ்வருட முடிவில் சுமார் 6இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இங்கு விஜயம் செய்யலாம் என தாம எதிர்பார்ப்பதாகவும் சுற்று லாச் சபையின் தலைவர் நம்பிக கை தெரிவித்துள்ளார். (60,10)

**விவாத அரங்கு -4**

விடயம்

**சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!**

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்**

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

**க.பொ.த. (சா.த) மாணவர்களே! வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.**

இனம் போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம் போல வேறுபடும் - குறள்

வலம்புரி

## சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில் இராணுவப் புலனாய்வுத்துறை

நாட்டில் கடந்த இருபது வருடங்களாக நடைபெற்ற மிகப் பெரும் யுத்தம் சற்று ஓய்வுற்றுள்ளது. யுத்தநிறுத்தம் என்ற பேரில் யுத்தத்தின் சத்தங்கள் தற்காலிக ஓய்வை பெற்றுள்ளனவே தவிர அவை நிரந்தரமானவை அல்ல.

எந்நேரமும் யுத்தமேகம் கருக்கட்டலாம். யுத்த மழையை வரவழைக்கும் முயற்சியில் சிங்களப் பேரினவாதிகளான ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் ஈடுபட்டுள்ளன.

போதாக்குறைக்கு படைத் தளபதிகளும் யுத்தத்தையே விரும்புகின்றனர். யுத்தகாலத்தில் ஆயுதக் கொள்வனவு முதல் ஆட்களைக் கைதுசெய்வது வரை வருமானம் உழைத்த படைத்தளபதிகளுக்கும், படை அதிகாரிகளுக்கும் யுத்தநிறுத்தம் வெறுப்பை கொடுத்துள்ளது. மீண்டும் யுத்தம் ஏற்படுவதன் மூலமே தமது கைகளை நிரப்பிக் கொள்ள முடியும் என்ற நிலையில் படைத் தளபதிகள் இருப்பதால், எந்த நேரமும் யுத்தம் முகிழ்வதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகவே இருக்கின்றன.

படைச்சிப்பாய்கள் யுத்தத்தை வெறுக்கின்ற போதிலும் படை அதிகாரிகளினதும், தளபதிகளினதும் நடவடிக்கைகள் சிப்பாய்களின் விருப்பத்துக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளது.

இதற்கு மேலாக நாட்டில் மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்துவதில் இராணுவப் புலனாய்வுத் துறையின் முயற்சி மிகத் தீவிரமாக உள்ளது. யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்ற வேளையிலும் கூட, தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் ஊடுருவும் இராணுவப் புலனாய்வுத் துறையினர், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதில் - அதற்கு எதிராக திட்டந் தீட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தமிழ் குழுக்களை சார்ந்தவர்களை அல்லது தமிழ் குழுக்களில் இருந்து விலகிச் சென்றவர்களை வளைத்துக் கொண்டு காரியத்தை கச்சிதமாக நிறைவேற்றப் பிரயத்தனம் செய்கின்றனர்.

இவ்வாறு தமிழ் குழுக்களைச் சார்ந்தவர்கள் அல்லது அந்த குழுக்களில் இருந்து விலகியவர்களை புலனாய்வுக்குப் பயன்படுத்தி தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் திட்டமானது, மிகவும் கொடூரமானதும், பயங்கரமானதும் ஆகும்.

இராணுவ புலனாய்வுத் துறை தமிழ் குழுக்கள் சார்ந்தவர்களை தம்முடன் இணைத்துக் கொண்டிருப்பதன் நோக்கம் இரண்டாகும். அதிலொன்று தமிழர்களை புலனாய்வுத் துறையில் வைத்திருப்பதன் மூலம் தமிழர் தாயகத்தில் இருந்து தகவல்களை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்.

மற்றையது தமிழ்க் குழுக்களை புலனாய்வுத் துறையில் வைத்திருப்பதன் மூலம் தமிழ் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அதனூடாக தமிழ் இனத்திற்குள் அழிவை உண்டுபண்ணுவதாகும்.

இந்த இரண்டு இலக்கையும் அடைந்து கொள்ளும் இராணுவப் புலனாய்வு துறையின் கபட நோக்கத்துக்கு, தமிழ்க் குழுக்களை சார்ந்த சிலர் துணையாகிவிடுகின்றனர். இதன் காரணமாக அப்பாவித் தமிழ் இளைஞர்கள் தங்களின் உயிரை இழக்க நேரிடுகிறது. அத்துடன், எதுவித குற்றமற்ற தமிழ் இளைஞர்கள் வருடக் கணக்கில் சிறைகளுக்குள் அடைபட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ் இனத்திற்குள் இருக்கும் தமிழ் இன விரோத செயற்பாடுகள் எதிரிக்கும் சாதகமாகி விடும் என்ற உண்மையை ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் என்று உணர்ந்து கொள்கின்றார்களோ அன்று தான் தமிழ் மண்ணுக்கு விமோசனம் கிடைக்கும்.

இல்லையேல் ஒரு புறத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காக - தமிழுக்காக உயிர்த்தியாகங்கள் நடைபெறுகின்ற அதேவேளை, மறுபுறத்தில் தமிழின விரோத செயற்பாடுகளுக்கு தூபமிடும் முயற்சியில் இராணுவம் ஈடுபடவே செய்யும். இதனைத் தடுப்பதிலேயே தமிழர்களின் வெற்றி தங்கியுள்ளது.

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து அறவழிப் போராட்டக்குழு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமூக அநீதிகள் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து சமுதாய மாற்ற நிறுவனமாகிய அறவழிப்போராட்டக்குழு அதன் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நிறுவனம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில்,

விடுதலைப்போராட்டம் கூர்மையடைந்து தமிழ் சமூகம் தலைநிமிர்ந்து வாழும் நிலைநோக்கி நகர்கின்ற வேளையில், கடந்த இரு தசாப்தங்களாக மறைந்திருந்த சமூக அநீதிகளும் மனித உரிமை மீறல் சம்பவங்களும் ஆங்காங்கே தலை தூக்கி வருவது வேதனைதருவதாகவுள்ளது.

இந்து ஆலங்களில் மீண்டும் பலியிடல் நிகழ்வுகள் சிறப்பாக அரங்கேறி வருகின்றமையும் அதற்கு சமுதாயத்தில் வாழ்கின்ற ஒருசில வர்க்கத்தினர் ஆதரவளித்து வருவதும், ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி வருகின்றது. இத்தகைய சமூக அநீதியான நிகழ்வுகளுக்கு மக்கள் ஆதரவளித்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அதேபோன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஒரு சில இந்து ஆலயங்களில் சமத்து வழிபாட்டிற்கு மறுப்புத்தெரிவிப்பதும், பூசை, பொங்கல் செய்யும் பக்தர்களுக்கு இடையூறு விளைவித்து அவமதிப்பு ஏற்படுத்துவதும் ஆலய தொண்டுப்பணிகளில் ஈடுபடுவதைத் தடுப்பதும் பாரதூரமான மனித உரிமை மறுப்பாகும்.

இத்தகைய நிலைப்பாடுகள் மீண்டும் தலைதூக்க அனுமதிக்கக்கூடாது இந்து ஆலயங்களில் பலியிடுதல் சம்பவங்கள் சட்டரீதியாக பல வருடங்களுக்கு முன்னர் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் கூட அது இப்போது மீண்டும் தலைதூக்கி வருவது கண்டிக்கத்தக்கதாகும்.

இதேவேளை, கடந்த இரு தசாப்தங்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட தமது இல்லிடங்களை பல்வேறு கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் பாதிக்கப்பட்ட மக்கள் புனரமைப்புச் செய்ய முற்படும்போது மணலைப் பெறமுடியாத நிலையை ஏற்படுத்தியிருப்பது அவர்களது முயற்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களுக்கு உபத்திரங்களையும் வீணான அலைச்சல்களையும் ஏற்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டியது முக்கியமாகும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16)

## விமான சேவை விஸ்தரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கஜ்யாத்திரையில் ஈடுபடவுள்ள இஸ்லாமியர்களின் நலன் கருதி இம் முறை அதிகளவிலான விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளது.

கஜ்யாத்திரிகர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டே விமான சேவை அதிகரிப்புச்செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில் இம்முறை இலங்கை -கஜ்சுக்கு இடையே 6 விமானங்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கஜ்யாத்திரிகர்கள் அதிக நன்மை அடைவார்கள் என இஸ்லாம் பண்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் அமீர் தெரிவித்தார். (4,64)

யாழ். நலன்புரி நிலையங்களிலுள்ள

## வீடுகளுக்கு மின்சாரம் வழங்க மின்சார சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களில் இருக்கும் தரமான வீடுகளுக்கு இலங்கை மின்சார சபையின் மின் விநியோகத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நலன் புரிச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் தலைவர் நா. கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் குடும்பத்தவர்கள் சட்டவிரோதமான முறையில் மின் இணைப்பைப் பெற்று வருவதாக மின்சார சபையும் பொதுமக்களும் அடிக்கடி குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையங்களில் தங்கியிருக்கும் அனைவரும் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடவில்லை. ஒரு சிலர் மட்டுமே ஈடுபடுகின்றனர். எனவே உயிர் ஆபத்தை விளைவிக்கக்கூடிய இந்த நடவடிக்கையில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலைப்பாடு எம்க்கு உண்டு.

அந்த வகையிலேயே நலன்புரி நிலையங்களுக்கு சட்டபூர்வமான மின் இணைப்பைப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம் என்று குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 60க்கும் மேலான நலன் புரி நிலையங்கள் இயங்கிவருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (16)

ஓம் திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மனிதனின் அசட்டுத்தனத்தைப் பாருங்கள். இன்பத்திற்காக அவன் மனிதர்களைச் சார்கிறான். பிரிவு துன்பம் தரக் கூடியதுதான். இன்பத்திற்காகப் பணத்தை நம்ப முடியுமா? பணம் கைமாறிச் செல்வது அல்லவா? மாறாத ஆன்மாவை விட்டு விட்டு, உடல் நலத்தையோ வேறு எதையோ சார்வது. இன்றோ நாளையோ துன்பத்தைக் கொண்டு வந்தே தீரும்.

சுவாமி விவேகானந்தர்

பொலிஸ் ஆணைக்குழு வழங்கிய

## பதவி உயர்வுகளை இரத்துச் செய்ய கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பொலிஸ் ஆணைக்குழு வழங்கிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வுகளை இரத்துச செய்யுமாறு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதம பொலிஸ் அதிகாரி மதன்சில்வாவும் ஏனைய பல அதிகாரிகளும் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

பதவி உயர்வுகளை வழங்கும் போது பொலிஸ் அதிகாரிகளின் சிரேஷ்ரத்துவத்தை கவத்தில் கொள்ளுமாறு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறும் மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் மனித உரிமைகளை மீறியதாகக் குற்றங்காணப்பட்ட சில பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (60-10)

## மாணவியைத் தாக்கிய உயர் நிர்வாகி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெல்லிப்பளை வீதியில் சித்தன் கேணியில் அமைந்திருக்கும் உயர் பாடசாலை ஒன்றின் உயர் நிர்வாகி தாக்கியதில் உயர்வகுப்பு மாணவி காயமடைந்து சிகிச்சை பெறநேர்ந்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து, ஆத்திரமடைந்த உயர் வகுப்பு மாணவர்கள் கடந்த புதன் கிழமை வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர். இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தணிக்குமுகமாக மேற்படி கல்லூரியில் நாளை பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கிடையிலான பொதுச் சந்திப்பு ஒன்று இடம்பெறவிருக்கிறது.

மேற்படி கல்லூரியின் உயர் நிர்வாகி பொது விடயங்களுக்காக மாணவர்களிடம் கட்டாய நிதி வசூல் செய்வதை விமர்சித்து மேற்படி கல்லூரியின் மாணவர்கள் வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றும் பத்திரிகைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அண்மையில் புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிக் கல்வியமைச்சின் செயலர் தாரா டி மெல் விடுத்த அறிக்கையில் "மாணவர்களை ஆசிரியர்கள் தாக்குவது சட்டவிரோதமான செயல் மட்டுமல்லாது தண்டனைக் குரிய குற்றமுமாகும்" என்று மிகத் தெளிவாகக் கோடி காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து கலாசார அமைச்சு அலுவலகத்தை

## தற்போது இயங்கிவரும் இடத்திலிருந்து அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சின் அலுவலகம் இயங்கும் கட்டடத் தொகுதியிலிருந்து இதனை அகற்றுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் முன்னர் அமைந்திருந்த டக்ளஸ் தேவானந்தாவின் இந்து கலாசார அமைச்சு அலுவலகம, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மதான கொலை முயற்சியை அடுத்து, உல்லாசப் பயணத்துறை அமைச்சு அமைந்திருந்த கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

அரசாங்கத்தால் தனியார் ஒருவரிடமிருந்து ஒன்பது மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதி வாடகைக்கு பெறப்பட்டதாகும்.

இந்நிலையில், உல்லாசப் பயணத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்ட கட்டடத் தொகுதியில் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்படடமைக்கு எதிராக கட்டட உரிமையாளரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதனையடுத்தே, குறித்த கட்டடத் தொகுதியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு அலுவலகம் விலகிச் செல்ல வேண்டுமென நீதிமன்றம் தீாப்பு வழங்கியுள்ளது. (18)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி தற்போது உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இப் பரீட்சை முடிவுகளை கல்லூரியில் பார்வையிடலாம் என பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ச)

## யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு இன்று விடுமுறை

யாழ். மத்திய கல்லூரியில் இன்று கல்விச் செயற்பாடுகள் எதுவும் நடைபெற மாட்டாது என கல்லூரி அதிபர் இராஜதுரை அறிவித்துள்ளார்.

நேற்றுக் கல்லூரியில் பரிசளிப்பு விழா நடைபெற்றதனால் இன்று மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சுவாமி ஸ்ரீ ராஜ்குமாரின் தாயார் காலமானார்

திருநெல்வேலி ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமாரின் தாயார் திருமதி கமலா வரதராஜசிங்கம் நேற்றுக் காலமானார். இவரது இறுதிக் கிரியைகள் ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## சமகால அரசியல் கருத்தரங்கு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடாத்தப்பட்டுவரும் சமகால அரசியல் கருத்தரங்கின் 17 ஆவது தொடர் நாளை மாலை 3.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'சமாதான முயற்சிக்கான தடைகளும், உலக நாடுகளின் கொள்கை வகுப்புக்களும்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார். (ச)

### போராளிகள்...

னையிட்ட அதிரடிப்படையினர் ரி- 56 ரகத் துப்பாக்கி ரவைகள் மற்றும் சயனைட் குப்பிகள் என்பனவற்றைக் கைப்பற்றினர். இதனையடுத்து வாகனத்தில் பயணம் செய்த பிரஸ்தாப இளைஞர்கள் 10 பேரும் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப்புலி உறுப்பினர்களான ந.ஞானராஜ் (செங்கை), வே.விவேகானந்தராஜ் (கண்ணன்), கு.ரஞ்சன் (கண்ணன்), கு.தயாளசீலன் (மதன்), ரா.ஜெயந்தன் (சுரேஸ்), நா.கண்ணதாசன் (லோகநீதன்), தி.குசலகுமார் (சுதந்திரன்) மற்றும் வாகன சாரதியான செம்பியன்பற்றைச் சேர்ந்த ஞா.ஞானரத்தினம், விற்பனை உதவியாளர்களான யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த த.துஸ்யந்தன், முனைக் காட்டைச் சேர்ந்த ந.காண்டீபன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் அனைவரும் நேற்றைய தினம் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எம்.மனாப் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது, இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (த-18)

### புத்தளத்தில்...

சிலாபம் கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த பதினேழு கத்தோலிக்க தேவாலய இளைஞர்கள் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

அமைதியான முறையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் சுலோகங்களை ஏந்தியபடி ஊர்வலமாகச் சென்றனர். (121)

# நஞ்சு கலந்த மதிய உணவு

# தமிழ் கைதிகளுக்கு பரிமாறல்

## களுத்துறைச் சிறையில் சதி

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்ட மதிய உணவில் நஞ்சு கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளுக்கு நேற்று முன் தினம் மதியம் இறைச்சிக்கறியுடன் சோறு வழங்கப்பட்டது. அதில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்ட உணவில் ஒருவித வாடை வீசியதை அடுத்து சிறைச்சாலை அதிகாரிகளிடம் அவர்கள் அது குறித்து முறையிட்டனர்.

இதனையடுத்து அவ் உணவைப் பரிசோதனை செய்தபோது அதில் நஞ்சு கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து நஞ்சு கலந்த உணவு இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டதுடன், பொலிஸார் தீவிர விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்ட உணவில் எவ்வாறு நஞ்சு கலக்கப்பட்டது என தாம் விசாரணை மேற்கொண்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி தெரிவித்துள்ளார். இச்சம்பவம் குறித்து சிறைச்சாலை ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சிறைச்சாலையில் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் முப்பதிற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## புளொட் மோகன் சுடப்பட முன்னர் இனந்தெரியாத நபருடன் பேசினார்

பம்பலப்பிட்டியில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகனின் கொலை தொடர்பாக அவருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் நுகேகொட தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் புளொட் மோகனை அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத ஒருவர் சந்தித்துள்ளதாகவும், சந்தித்த அந்த நபர் தொடர்பான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், இதுவரை சுமார் 25 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் நுகேகொட தெரிவித்துள்ளார். (ம)

### இராணுவக்....

மேஜர் ஜெனரல் விஜயசூரியவின் இடத்திற்கு வன்னி கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் பரணி குலதுங்க நியமிக்கப்படவுள்ளார். இம்மாற்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

யாழ்ப்பாணம் 52 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதியாக தலைமையக நடவடிக்கைப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பிரிகேடியர் நிமல் ஜெயசூரிய நியமிக்கப்படுகிறார். பிரிகேடியர் ஜெயவர்த்தன இராணுவத் தலைமையகப் பிரிவுக்கு நியமனம் பெறுகிறார்.

பிரிகேடியர் அலுவிகார சில்வா கூட்டுப் படை நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரியாகப் பதவியேற்கிறார். இதேவேளை வடக்கின் இராணுவக் கட்டமைப்பில் மேலும் 14 இராணுவ அதிகாரிகள் வேறு இடங்களுக்கு இடம்மாற்றம்பெறவுள்ளனர்.

இராணுவத்தை உஷார் நிலையில் வைத்திருக்கும் வகையில் வடக்கு-கிழக்கு கட்டளைத் தளபதிகள் உட்பட இராணுவத் தலைமையகத்திலும் திடீர் மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரமே யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை மாவட்டங்களின் கட்டளைத் தளபதிகளை அரசாங்கம் மாற்றம் செய்கிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-121)

## ஆசியக் கிண்ணத்தை இலங்கை வென்றது!

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்டினை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்டினை இழந்து 203 ஓட்டங்களைப்பெற்று தோல்வி அடைந்தது.

இறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்ற இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தப்பத்துக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆசியக் கிண்ணத்தை வழ்ங்கினார். மேலும் இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மாவன் அத்தப்பத்துவும், ஆட்டத் தொடர் நாயகனாக சனத் ஜெயசூரியாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (121)

| இலங்கை | |
|---|---|
| ஏ.குணவர்த்தன | 08(22) |
| எஸ்.ஜெயசூரிய | 15(20) |
| எம்.அத்தப்பத்து | 65(87) |
| கே.சங்ககார | 53(82) |
| எம்.ஜெயவர்த்தன | 0(06) |
| ரி.எம்.டில்சான் | 22(35) |
| யு.சந்தன | 08(13) |
| எம்.எவ்.ம.'.ரூப் | 09(09) |
| சமிந்தவாஸ் | 06(16) |
| என்.சொய்ஸா (ஆ.இ) | 06(08) |
| எம்.முரளிதரன் (ஆ.இ) | 04(05) |
| உதிரிகள் | 32 |
| மொத்தம் | 228/9 |

| இந்தியா | |
|---|---|
| வி.செவாக் | 05(07) |
| எஸ்.டெண்டுல்கர் | 74(100) |
| எஸ்.கங்குலி | 04(20) |
| வி.வி.எஸ்.லக்ஸ்மன் | 12(34) |
| ஆர்.ட்ராவிட் | 16(28) |
| யுவ்ராஜ் சிங் | 08(29) |
| எம்.கைவ் | 05(15) |
| ஐ.பதான் | 02(04) |
| ஹர்பஜன்சிங் | 16(30) |
| சஹீர்கான் (ஆ.இ) | 28(24) |
| ஏ.நெக்ரா (ஆ.இ) | 08(06) |
| உதிரிகள் | 25 |
| மொத்தம் | 203/9 |

### ஈழத் தமிழ்...

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் மன்னார் மாவட்ட நீதிபதி முன் அவர்களை ஆஜர் செய்தபோது அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு சிவில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

.காளிமுத்து அன்னலட்சுமி (யாழ்ப்பாணம்), சிங்கராஜா சரோஜா (இயக்கச்சி பளை), அவரது பிள்ளைகளான பிரகாஷ், பிருந்தா, சஜிதா, கிறிஸ்ரினா: பாலசிங்கம் வீதி கொக்குவிலைச் சேர்ந்த இருளன் பரமேஸ்வரி, பலாலி வீதி கோண்டாவிலைச் சேர்ந்த சாமித்தம்பி சுந்தரம் ஆகியோரே இந்தியாவிலிருந்து நேற்று மன்னாருக்கு வந்த யாழ்ப்பாண வாசிகள்ாவார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான யுத்த நிறுத்த உடன்படிக்கையை அடுத்து கடந்த வருடம் 971 குடும்பங்களும், இந்த வருடம் யூன் மாதம் வரை 1500 குடும்பங்களும் சட்டவிரோதமான முறையில் தாயகம் திரும்பியிருந்தன. சென்ற யூலை மாதம் மட்டும் 100 குடும்பங்கள் தாயகம் திரும்பியிருந்தன.

இதேவேளை, தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் உயிராபத்து மிக்க சட்டவிரோதமான கடல்வழிப் பயணத்தை தவிர்ப்பதற்காக சட்டபூர்வமான படகுச் சேவை ஒன்றை இரண்டு அரசுகளும் இணைந்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னார் செயலக அதிகாரிகளும், பொது அமைப்புகளும் வேண்டுகோள் விடுதுள்ளன.

இது இவ்வாறிருக்க தென்னிந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதிகள் விவகாரத்தில் இரண்டு நாட்டு அரசுகளும் கண்மூடித்தனமான போக்கைக் கடைப்பிடித்து வருவதாக மன்னார் மாவட்ட நீதிமன்றம் அண்மையில் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### யாழ். செயலகம்...

மற்றும் உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ, வர்த்தக டிப்ளோமாதாரிகள் மற்றும் இறுதி வருட உயர் தேசிய கணக்கியல் முகாமைத்துவ மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக வெளியிடப்பட்ட பெயர்ப பட்டியலில் உயர் தேசிய டிப்ளோமாதாரிகளின் பெயர்கள் வெளிவரவில்லை.

எனவே இரண்டாம் கட்டமாக வெளியிடப்படும் பட்டியலில் தமது பெயர்கள் வெளியிடப்படவேண்டும் எனவும் இது குறித்து பாராளுமன்றத்தில் எடுத்துக்கூற வேண்டும் எனவும் டிப்ளோமாதாரிகள் சிவாஜிலிங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

யாழ். மாவட்டத்தில் இருந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட 532 பட்டதாரிகளுள் உயர் தேசிய வர்த்தக மற்றும் கணக்கியல் முகாமைத்துவ, டிப்ளோமாதாரிகளின் பெயர்கள் இடம்பெறாமையைக் கண்டித்து யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக டிப்ளோமாதாரிகள் சங்கம் கடந்த 28 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அறிக்கை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கமும் இன்று யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இதேவேளை இன்று பிற்பகல் 1 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (த-19)

## மரண அறிவித்தல்

### திருமதி வ.கமலா (வடலியடைப்பு)

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் அவர்களின் அருமைத் தாயாரும், அரசடிவீதி வடலியடைப்பைச் சேர்ந்த வரதராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியாருமான திருமதி வ.கமலா அவர்கள் 2004.08.01 ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார். அவர்களின் பூதவுடல் தற்போது வடலியடைப்பில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இறுதிக் கிரியைகள் திருநெல்வேலி ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

தகவல்: வரதராஜசிங்கம் (கணவர்)
அரசடி வீதி, வடலியடைப்பு
சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் (மகன்)
ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடாதிபதி

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்02.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

விலை :-16.00

# சங்கு நாதம்

02 -08 ஆகஸ்ட் 2004

Sankunatham

பக்கங்கள் - 20

சங்கு :-04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :- 21

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## நோர்வே விலகுமா?

அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

# சமாதானப் பணியிலிருந்து நோர்வே விலகுமா...?

"சமாதான முன்னெடுப்புக்கள் தாமதமாகும் ஒவ்வொரு கணமும் நாட்டில் யுத்தத்திற்கான வாய்ப்பையே அதிகரிக்கச் செய்கின்றது"

இப்படி எச்சரிக்கை செய்திருப்பவர் முன்னாள் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இதனையே இலங்கையின் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளரான நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசனும் "இலங்கையின் நிலவரம் யுத்தம் வெடிக்கும்



அபாய கட்டத்தை அடைந்து விட்டதாக எச்சரிக்கை சமிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இவர்களது கருத்துடன் ஒத்துப்போகும் வகையில் சமாதானத்தின் உயிர் சேடம் இழுக்கின்றது என்பதை மிகத் தெளிவாக விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் விளக்கியிருக்கிறார்.

"இலங்கைத்தீவு போர் விளிம்பில் நிற்கின்றது" என்பதை அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆக மொத்தத்தில் 29 மாதகால சமாதான அமைதி கலைந்துபோகும் நேரம் நெருங்கிவிட்டதென்பதையே இலங்கையின் இன்றைய நிலவரம் மிகத் தெளிவாக புலப்படுத்தி நிற்கின்றது.

சமாதான மேகங்கள் கலைந்து வெண்புறாக்கள் சிறகுடைந்து முடங்கப்போகும் அபாயம் மெல்ல மெல்ல உருவாகி வருகிறது.

இழுத்தடிப்பும், காலம் கடத்தலும் சமாதானத்தின் உருவாக்கலுக்கான அடிப்படையல்ல. அ∴து போருக்கான முன் ஆயத்தமாகவே உணரப்படுகின்றது.

இலங்கையின் அரசியலும், அதன் சீரின்மையும் நிச்சயமாக இன்றைய சூழ்நிலையில் சமாதான முன்நகர்வுக்கான ஏற்பாடுகளை செய்யப் போவதில்லை என்பதை அவர்களின் நடவடிக்கைகள் தெட்டத் தெளிவாகக் காட்டிவருகின்றன. இதனை இலங்கை மக்கள் உட்பட சர்வதேச சமூகமும் உணரத்தொடங்கிவிட்டது.

இதனால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த எடுக்கும் முயற்சிகள் வீணானவை என்பதை நோர்வே தரப்பும் உணரத்தொடங்கி விட்டது.

### சமாதானப் பயணம்

இலங்கையுடன் நீண்ட காலத் தொடர்பு எதுவுமற்ற வகையில், இலங்கைத்தீவில் எரியும் போரைத் தணித்து மனிதாபிமான அடிப்படையில் சமாதான முயற்சிகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற நோக்கில் அனுசரணையாளராகச் செயற்பட முன்வந்த நாடு நோர்வே என்பதை மறுக்க முடியாது.

இலங்கையில் சமாதானப் பயணம் மேற்கொண்டு வந்த நோர்வே அதனை ஏற்படுத்த ஈடுபட்டபோது எத்தனையோ இன்னல்களையும் சந்தித்தது என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

"நோர்வேயை வெளியேற்ற வேண்டும்", "நோர்வேயின் அனுசரணைப்பணி தேவையில்லை" என்ற தோறணையில் தென்னிலங்கை இனவாதக் கழுகுகள் கொக்கரித்ததும், நோர்வேக் கொடி தீயிட்டுக் கொழுத்தப்பட்டதும், நோர்வே அனுசரணையாளர்கள் தூசிக்கப்பட்டதும் நடந்தேறிய சம்பவங்கள்.

இவை நோர்வேக்கு எதிராக தென்னிலங்கை இனவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கையாக அமைந்தாலும், அதன் உட்கிடை தமிழருக்கு எதிரான நடவடிக்கையாகவே அமைந்திருந்தது என்பது தான் உண்மை.

சமாதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால், தமிழரை அழித்தொழிக்கும் படலத்தை தொடரமுடியாது போகும் என்ற ஆதங்கமே நோர்வேக்கு எதிரான இனவாதிகளின் கொக்கரிப்பாக அமைந்திருந்தது. மேலும் தமிழ் மக்களுக்கு இலங்கையில் எவ்வுரிமையும் இல்லை என்ற கயமைத்தனமான இனவாதக் கோட்பாட்டுக்கு நோர்வேயின் வருகை ஆபத்தாக அமைந்துவிடுமோ என்ற அச்சமுமே இனவாதிகளின் நோர்வேக்கு எதிரான நடவடிக்கையாக அமைந்திருந்தது.

இவற்றுக்கெல்லாம் அப்பால் நோர்வேயின் சமாதானப் பணிகள், அனுசரணைச் செயற்பாடுகள் தொடர்ந்தமை பாராட்டத்தக்க விடயமே.

இரு துருவங்களாக நின்ற அரசாங்கத்தையும், விடுதலைப்புலிகளையும் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் இணைத்து, சமாதானப் பாதையின் தடைகளை அகற்றி நாட்டில் அமைதிச் சூழலை உருவாக்கியதில் நோர்வேக்கும் பெரும் பங்கு உண்டென்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

இலங்கைத்தீவின் சமாதானப் பயணம் தாய்லாந்தில் ஆரம்பித்து, ஆறுசுற்றுப் பேச்சுக்கள் வரை சென்றமைக்கும் அதற்கான ஏற்பாட்டு



க்கும் கடும் பிரயத்தனத்துடன் நோர்வே உழைத்தமையை நன்றியுடன் நினைவுகூர்ந்தேயாகவேண்டும்.

ஆனால் இத்தகைய நிலைமைகளுக்கெல்லாம் அப்பால், இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரம் நோர்வேயின் சமாதானப்பணி தொடருமா என்ற சந்தேகத்தை கிளப்பியிருக்கிறது.

### விலகும் சாத்தியம்

புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்றதிலிருந்து சமாதான முயற்சிகள் அல்லாடிக் கொண்டிருக்கின்றன. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சியின் போது ஜனாதிபதி பாதுகாப்பமைச்சை பிடுங்கி எடுத்ததிலிருந்து இலங்கையின் சமாதானம் கேள்விக்குறியாகி அந்தரத்தில் தொங்கிக்கொண்டுதான் இருந்தது. இன்றுவரை அதே நிலைமைதான். மேலும் சமாதான முயற்சிகள் முடங்கி, இரகசியப் போர் முஸ்தீபுகளிலும், புலனாய்வு, வேவு நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அத்துடன் நாட்டில் தொடருகின்ற வன்முறைகள் பாதுகாப்பையே நிலைகுலையச் செய்துள்ளது.

சந்திரிகா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான நம்பகத்தன்மையின் இடைவெளி அதிகரித்து வருகிறது. இவ் இடைவெளி நீண்டு சென்றால்.... அடுத்தகட்டம் இலங்கைத்தீவில் அபாயம் வெடிக்கும் என்பது உறுதியாகிவிடும்.

இத்தகையதொரு நெருக்கடியான யுத்தம் வரப்போகின்றதென்ற அமைதிச் சூழலில், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் இலங்கைக்குப் பறந்து வந்தார். அவரின் வருகை சமாதான நடவடிக்கையில் புதுத்தெம்பை அளிக்கும் என்று ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட போதும் நிலைமை தலைகீழாகியுள்ளது.

விதார் ஹெல்கீசனின் சமாதானப் பயணம் எந்த வித முன்னேற்றமுமற்ற



வெறும் பயணமாக அமைந்து விட்டமையை அவரது சந்திப்பின் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

சமாதானத்தை ஏற்படுத்துவதில் இலங்கையில் இவ்வளவு இடைஞ்சல்களா என்ற மலைப்பையும் ஹெல்கீசனுக்கு இவ்விஜயம் உணர்த்தி விட்டிருக்கிறது.

புத்துணர்ச்சியுடன் பறந்து வந்த ஹெல்கீசன் இலங்கையின் இன்றைய நிலைமையால் சோர்வடைந்துள்ளார் என்பதை அவரது கருத்துக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

"இலங்கையில் யுத்தம் வெடிக்கப் போகின்றது" என்ற அவரது அபாயச் சங்கொலி, நோர்வேயின் சமாதானப்பணிக்கு இலங்கையில் இனி இடமில்லை என்பதையே கோடிகாட்டி நிற்கிறது.

போர் மேகங்கள் திரண்டிருப்பதையும், இடியுடன் பெரும்போர் மழையாகப் பொழியும் அபாய நிலைமை முகிழ்ந்து வெடிக்கத் தயாராகியிருப்பதையும் ஹெல்கீசனின் கருத்துக்கள் உணர்த்தியிருக்கின்றன.

இத்தகைய அபாயகரமான நிலைமை உச்சஸ்தாயியை அண்மித்து வருவதால் நோர்வே இலங்கை

கோவையூர் ஜெயன்

யின் அனுசரணைப் பணியிலிருந்து விலகுவதாக வெளியிடும் அறிவிப்பு மிக விரைவில் வெளிவரலாம் என்ற எதிர்பார்ப்பு பரபரப்படைந்திருக்கிறது.

நிலைமை கட்டுமீறிச் செல்லும் சூழலில் நோர்வே எடுக்கக்கூடிய நடவடிக்கையாக விலகும் சூழலே உருவாகலாமென அச்சத்தோடு முன்னுணரப்படுகின்றது.

* * *

# இரும்புத்திரையின் பின்னால் வடகொரியா!




ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக மேற்குலகின் அதி தீவிர கவனத்தை ஈர்த்திருக்கும் நாடு வடகொரியா என்பது அரசியல் அவதானிகளிடம் காணப்படும் ஒருமித்த கருத்தாகும்.

ஐக்கிய அமெரிக்காவுக்கு அரை நூற்றாண்டு காலமாகச் சவாலாக விளங்கிய சோவியத் ரஷ்யாவை, உலகம் இரும்புத்திரையால் மூடப்பட்ட நாடு என்று வர்ணித்து வந்தது. அந்நாட்டின் கம்யூனிஸ அரசியலைத் தனது நாட்டிற்கும் வரித்துக்கொண்ட வடகொரியா இன்று இரும்புத்திரையால் மூடப்பட்ட நாடு என்று வர்ணிக்கப்பட்டுவருகிறது.

வடகொரியாவிலிருந்து மக்கள் களவாக வெளியேறி அண்டைநாடுகளான சீனா, கம்போடியா, ஜப்பான், வியட்நாம் போன்ற நாடுகளில் தஞ்சமடைகின்றனர். மீண்டும் அந்நாடுகளிலிருந்து தென்கொரியாவுக்கு அழைத்துவரப்படுகின்றனர். இந்நிலைமைகளுக்குக் காரணமென்ன என்பதை அறியச் சற்று கொரிய வரலாற்றைப் புரட்டிப்பார்ப்போம்.

கொரிய நாட்டின் மீது அதன் அண்டை நாடுகளான சீனா, ஜப்பான், ரஷ்யா ஆகியவை எப்பொழுதும் ஒரு கண் வைத்தபடியே இருந்து வந்தன. 1904 - 5ஆண்டில் ரஷ்யாவுக்கெதிரான போரில் ஜப்பான் வெற்றியீட்டியதும் அதன் ஆதிக்க மனோபாவம் மேலோங்கியது. அருகிலிருந்த கொரியாவை ஜப்பான் 1910இல் கைப்பற்றி இரண்டாம் உலகப்போர் வரையிலும் ஆட்சி செய்துவந்த்து.

ஹிரோஷீமா நாகசாகி மீதான அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலில் ஜப்பான் அமெரிக்காவிடம் சரணடைந்தது. அதனைத்தொடர்ந்து கொரியாவினுள் அமெரிக்கா உட்புகுந்தது. அதன் வடபகுதியை சோவியத் படைகள் ஆக்கிரமித்தன. சோவியத் சர்வாதிகாரி ஜோசப் ஸ்ரலினுக்கும், அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்




படையில் கொரியா, வடக்கு - தெற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தெற்கில் அமெரிக்கா ஜனநாயகத்தையும், முதலாளித்துவ பொருளாதாரத்தையும் அறிமுகம் செய்த அதேவேளை வடக்கில் சோவியத் ரஷ்யா கம்யூனிஸத்தை அறிமுகம் செய்து கெரில்லாத் தலைவராகவிருந்த கிம் - இல் - சுங்கைத் தலைவராக்கியது. அதன் பிற்பாடு கொரிய தீபகற்பம் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலான பலப்பரீட்சைக் களமாக மாறியது.

1950இல் தென்கொரியப் படையினரில் அரைவாசிப்பேர் விடுமுறையிலிருந்தபோது வடகொரியா தென்கொரியாவைத் தாக்கியது. உடனடியாக ஜப்பான் தளத்திலிருந்து சென்ற அமெரிக்கப் படைகள் கடும் இழப்பைச் சந்தித்தன. அதற்கிடையில் வடகொரியத் துருப்புக்கள் அவற்றின் திறமையான பயிற்சி காரணமாகத் தென்கொரியாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றியிருந்தன.

ஐ.நா. தீர்மானத்திற்கமையப் பதினான்கு நாடுகள் ஒன்றிணைந்து 3 இலட்சம் துருப்புக்களை அனுப்பி இழந்த பகுதிகளை மீட்டெடுத்தன.

இரண்டாம் உலகப்போரின் அமெரிக்க நாயகனாகத் திகழ்ந்த ஜெனரல் மக் - ஆர்தர் ஜனாதிபதியின் கட்டளைகளை மதிக்காமல் தொடர் போர்ப்பிரகடனம் செய்தமையால் பதவி நீக்கப்பட்டார். போரின்போது ஒரு கட்டத்தில் சீனாவும் உள்ளிறங்கிக் கூட்டுப்படைகளை எதிர்த்தமையால் பின்வாங்கும் நிலைமையும் ஏற்பட்டது.




மூன்று வருடங்கள் நடந்த இந்தப்போரில் இரு கொரியாக்களையும் சேர்ந்த இரண்டு மில்லியன் பொதுமக்களும், 1.5 மில்லியன் கம்யூனிஸ படைகளும், முப்பதாயிரம் அமெரிக்கப்படையி


பேதுரு யேசுதாசன்
B.A (Hons) pol.science
ACIM (uk), Dip. in Journalism

னரும், நான்கு லட்சம் தென்கொரியப் படையினரும், ஆயிரம் பிரிட்டிஷ் படைகளும் கொல்லப்பட்டனா.

அமெரிக்க ஆட்சி மாற்றத்தின் காரணமாக 1953இல் ஜனாதிபதி ஐசனோவர் கொரியாவில் அணுவாயுதப் பிரயோகம் செய்யப்போவதாக அறிவித்தார். ஆனால் 1953 யூலை 27இல் சோவியத் சர்வாதிகாரி ஜோசப் ஸ்ரலின் திடீர் மரணமடைந்ததைத் தொடர்ந்து கம்யூனிஸ உலகமே ஸ்தம்பித்தது. கொரியப்போரும் முடிவுக்கு வந்தது.

அதன்பிற்பாடு சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு, இறுதித்தீர்மானம் ஒன்று பின்னர் எட்டப்படும் என்று தீர்மானிக்கப்பட்டபோதும் இதுவரை எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை.

ஆனால் சோவியத் அதிபர் ஜோசப் ஸ்டலின் காலத்திலிருந்து இன்றுவரை கொரியாவை ஒன்றிணைத்து அதனைக் கம்யூனிஸ நாடாக்கவேண்டும் என்று வடகொரியக் கம்யூனிஸ்டுக்களும், அதனை ஜனநாயக நாடாக்க வேண்டு




மென்று தென்கொரிய ஜனநாயகவாதிகளும் இடையறாது பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் அமெரிக்க ராஜதந்திரத்திற்கு மாபெரும் சோவியத் வல்லரசே பலியாகிப்போன பிற்பாடு வடகொரியா "கொழுகொம்பற்ற கொடி" எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த அரைநூற்றாண்டு காலமாக வட்கொரியா கடுமையான கம்யூனிஸ ஆட்சியில் இருந்துவருகிறது. அங்கே என்ன நடக்கிறது என்பதே தெரியாத நிலையில் மேற்குலக வல்லரசுகளின் உளவுப்படைகள் அந்நாட்டின் நடவடிக்கைகளைக் கடுமையாகச் சோதித்து வருகின்றன.

வடகொரியா உலகின் அதிகமான இரசாயன ஆயுதங்களைக் கையிருப்பில் வைத்திருக்கும் நாடாகவும், தனது தேசியவருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கைப் பாதுகாப்புக்குச் செலவிடும் நாடாகவும் இருந்துவருகிறது. அணுவாயுதங்களைத் தயாரிக்கும் நிலையிலும் அது விளங்குகிறது.

ஐ.நா.வின் ஆதரவுடன் அந்நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதாரத் தடை காரணமாக வறுமையும் வேலையில்லாப் பிரச்சினையும் அங்கு தலைவிரித்தாடுகின்றன.

22.5மில்லியன் சனத்தொகையைக் கொண்டுள்ள அந்நாட்டில் 18லட்சம் நிரந்தரப் படையினரும், 4.7 மில்லியன் தற்காலிகப் படையினரும் உள்ளனர். நான்கில் ஒருவர் படைவீரராக இருக்கிறார்.

அங்கு நிலவும் வறுமை, சமூக சுதந்திரமின்மை காரணமாக மக்கள் பெருந்தொகையில் வெளியேறுகின்றனர். அண்மைக்காலமாக யுத்தமொன்றைத் தொடங்கப்போவதாக அந்நாடு பாவ்லா காட்டிவருகின்ற போதும் சர்வதேச நெருக்குதல்கள் காரணமாகத் தனது நிலைப்




பாட்டில் முக்கிய தீர்மானம் எடுக்கவேண்டிய கட்டத்தில் அது நிற்கின்றது.

இருதுருவங்களாக விளங்கும் இரண்டு கொரியாக்களுமே ஒன்றிணைந்து ஒரே நாடாக வேண்டும் என்பதே பெரும்பாலான கொரியர்களின் அவாவாக இருக்கிறது. இதன் காரணமாகவே வடகொரியாவிலிருந்து வெளியேறும் கொரியர்களைத் தென்கொரியா தனது நாட்டிற்குள் உள்வாங்குகிறது.

உலகநாடுகளும், கொரியர்களும் எதிர்பார்ப்பதுபோல வடகொரியாவின் இரும்புத்திரை அகன்று மக்கள் சுதந்திரமாக அந்நாட்டில் உலாவரும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

# கேள்விக்குறியாக உள்ளது





**கேள்விக்குறியாகி உள்ளது சமாதானத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் விடுதலைப்புலிகள் நாளேட்டில் பிரசுரமாகிய கட்டுரை வாசகர்களுக்காக....**

# சமாதானத்தின் எதிர்காலம்

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சந்திரிகா அம்மையாரின் குழப்பகரமான கருத்துக்களும் சிங்கள அரசின் ஸ்திரமின்மையும் ஒன்று சேர்ந்து சமாதானச் சூழலைக் கேள்விக்குறியாக்கி வருகின்றது. சமாதானப் பேச்சை அர்த்தமுள்ளதாக்க தேவையான அரசியல் நடைமுறைகளை புலிகள் இயக்கம் தெளிவாக வரையறுத்து உலகிற்குத் தெரியப்படுத்தியுள்ளது. கசப்பான கடந்தகால அனுபவங்களைக் கருத்தில் எடுத்து பேச்சுக்கள் இடைநடுவில் குழம்பாவண்ணம் விவேகமான வகையில் அரசியல் நிகழ்ச்சி நிரலை புலிகள் வரைந்து அரசிடம் கையளித்திருந்தனர்.

ஆனால் சந்திரிகா அரசு இதுவரை புலிகளின் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்ளவும் இல்லை, முற்றாக நிராகரிக்கவும் இல்லை. அதற்குப் பதிலாக நேரத்திற்கு ஒரு கருத்தைக் கூறி காலத்தைக் கடத்தும் தந்திரத்தையே அது கடைப்பிடித்து வருகிறது.

1994ஆம் ஆண்டு அம்மையார் வெளியிட்ட தீர்வுப் பொதியின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடாத்தப்படவேண்டும் என்று அவர் பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார். அத்துடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க ஒரு ஆலோசனை சபை வேண்டுமென்று கூறி அதற்கு நாடாளுமன்று உறுப்பினர்கள் கொண்ட சபை அமைக்கப்படும் என்றும் அம்மையார் கூறியுள்ளார். அம்மையாரின் முன்னைய தீர்வுப்பொதி தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு எப்போதோ செத்துப்போய்விட்டது. பத்து வருடங்களின் பின் மீண்டும் அதற்கு உயிர் கொடுக்க அம்மையார் முனைவது எந்தப் பயனையும் கொடுக்கமாட்டாது. ஏற்கனவே இருக்கின்ற அமைப்பு முறையே சமாதானத்தை முன்நகர்த்த உதவாத போது மேலும் ஒரு சபை என்ற கருத்து சலிப்பைத் தருவதாகவே உள்ளது.



இதேவேளை அம்மையாரின் ஆட்சிப் பங்காளிகளான ஜே.வி.பியினர் பேச்சுவார்த்தை எப்படி நடத்தப்படவேண்டும் என்று சிங்கள மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர். இவையெல்லாம் தற்போதைய சமாதானச் சூழலுக்கு ஏற்புடைய விடயங்களல்ல.

பேச்சை அரசு விரும்பவில்லை, பேச்சை நடாத்தும் நிலையிலும் அரசு இல்லை என்ற உண்மையைத் தான் காட்டுகின்றன. ஒரு கூட்டத்தில் சமாதானம் பற்றி அம்மையார் ஒரு கருத்தைக் கூறுகிறார். பின்னர் அதை அவரே மறுக்கின்றார். அம்மையார் கூறியதற்கு முரணாக ஜே.வி.பி இன்னொரு கருத்தைக் கூறுகிறது. அதை அம்மையாரும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ஜே.வி.பி கூறுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சபையைவிட்டு விரட்டியடிக்க வேண்டும் என்று பச்சை இனவாதத்தை ஜே.வி.பித் தலைவரே கூறுகிறார். புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக நச்சுப்பிரசாரத்தை சிங்களப் பேரினவாத சக்திகள் வேகப்படுத்தியுள்ளன. ஜே.வி.பி இதில் முன்னணி வகிக்கின்றது. சிங்கள ஊடகங்களும் தமது பங்கிற்கு இனவாதப் பணி செய்கின்றன. கிராமங்கள் தோறும் ஜே.வி.பி. இந்த நச்சுப்பிரசாரத்தை தீவிரமாகச் செய்துவருகின்றது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக புலிகளின் நிலைப்பாடுகள் எதையும் ஏற்க மறுத்துள்ள ஜே.வி.பி. இப்போதே போர்ப்பிரசாரங்களை ஆரம்பித்துவிட்டது. சந்திரிகா அம்மையாரும் தமது கட்சியின் நிலைப்பாட்டை நிராகரிக்கவில்லை என்று ஜே.வி.பி. கூறிவருகின்றது.

இத்தகைய சமாதான விரோதக் கருத்துக்கள் தமிழ் மக்களை விரக்தியின் விளிம்புக்கு கொண்டுசெல்கின்றது. சமாதான வழியில் தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப்படமுடியாத ஒன்று எனத் தமிழ்மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சைத் தட்டிக்கழிக்கும் அதேவேளை சிங்கள அரசு தமிழ்த் தேசியத்தை சிதைக்க முனையும் அரசியல் சதிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. தனது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரைப் பயன்படுத்தி கிழக்கில் கொலைகளிலும் குழப்பத்தை உண்டுபண்ணும் செயல்களிலும் ஈடுபடுகின்றது. இத்தகைய சதி அரசியல் மூலம் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தலாம் என்று சிங்கள அரசு நினைத்தால் அது பல வரலாற்றுப் பாடங்களை மறந்து விட்டது என்பதுதான் அர்த்தமாகும்.

துரோகங்களும் சதிகளும் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக பலப்படுத்தியுள்ள பல வரலாற்றுச் சம்பவங்களை எமது போராட்ட வாழ்க்கையில் காணலாம். சமாதானத்திற்கு சாதகமாகவும் சிங்கள அரசு செயற்படவில்லை. போர் நிறுத்தத்தையும் அது மதிக்கவில்லை. ஆனால் சமாதானச் சூழல் நிலவுகின்றது என உலகிற்குக் காட்டவிரும்புகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சமாதானமும் இல்லை, அபிவிருத்தியும் இல்லை, மீள்குடியேற்றமும் இல்லை. அகதி வாழவும் தொலைந்தபாடில்லை. நிகழ்கால நிம்மதியுமில்லை, எதிர்கால நம்பிக்கையுமில்லை என்ற விரக்திநிலையிலேயே உள்ளனர்.

தமிழ் மக்களின் இந்த அரசியல் மனநிலைக்கு மதிப்பளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் புலிகள் இயக்கத்திற்கு உண்டு. போர்மூலம் தோற்கடிக்கமுடியாத தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சமாதானம் என்ற சதி அரசியல் மூலம் தோற்கடிக்க சிங்கள அரசு முயல்கின்றதோ! என்ற ஐயம் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

காலம் கடந்தபடி உள்ளது. சமாதானத்திற்காக காத்திருக்க புலிகள் தயார். ஆனால் சிங்கள அரசு ஒரு சூழ்ச்சிகரமான நிகழ்ச்சி நிரலை வைத்துக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்காக சமாதானச்சூழலை இழுத்தடிப்பதை உணர்ந்துகொண்டும் முட்டாள்த்தனமாகக் காத்திருக்க புலிகள் இயக்கம் தயாரில்லை. அதைத் தமிழ் மக்களும் அனுமதிக்கமாட்டார்கள். தமிழ் மக்களின் இந்த அரசியல் மனநிலையை சந்திரிகா அரசும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்.


# யானை சாணத்தில் காகிதம் இலங்கை சாதனை

**யானை சாணத்தில் காகிதம் தயாரித்து அமெரிக்க அதிபர் புஷ்ஷ"க்கு அனுப்பி அவரது கவனத்தை வெகுவாக கவர்ந்துள்ளனர் இலங்கை காகித தயாரிப்பாளர்கள்.**

**மாக்ஸிமஸ் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த காகித தயாரிப்பாளர்கள் நாளொன்றுக்கு 2தொன் யானை சாணத்தைப் பயன்படுத்தி காகிதப்பொருள்களைத் தயாரிக்கின்றனர்.**

**இத்தயாரிப்புகள் 75 சதவீதம் யானை சாணம் மற்றும் 25 சதவீதம் மறுசுழற்சி முறையில் உருவாக்கப்பட்ட கார்போட்டால் ஆனது. இத்தகைய காகிதப்பொருள்களைப் பெறுவோர் அதை முகராமல் இருக்கமாட்டார்களாம். காரணம் மூலப்பொருள்களின் 'வாசம்' அதில் வெளிப்படாமல் இருக்க நறுமணத்தைக் கலந்து இக்காகிதத்தை தயாரித்துள்ளனராம்.**

**2002 ஜ"லையில் அப்போதைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்தபோது அதிபர் புஷ், அவரது மனைவி லாரா மற்றும் வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஆகியோருக்கு யானைச் சாணம், மலர், தாவரங்களால், செய்யப்பட்ட காகிதத் தயாரிப்புக்களை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டு வந்தாராம்.**



# ஒலிம்பிக்

**ATHENS 2004**
**XXVIII OLYMPICS 13-29 AUGUST**



**மீண்டும் ஏதென்ஸ் நோக்கி...**
**ஒலிம்பிக்கிற்கு இன்னும் 14 தினங்கள்**

## கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில்...

### 24வது ஒலிம்பிக் போட்டி சியோல் (SEOUL) 1988

24வது ஒலிம்பிக் போட்டிகள் 1988ஆம் ஆண்டு தென்கொரியத் தலைநகரான சியோலில் (SEOUL) நடைபெற்றன.




**24, 25 ஒலிம்பிக் போட்டிகளுக்காக வடிவமைக்கப்பட்ட இலட்சினைகள்**

1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட தென். கொரிய ஜனாதிபதி **ROH TAE-WOO** ஒலிம்பிக் போட்டியினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை, ஒலிம்பிக் தீபத்தினை தடகள வீரர்களான **CHONG SON - MAN, KIMWON - TAK, SON MI - JONG** ஆகியோர் ஏற்றிவைக்க ஒலிம்பிக் சத்தியப்பிரமாணத்தை கூடைப்பந்தாட்ட வீரரான **HURJAE** என்பவரும், **HAND BALL** விளையாட்டு வீரரான **SON MI - NA** என்பவரும் செய்துவைத்தனர்.


24வது ஒலிம்பிக் போட்டியினை மிகவும் பிரமாண்டமாக நடாத்தியதன் மூலம் கொரியா உலக அரங்கில் தனது பெயரை நிலைநிறுத்திக்கொண்டது. இவ் ஒலிம்பிக் போட்டியில் 237 போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் 159-நாடுகளைச் சேர்




**சியோலில் நடைபெற்ற 24வது ஒலிம்பிக் போட்டிக்காக வடிவமைக்கப்பட்ட சுவரொட்டி.**

ந்த 8,391 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். அதில் 2,194 பெண்களும் 6,197 ஆண்களும் அடங்குவர். அத்துடன் 27,221 தொண்டர்களும், 11,331 ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.

சியோல் நகரின் எப்பக்கமும், ஒலிம்பிக் என்ற வாசகம் அனைவரையும் முணுமுணுக்க வைத்தது. சியோலில் இடம்பெற்ற இன்னோர் முக்கிய அம்சம் யாதெனில் அரசியல் சர்ச்சைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு கியூபா,எதியோப்பியா



**1988, 1992 ஆண்டுகளில் சியோல், பார்சிலோனியா ஆகிய இடங்களில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. இவ் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற மைதானங்கள்.**

ஆகிய நாடுகள் தங்கள் நாட்டு அணிகளை இவ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்பிவைத்தன.

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப



**24, 25ஆம் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட விளக்குகள்.**

நிகழ்வுகள் மிக கோலாகலமாக இடம்பெற்றன. 1936ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் மரதன் போட்டியில் வெற்றியீட்டிய கொரியாவின் **SOHN KEE CHUNG** தனது 72ஆவது வயதில் இவ்வருட ஒலிம்பிக் விளக்கை ஏந்தியவாறு அரங்கில் வலம்வந்து போட்டிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

சியோலில் நடைபெற்ற 24வது ஒலிம்பிப் போட்டியில் கனடாவின் தடகள வீரர் பென் ஜோன்சன் (**BEN JOHNSON**) உலகின் பார்வையைத் தன்பக்கம் திரும்ப வைத்தார்.

அதாவது, 100m ஓட்டப்போட்டியில் உலகையே பியக்கவைக்கும் வேகத்தில் ஓடிவந்து முதலிடம் பெற்றார். 9.78 வினாடிகளில் அவர் அத் தூரத்தை ஓடி முடித்ததும் ஒருகணம் அனைவரும் வியப்பின் எல்லைக்கே சென்றனர். 'உலகின் வேக மனிதன்' இவரே எனப் பலரும் ஆச்சரியத்தோடு புருவம் உயர்த்தினர்.

ஆனால் இந்த ஆச்சரியங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதாக பென் ஜோன்சன் மீதான போதைப் பொருள் பரிசோதனை அமைந்தது. பென் ஜோன்சனின் வேகத்தின் மீது சந்தேகம் கொண்ட சர்வதேச ஒலிம்பிக் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் அவரைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் போதைப்பொருள் பாவித்திருப்பது தெரியவந்தது. இதனால் அவரது பதக்கம் பறிக்கபபட்டது மட்டுமல்லாது, அவர் இரண்டு வருடங்களுக்கு எந்தவித சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றுவது தடைசெய்யப்பட்டது.




**1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்காக அறிமுகப் படுத்தப்பட்ட MASCOT.**

இதன்மூலம் 100m ஓட்டப்போட்டியில் இரண்டாவது ஸ்தானம் பெற்ற அமெரிக்க வீரர் கார்ல் லூயிசுக்கு தங்கப்பதக்கம் சென்றடைந்தது. இதே ஒலிம்பிக் போட்டியில் கார்ல் லூயிஸ் 200m ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

64 வருடங்களின் பின்னர் சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் மீண்டும் டென்னிஸ் போட்டி சேர்த்துக் கொள்ளப்பட்டது. இறுதிப்போட்டியில் ஸ்டெபி கிராப்(**STEFFI GRAF**) கெப்ரியல்லா சபாடினியை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றார். ஆண்கள் பிரிவில் பிலோஸ்லவ் மெக்கிர் சம்பியனானார்.

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டிகளில் புளோரன்ஸ் கிரிபீத் ஜொய்னர் (**FLORENCE GRIFFITH -JOYNER**) 200m ஓட்டப் போட்டியில் புதிய உலகசாதனையை ஏற்படுத்தியதோடு மொத்தமாக மூன்று தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

1972ஆம் ஆண்டு ஜேர்மனியில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சல் பிரிவில் நான்கு பதக்கங்கள் உட்பட மொத்தமாக ஏழு பதக்கங்களை வென்று மார்க ஸபிட்ஸ சாதனை படைத்தார். அவரது சாதனையை முறியடித்தார் அமெரிக்காவின் **MATT BIONDI.** இவர் நீச்சல் போட்டிகளில் 5தங்கம், 1 வெள்ளி, 1வெண்கலம் உட்பட 7பதக்கங்களை இவ்வருட ஒலிம்பிக் போட்டியில் வென்றார்.

1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதி ஆரம்பமான இந்நிகழ்வுகள் ஒக்டோபர் 02ஆம் திகதிவரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்ஒலிம்பிக் போட்டியில் பிரித்தானியா மொத்தமாக 132 பதக்கங்களுடன் முதலிடத்தையும் ஜேர்மனி 102 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தையும், அமெரிக்கா 94 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை போட்டியை நடாத்திய தென்கொரியா 12 தங்கம், 10வெள்ளி, 11வெண்கலம் உட்பட மொத்தமாக 33 பதக்கங்களைப் பெற்று ஐந்தாம் இடத்தைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### 25வது ஒலிம்பிக் போட்டி பார்சிலோனா (BARCELONA) 1992

இருபத்தைந்தாவது ஒலிம்பிக்போட்டிகள் 1992ஆம் ஆண்டு ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெற்றது. தென்கொரியாவின் சியோலில் இடம்பெற்றது போன்று 25வது ஒலிம்பிக் போட்டிகளைப் பிரமாண்டமாக நடாத்திக்காட்டியது ஸ்பெயின்.

1992ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25ஆம் திகதி ஆரம்பமான இவ் ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கல




**1992ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்காக வடிவமைக்கப்பட்ட சுவரொட்டி.**

ந்துகொண்ட ஸ்பெயினின் அரசன் மேன்மைமிக்க **JUAN CARLOS I** ஆரம்பித்துவைத்தார்.

இதேவேளை ஒலிம்பிக் தீபத்தினை **ANTONIO REBOLLO** ஏற்றிவைத்தார். அத்துடன் இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியின் சத்தியப்பிரமாணத்தை **LUIS DORESTE BLANCO** செய்துவைத்தார்.

இவ் ஒலிம்பிக் போட்டிகளில் 257 போட்டி நிகழ்வுகளுக்காக 169 நாடுகளைச் சேர்ந்த 9356 போட்டியாளர்கள் (2,704 பெண்கள் 6652 ஆண்கள்) கலந்துகொண்டனர். அத்துடன் 34,548 தொண்டர்களும்,



**24, 25 ஒலிம்பிக் போட்டிகளின்போது போட்டியாளர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள்.**

13,082 ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.

தொழில் ரீதியான பல போட்டிகள் இவ் ஒலிம்பிக் போட்டிகளில் சோத்துக்கொள்ளப்பட்டன. இப்போட்டிகளுக்கு அமெரிக்கா தனது கனவு அணியான (**DREAM TEAM**) கூடைப்பந்தாட்ட அணியை

**நேரயல்**

அனுப்பியது. இவ்வணியில் பிரபல வீரர்களான மெஜிக் ஜோன்சன், மைக்கல் ஜோர்டான், லெரிபோட் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இவ்வணியே இவ் ஒலிம்பிக் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றது.



**பார்சிலோனியாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்காக அமெரிக்கா அனுப்பிய கூடைப்பந்தாட்ட கனவு அணி.**

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியின் முக்கிய அம்சம் என்னவெனில் எல்லா நாடுகளும் இப்போட்டிகளில் கலந்துகொண்டதுதான். 1972 ஆம் ஆண்டிலிருந்து ஒலிம்பிக் போட்டிகளில் பல நாடுகள் பல்வேறு காரணங்களால் பங்குபற்றுவதை தவிர்த்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

(18ஆம் பக்கம் பார்க்க...)

**வியாசரே! தமிழன் தலைநிமிர்ந்து நடக்கும் நாள் வருமா?**

*ந.மதன்* *இணுவில்.*

வியா!
வாழ்க்கை கசந்தால் என்ன செய்வது?



**காவி உடுத்து காசி போவதுதான் ஒரேவழி.**

*V.இளங்கோ* *கோப்பாய்.*

வியா அண்ணே!
ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பாள் என்கிறார்கள். அப்போ ஒவ்வொரு ஆணின் தோல்விக் குப் பின்னும்...?

**"பின்னுமல்ல முன்னும் பெண் இருப்பாள்.**

*த.பிரியதர்ஷன்* *மல்லாவி.*

வியாசரே!
தமிழன் தலைநிமிர்ந்து நடக்கும் நாள் வருமா?

**தமிழ் மண்ணில் இருந்து மிதிவெடிகளை முற்றாக அகற்றியபின் சொல்கிறேன்.**

*இ.கலைச்செல்வன்* *வரணியூர்.*

வியா நண்பா!
எனக்கு எம்மதமும் சம்மதம். உமக்கு எப்படி?

**எனக்கும் உம்மதமே சம்மதம்.**

*ச.பிரபாகர்* *திருநகர்.*

வியா அவர்களே!
சிலையைத் திருடி விற்பவர்களை தெய்வம் ஏன் தண்டிப்பதில்லை?

**தன்னை விற்றாவது அவன் சீவியம் நடத்தட்டுமே என்ற இறைவனின் நல்ல குணம்தான்.**

*J.சுபாஷினி* *நல்லூர்.*

வியா !
யாழ்ப்பாணத்தில் நிலவும் பிரச்சினைகளில் அதிகமாக நிலவும் பிரச்சினை யாதாக இருக்கும்?

**கட்டாக்காலிகளின் (காதல்) பிரச்சினைதான்.**

**வியாசார் அவர்களே! சினிமா மோகத்தைப் பின்பற்றும் பெண்களைத் திருத்த என்ன வழி?**

*A.அனிதா* *பருத்தித்துறை.*

வியாசரே!
தானத்தில் சிறந்தது எது?

**''சமாதானம்''**

*T.சஞ்சயன்* *யாழ்ப்பாணம்.*

வியாசார்!
காலையில் நீங்கள் பருகுவது என்ன?



**மனைவி தரும் கொதி நீர்.**

*க.யாழினி* *கொக்குவில்.*

வியாசரே!
இவ்வருடத்தில புது மணத் தம்பதிகளாகியவர்களுக்கு உங்கள் அன்பான அறிவுரை என்ன?



**வாழ்க்கையில் எது நடந்தாலும் கணவன் மனைவிக்குள்ளேயே சங்கமமாகட்டும்.**

# வியாசர் பதில்கள்

*M.மரியதாஸ்* *மல்லாவி.*

வியா !
பெண்புத்தி பின்புத்தி என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்லுங்களேன்?

**நோர்வேயை கண்டித்துவிட்டு பின்னர் சமாதான முயற்சியை ஆரம்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது நல்லதொரு உதாரணமல்லவா?**

*S.R.சதுர்ஷா* *ஆனைக்கோட்டை.*

வியாசார் அங்கிள்!
எப்படி சுகமாக இருக்கிறீர்களா?

**உம்மிடம் மருந்து எடுத்தபின்னர் கொஞ்சம் பரவாயில்லை.**

*க.பிரவீன்குமார்* *சாவகச்சேரி.*

வியாசர்!
வாழ்க்கைச் சக்கரம் சுழல ஒரு எளிய வழி கூறுங்கள் பார்க்கலாம்?

**தம்பி, நீர் இன்னும் திருமணம் செய்யவில்லைப் போலிருக்கிறது.**

*S.விதுஷன்* *வண்ணையூர்.*

வியா மாமா!
நல்லபெயர் வாங்க என்ன செய்யவேண்டும்?

**கெட்டபெயர் வாங்காமல் இருக்கவேண்டும்.**

*S.துளசி* *யாழ்ப்பாணம்.*

வியா மாமா!
இரவில் அடிக்கடி கனவு வருகிறது. என்ன செய்யலாம்?



**மருமகனே! தனிமையில் உறங்குவதே நல்லது.**

**வியா! பெண்புத்தி பின்புத்தி என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்லுங்களேன்?**

*நா.மகேந்திரலிங்கம்* *கோப்பாய்.*

வியாசார் அவர்களே!
சினிமா மோகத்தைப் பின்பற்றும் பெண்களைத் திருத்த என்ன வழி?



**யார் அங்கே! சேவகர்களே, தொலைக் காட்சிப்பெட்டிகளைத் தூக்கி எறியுங்கள்....**

*தமிழ்ச்செல்வன்* *காரைநகர்.*

வியா அண்ணா!
அரசியல்வாதிகளின் நாக்கு எப்படிப்பட்டது?

**துருவல்லைப் பல்லுப் போன்றது.**

*S.நித்தியா* *கொக்குவில்.*

வியாசரே!
படித்த பெண்களிடம் உள்ள சிறப்பு என்ன?

**''படித்ததன்படி நடக்காமை''**

*ஜொய்ஸி* *குருநகர்.*

வியா!
நீர் பேருந்தில் பயணிக்கும்போது பெண்களுக்குப் பகிடிவிடுவதில்லையா? (முழுப்பாமல் சொல்லும்).

**நான் பகிடிவிடப் பெண்கள் விடுவதில்லை.**

# வாசகர் பதில்கள் இல —19

## மனைவியை வேலைக்கு அனுப்புவது பற்றி உங்கள் கருத்து யாது?

வெளிநாட்டிலும் சரி, உள்நாட்டிலும் சரி, இப்போது அனேக குடும்பங்களில் மனைவியின் கௌரவமான கடினமான உழைப்பால்தான் வாழ்க்கை வண்டியே நகர்கின்றது.
இதையிட்டு பெருமைப்படுவதில் தவறில்லை.
புதுக்கவி.

கட்டியவளையே விற்று பிழைக்கும் ஆண்கள் மத்தியில் அவளை வேலைக்கு அனுப்பி வைத்து அவளுக்கு பணிவிடை செய்வது எவ்வளவோ மேலானது.
ஆரனியா, வேலணை.

மனைவியை வேலைக்கு அனுப்புவதால் வீட்டு நிர்வாகம் சீர்குலையும் என்பது உண்மைதான்! ஆனால் வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் ஒருவரின் உழைப்புடன் வாழ்க்கையை நடத்துவது மிகவும் சிரமம். இதனால் இருவரும் வேலைக்குச் சென்றால்தான் ஓரளவில் குடும்ப வாழ்வை சமாளித்துக் கொண்டு போகமுடியும் என்பதை மறுக்க முடியாதுள்ளது.
பா.செல்வராணி, வட்டுக்கோட்டை.

கணவன் மனைவி இருவரும் ஒருமித்து வாழ்வதே இலவாழ்க்கை. இதில மனைவியை வேலைக்கு அனுப்பினால் வீட்டில் பல சிக்கல்கள் தோன்றும் வீட்டு வேலைகள், சிறுவர் பராமரிப்பு போன்றன பாதிப்படையும். வேலை முடிந்துவரும் கணவனை உபசரிப்பதில் கவனக்குறைவு உண்டாகும். இதனால் தம்பதியர்களுக்கிடையில் விரிசல ஏற்பட்டு மன அழுத்தங்கள் உணடாகி நிம்மதி கடையாது. விளங்குதா கவிநிலா.
கந்த.ஞானமுத்து. கைதடி.

**தரமான பதில் தந்த முகவரிகள்**
- R.தர்சினி, யாழ்நகர்.
- S.செல்வி, நல்லூர்.
- இ.ராஜன், வல்வெட்டி.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய காலகட்டத்தில் ஒருவரின் உழைப்பைக் கொண்டு வாழ்க்கை வண்டியை ஓட்டுவது மிகவும் கஷ்டமானது.
எனவே குடும்பம் நல்ல நிலையிலிருக்க மனைவியை வேலைக்கு அனுப்புவதில் தவறில்லை.
S.நித்தியா, கொக்குவில்.

கால வளர்ச்சியின் வேகத்தில் ஒருவனின் உழைப்பு ஒரு குடும்பத்திற்கு போதுமானதல்ல. இந்நிலையில் மனைவியை வேலைக்கு அனுப்பி தன் சுமையைக் குறைக்க கணவன் எண்ணுவதும் தவறல்ல. ஆனால் தன் சுமையைக் குறைக்க வேலைக்குப் போகும் மனைவியை மதித்து அவள் சுமைகளுக்கும் தோள் கொடுத்தால் என்றும் இனிமையே!
S.ராணி, திருநெல்வேலி.

# வாசகர் பதில் இல - 21

## நேரத்தை அதிகம் வீணாகக் கழிப்பவர்கள் ஆண்களா? பெண்களா? எவ்வாறு?

இக்கேள்வியை அனுப்பிய சங்குநாத வாசகி ஜெகசுபதா, நல்லூர்.
உங்கள் பதில்கள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 07 - 08 - 2004.
உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-
'வாசகர் பதில்'
சங்குநாதம்
இல- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

# ஔவையும் முருகனும்

சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கப்பட்ட காலங்களில் ஆண்பாற் புலவர்கள் போல் பெண்பாற் புலவர்களும் நினைவுகூரத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர். இப்பெண்பாற் புலவர்களுள் ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளிவதியார், பூதப்பாண்டியன் தேவியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் படைப்புக்கள் தமிழ் உலகில் நிலைத்து நிற்கின்றன.

இவர்களுள், ஔவையார் தமிழ்ப் பெரும் மூதாட்டி என்று பலராலும் போற்றப்படுகின்றார். ஆனால் எமது துரதிஷ்டம் இவ் ஔவையார் பரம்பரையினரைப் பற்றிய வரலாற்று ஆய்வு இன்னும் ஒரு தெளிவான இடத்தை அடையவில்லை. இன்று கிடைக்கும் அவர்தம் படைப்புக்களைக் கொண்டே அவரைப்பற்றி அறியமுடிகிறது.

சங்ககால ஔவையாரை அடுத்து இன்னுமொரு ஔவை மூதாட்டி சோழர்காலத்திற் காணப்படுகின்றனர். கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் போன்றோர் மத்தியிற் சிறப்பான இடத்தை வகித்தவராக இவ் அம்மையார் காணப்படுகிறார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் அதன் வளர்ச்சிக்குப் புலவர் பரம்பரையினருக்கு அவ்வப்போது கடவுளர்கள் துணைசெய்துள்ளனர். உதாரணமாக நக்கீரர், அருணகிரிநாதர் ஆகியோருக்கு முருகனும், நாயன்மார்களுக்குச் சிவனும, ஆழ்வார்களுக்குத் திருமாலும் அருள்பாலித்ததை நாம் அறிகன்றோம்.

இவ்வரிசையில் ஔவையாரும் விநாயகப்பெருமானிடம் பால், தேன், பாகு, பருப்பு முதலியவற்றைக் கலந்து உனக்கு உணவாகத் தருகிறேன். 'நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா' என வேண்டிநிற்கிறார். இவவேளையில் ஔவைக்கும் கலியுகவரதனுக்கும் என்ன தொடர்பு இருந்திருக்கலாம் என்று அறிய ஆவல் மேலிடுகின்றது. ஔவை விநாயகரிடம் கேட்டதைப் போல் முருகனிடம் கேட்டதாகக் கிடைத்த அவர் படைப்புக்கள் மூலம் அறிய முடியவில்லை.

மேலும் ஔவையார், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான்பெருமாள் நாயனார் ஆகியோருக்குமுன் கைலையங்கிரியைத் தான் அடைந்தமைக்குக் காரணம் விநாயகப்பெருமானே என்பதை,

``மதுர மொழிநல் உமையாள்
சிறுவன் மலரடியை
முதிர நிலையவல், லார்க்கரி
தோமுகில் போன் முழங்கி''
எனக் கூறுகிறார்.

விநாயகர் மீது 'சீதக்களப' என்னும் அகவலைப் பாடி வணங்கினார் எனவும் தெரியவருகின்றது. ஆனால் இவ்வாறான நெருக்கமான தொடர்பு ஔவைக்கும் முருகனுக்கும் இல்லாவிட்டாலும் உரையாடல் நடந்ததாக ஏறக்குறைய ஐந்து பாடல்கள் மூலம் தெரியவருகின்றது.

ஔவையின் சமகாலத்துப் புலவர்களாகக் கூறப்படுபவர்களுள் ஒருவரான ஒட்டக்கூத்தர் சோழன் அரசசபையில் செல்வாக்கு மிக்கவர். இதனாலே தன்னுடன் புலமைத்துறையில் முன்னிற்கும் புகழேந்தியுடன் சந்தாப்பங்கள் கிடைக்கும்போதெல்லாம் சீண்டிக்கொண்டே இருப்பார். ஔவை இச்சந்தர்ப்பங்களில் கூத்தரின் கர்வத்தை ஒடுக்கிப் புகழேந்தியும் சளைத்தவரல்ல என்பதை நிலைநாட்டுவர்.

இத்தகைய புலமைமிக்க ஔவை ஒரு மாடுமேய்க்கும் சிறுவனாலே தோற்கடிக்கப்பட்டார் என்றால் தமிழ் உலகம் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. அச்சிறுவன் வேறு யாருமில்லை. முருகனே அச்சிறுவனாகத் தோற்றமெடுத்து ஔவையின் புலமையைச் சோதிக்கிறார். ஔவையாருடன் முருகனைச் சேர்த்தெண்ணும்போது அனைவருக்கும் ஞாபகத்தில் வருவது சுட்டபழம் சுடாதபழம் என்பதாகும். சுட்டபழமா? சுடாதபழமா? வேண்டுமென்று கேட்ட சிறுவனிடம் பழத்திலும் சுட்ட பழமுண்டா? என்று ஆச்சரியப் பட்ட ஔவை சுட்டபழத்தைக் கேட்கிறார். நிலத்தில் விழுந்த பழத்திலிருந்து மணலை நீக்க, ஊதி ஊதிச் சாப்பிடுகிறார். அப்போது சிறுவன், 'பாட்டி, பழம் சுடுகிறதா?' என்று கேட்கிறான்.

அவன் அறிவை எண்ணி வியந்த ஔவை அவனை அண்ணாந்து பார்த்து உனக்குத் தோற்றேன் என்றார். அப்போது அங்கு முருகப்பெருமான் தோற்றமளிக்கிறார். ஔவையின் உள்ளம் நாணி,

``கருங்காலிக் கட்டைக்கு
நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் -
பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற



காளைக்கு நான்தோற்றேன்
ஈரிரவும் துஞ்சாதென் கண்''
என்கிறார்.

இறைவனிடம்தானே தோற்றது என்று அவர் அமைதியாகிவிடவில்லை. அதனால் இரண்டு இரவுகளுக்குத் தன் கண் நித்திரையினைப் பெறாது என வருத்துதல் நயக்கத்தக்கது.

தன்னிடம் தோற்ற ஔவையிடம் முருகன் சில கேள்விகளைக் கேட்டு அவர் மூலம் அரிய உண்மைகளைக் கூறவைக்கிறார். அவரிடம் முதலில் உலகிற் கொடியது எது என்கிறார். வறுமை, இளமையில வறுமை, ஆற்றொணாக் கொடுநோய், அன்பிலாப் பெண்டிர் இவையே கொடியது என்று முதலிற் கூறியவர் இவற்றிலும் கொடியது,

``.................................
அதனினும் கொடிதே
இன்புற அவள் கையில் உண்பது தானே''
என்கிறார்.

இல்லறத் தலைவி கொடியவள் எனத் தெரிந்தபின்னும் அவள் கையால் வாங்கியுண்ணும் ஒரு ஆண்மகன் நிலையே எல்லாக் கொடியவற்றுள்ளும் கொடிது என்று கூறியது இன்றுவரை ஏற்கக்கூடியதே.

அடுத்து இனியது எது என்று வினாவுகிறார். 'இனியது இனியது ஏகாந்தம் இனியது' என்று கூறியவர் சற்றுச்சென்று ஆதியைத்தொழுதல் இனியது என்றவர், இறுதியில் அறிவுள்ளாரைக் கனவிலும் நனவிலும் காண்பதே இனியது என்கிறார்.

உலகிற் பெரியது எது என்று கேட்டபோது அதற்களித்த ஔவையின் விடை ஆழமான அவர் அறிவுள்ளத்தைத் துலக்கிநிற்கிறது. சாதாரணம் போன்றவர்களைப் பெரியது எது என்று கேட்டால் எம்மைப் படைத்துக் காத்தழிக்கும் இறைவன் என்றே கூறுவோம். பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்! என விளித்து முதலிற் புவனத்தைக் கூறிப் பின் படிப்படியாகப் புவனத்தைப் படைத்த நான்முகன், நான்முகன் உதித்த கரியமால் துயின்ற அலைகடல், அலைகடல் அடங்கிய குறுமுனி, குறுமுனி பிறந்த கலசம், கலசம் ஆக்கப்பட்ட புவிமண், புவியைத் தாங்கிய ஆதிசேடன், ஆதிசேடனை மோதிரமாகக்கொண்ட உமையவள், உமையவளைப் பாகத்திற் கொண்ட இறைவன் எனக் கூறி இறுதியில்,

``.................................
இறைவனே தொண்டா உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும்
பெரிதே''

எனக்கூறி, தொண்டர் பெருமையை அழகாக உயர்த்திவிடுகிறார். தொடர்ந்து அரியது எதுவெனில் தானமும், தவமும் தரித்தலே என்கிறார்.

இவ்வளவு மிகக்குறைந்த அளவான பாடல்களே ஔவை, முருகன் தொடர்பை அறிய உதவுகின்றன. அவற்றுள் சுட்டபழம், கொடியது, பொது, அரியது, இனியது என்பவற்றின் விளக்கங்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒரு சிறந்த முத்திரையைப் பதித்துள்ளன.

மேலும், தென்பாண்டி நாட்டில் உள்ள ஔவையார் கோயிலும, தமிழ் நாட்டுப் பகுதிகளில் பெண்கள் கடைப்பிடிக்கும் ஔவையார் நோன்பும் இன்றுவரை அவர் பெருமையை நிலை நாட்டி நிற்கும் சான்றுகளாகும்.

☼ ☼ ☼

# ஆண்டவனுக்கு அடிமை செய்!

ஒருமுறை கிருஷ்ண பரமாத்மா தனக்குப் பொறுக்கமுடியாத தலையிடி எனப் பாசாங்கு செய்தார். அது உண்மையான மாதிரி நடித்தார். கம்பளியால் தலையை மூடிக் கொண்டு படுக்கையில் நிம்மதியில்லாமல் புரண்டுபுரண்டு படுத்தார். கண்கள் சிவந்து சரியான கஷ்ரத்தில் இருப்பது போன்று காணப்பட்டார். முகம் வீங்கி வெளுத்திருந்தது.

ருக்மணிதேவி, சத்யபாமா இன்னும் மற்றும் இளவரசிகளும் அங்குமிங்குமாக ஓடி, கிருஷ்ணபகவானுடைய தலைவலியைக் குறைக்க மருந்தும், மூலிகைகளும் தேடினார்கள். ஒரு மருந்தும் பலனளிக்கவில்லை. கடைசியாக நாரதமுனிவரிடம் யோசனை கேட்டார்கள். அவர் உடனே நோயாளியின் அறைக்குள் சென்று, என்ன மூலிகொண்டுவந்தால் தலைவலி மாறும் என்று கேட்டார்.

கிருஷ்ணபரமாத்மா, நாரதரைப் பார்த்து என்ன கொண்டுவரும்படி கூறினார்?, அது என்ன மூலிகையென்று நினைக்கிறீர்கள்? அவர் கேட்ட மூலிகை இதோ.

"உண்மையான பக்தனுடைய கால்பட்ட தூசு கொண்டுவரும்படி நாரதரைக் கேட்டார்." உடனே கிருஷ்ண பரமாத்மாவின் உண்மையான சில பக்தர்கள் முன் நாரதமுனிவர் தோன்றிக் கேட்டார், உடனே தங்கள் ஆண்டவனுக்குக் கால்பட்ட தூசை எவ்வாறு மருந்தாகக் கொடுக்க மனம் இணங்குவது என்று தயங்கினார்கள். ஒருவரும் கொடுக்க இணங்கவில்லை. தாங்கள் மிகவும் எளியவர்கள் என்று கூறி மறுத்துவிட்டனர். தாங்கள் ஒன்றுக்கும் பற்றாதவர்கள் எனக் கூறி விட்டனர். மனமுடைந்த நாரதமுனிவர் நோயாளியின் அறைக்குத் திரும்பி வந்தார்.

"பிருந்தாவனத்தில் உள்ள கோபிகாஷ்திரிகளிடம் கேட்டீரா?" என் நாரதமுனிவரைக் கண்ணபிரான் வினவினார். இதனைக் கேட்ட இளவரசிகள் 'கொல்' என்று சிரித்தார்கள். நாரதமுனிவரும் அதிசயப்பட்டவராக

"அவர்களுக்கு பக்தியென்றால் என்ன என்று தெரியுமா?" எனக் கேட்டார். இருந்தும் முனிபுங்கவர் அவர்கள் இருக்கும் இடம்தேடி ஓடினார்கள். கிருஷ்ணபரமாத்மாவுக்குத் தலையிடியென்றும், தங்கள் காலிலுள்ள தூசு மாற்றக்கூடுமாம் என்றும் கோரப்பட்டமையினால் உடனே அவர்கள் மறு உத்தரம் பகராமல் தங்கள் பாதங்களை ஆட்டி அசைத்து கால்களிலிருந்து விழுந்த தூசுகளைக் கைகளினால் ஏந்தி முனிவரிடம் கொடுத்தார்கள். நாரதமுனிவர் தூவாரகாபுரிக்கு வருவதற்கு முன்பே, பரமாத்மாவுக்குப் பிடித்த தலையிடி பறந்து விட்டது.

# அவரிடம் கூலி கேட்காதே!

ஐந்து நாட்களில் நடாத்திய இந்த நாடகத்தில் கிருஷ்ணபரமாத்மா எதைத் தெளிவாக்கியுள்ளார்? ஒருவன் தன்னைத் தாழ்த்துவதினால் இன்னும் தன் முனைப்பின் பிடியில் உள்ளான் என்பதனையும், பக்தர்கள் ஒரு தடையுமில்லாமல், ஆண்டவன் கட்டளைகளைச் சிரசின்மேல் கொள்ளவேண்டும் என்பதுமேயாகும்.

# என்னைப் பாட வைத்தவள்

அங்கம் -4

தொடர்கதை

அலெக்ஸ் பரந்தாமன்

பகல் பொழுதை முற்றாக விரட்டியடித்துவிட்டு இருள் மெல்ல எழுந்துவரத் தொடங்கியது. மின்மினிப் பூச்சிகள் ஆங்காங்கே பறந்து திரிந்துகொண்டிருந்தன. எங்கேயோ இருந்து மயில் ஒன்று தன் பாரிய இறக்கைகளை சடசடவென அடித்தவாறு பறந்துகொண்டிருந்தது. வானத்துச் சந்திரனின் வெண்ணொளிக் கதிர்கள் பூமியைப் பொன்னிறமாகப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தன.

பயணக்களை தீரும் வரைக்கும் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தான் பரமநாதன். நிலவின் ஒளியிலும் மென்மையான கூதற் காற்றிலும் அவனது உடல் சிலிர்த்துக்கொண்டிருந்தது.

''கிளியக்கா... கிளியக்கா...''

வீட்டுப் படலையடியிலிருந்து வந்த அந்த இனிமையான குரல் அவனது காதுகளில் எதிரொலித்தது.

'ஆஹா! இதென்ன குரலா... இல்லைக் குயிலா...?' அவன் தனக்குள்ளேயே சந்தேகித்தவனாய்,

''ஆரது....?'' என்று குரல் கொடுத்தான்.

''அது நான்...'' என்றவாறே புவனா உள்ளே வந்துகொண்டிருந்தாள்.

புவனாவைக் கண்டதும் பரமநாதனின் உள்ளம் பரவசப்பட்டது.

மாலைநேரம் பயணத்தால் வரும்போது கிளி கூறியவை அவன் நினைவுக்கு வந்தன.

'புவனா, நான் இப்ப வீட்டை போறன். இரவுக்கிடையில பெரியப்பா வராட்டி நீ வீட்டைப் பூட்டிப்போட்டு வந்து எங்களோடை இரு.'

'ஓ...! அதுதான் புவனா இரவு தங்கிறதுக்கு இஞ்சை வாறாளோ...?'

பரமநாதனுக்கு அதை நினைக்க ஆனந்தமாக இருந்தது.

வீட்டு முற்றத்தில் பாலாய்ப் பொழிந்துகொண்டிருந்த வெண்ணிலவின் வெளிச்சத்தில் பாய் ஒன்றை விரித்துவிட்டு அதன்மேல அமர்ந்திருந்தவாறே சம்பாசித்துக் கொண்டிருந்தார்கள் சரவணமுத்தும் சிவபாக்கியமும்.

குசினியினுள் இரவுச் சாப்பாட்டுக்காக இடியப்பமாவை தட்டில் பிழிந்துகொண்டிருந்தாள் கிளி. அவளுக்குப் பக்கத்தில் புவனாவும், சுகுணாவும் இருந்து அவளோடு கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

புவனாவைக் கண்ட அவதியில் தனது குளிப்பை முடித்துவிட்டு, வீட்டுமாலிலே தொங்கிக் கொண்டிருந்த கண்ணாடியில் முகம் பார்த்து தலையிழுத்துக்கொண்டான் பரமநாதன். புவனா குசினிக்குள் இருப்பதைக் கண்டதும் அவசர அவசரமாகச் சுவாமி அறைக்குள் சென்று திருநீற்றுத் தட்டத்தில் விரல்களைப் பதித்தெடுத்து திரும்பி நடந்துகொண்டே நெற்றியில் திரிபுண்டரமாக இழுத்துக் கொண்டு குசினிக்குள் நுழைந்தான்.

''இந்தா தேத்தண்ணி. குளிச்சிட்டு வந்தனி, சுடச்சுடக் குடி....'' அடுப்புமேடையிலே ஒரு கோப்பையில் ஊற்றிவைக்கப்பட்டிருந்த தேநீரை எடுத்துத் தன் தம்பியிடம் நீட்டினாள் கிளி.

பரமநாதன் தேநீரை வாங்கிக்கொண்டான்.

'புவனா தேத்தண்ணி குடிச்சிருப்பாளோ...?' அவன் தனக்குள் சந்தேகித்தவனாய் கிளியைப் பார்த்துப் பொதுவாகக் கேட்டான்,

''நீங்கள் எல்லோரும் தேத்தண்ணி குடிச்சிட்டியளே....?''

''ஓமடா! நீ குடி...'' கிளி அன்பாகக் கடிந்துகொண்டாள்.

''புவனா...?''

தன்னுடைய பெயரைப் பரமநாதன் உச்சரித்ததைக் கண்டதும் திடுக்கிட்டாள் புவனா.

''நான் குடிச்சிட்டன். நீங்கள் குடியுங்கோ''

புவனா வாய்திறந்து பேசியது அவனுக்குத் தேன்மதுரமாக இருந்தது.



''அண்ணை! நீங்கள் வேலை செய்யிற இடத்திலை என்ன புதினங்கள்? சொல்லுங்கோவன்...''

அவனது செல்லத்தங்கை சுகுணா அண்ணனிடம் கதை கேட்கும் ஆவலில் அவன் வாயைக் கிளற ஆரம்பித்தாள்.

''அங்கை ஒண்டும் பெரிசா இல்லை. முந்தநாள்தான் வேலை செய்யிற ஒரு பொடியன் முதலாளியோடை பிரச்சினைப்பட்டவன்''

''பிரச்சினையோ...! ஏன்ராப்பா?'' அடுப்புக்குள் விறகைத் தள்ளியவாறு கேட்டாள் கிளி.

''ஏதோ சம்பளப் பிரச்சினை''

''உன்னோடையும் ஏதும் பிரச்சினையே...?''

''சீச்சி...''

''உனக்கு இன்னொருவனுக்குக் கீழை நிண்டு வேலைசெய்யுறது ஒத்துவராது. என்னவோ போய் நிற்கிறாய் கவனம்'' கிளி அவனை எச்சரித்தாள்.

பரமநாதனுக்கு சுதந்திர மனப்பான்மை அதிகம். குறுகிய வட்டத்துக்குள் நின்று வாழ்வது அவனுக்குப் பிடிக்காத விடயம். பல இடங்களுக்குச் செல்லவேண்டும்; பல குணவியல்புகளைக் கொண்ட மனிதர்களோடு பழகவேண்டுமென்ற கொள்கையுடையவன் அவன். எவருக்கு முன்பாகவும் வளைந்துபோகாத தன்மையும், அநியாயங்களுக்கு அடிபணிந்து போகாத குணமும் கொண்டவன். இதனால்தானோ என்னவோ அவன் நிலையாக ஒரு தொழில் பழகியதுமில்லை, நிரந்தரமாக ஓரிடத்தில் தொழில் பார்த்ததுமில்லை.

அத்தோடு, அவனுக்கு நிறையவே வாசிக்கும் பழக்கம் உண்டு. கண்ணிலே தென்படுகின்ற, கரங்களிலே அகப்படுகின்ற எந்த நூலானாலும் வாசித்தே தீருவான். இந்த வாசிப்புப் பழக்கத்தால் சமூகத்தில் தான் பார்த்தவற்றை, அனுபவித்தவற்றை எழுத்துருவாக்கத் தொடங்கினான்.

இதன் நிமித்தம் அவனது பல கவிதைகளும், சில சிறுகதைகளும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமாகியிருந்தன. ஆனாலும், அவன் இலக்கிய உலகத்தில் இன்னமும் அறியப்படாதவனாகவே இருந்தான். காரணம் அதிகம் படித்தவர்கள்தான் ஆக்கவாதிகளாக இருக்கமுடியுமென்றதொரு தோற்றப்பாடு இன்னமும் நிலவிவருகையில், ஓர் அரிசி ஆலையிலே முதுகிலே நெல்லுமூடை சுமந்து கூலிவேலை செய்யும் ஒரு சாதாரண, படிப்பிலே குறைந்த அறிவுள்ள ஒருவனை ஆக்கவாதி என்று எப்படி அடுத்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்?

இந்த யதார்த்தத்தை அவன் நன்கு புரிந்துகொண்டாலும், அது குறித்து அவனோ கவலைப்படுவதில்லை. மனதிலே தனக்கென்றொரு கொள்கை. எழுத்திலே தனக்கென்றொரு நடை. முகமனுக்குச் சிரித்து முதுகிலே குத்தும் இலக்கியப் போலிகளை எட்டத்திலே வைக்கும் தன்மை. எவரையும் இலகுவில் நண்பர்களாக ஏற்றுக்கொள்ளாத குணம்.... அவன் இன்றுவரை பலராலும் அறியப்படாதுபோனமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.

வேலைத்தலத்தில் ஏதோ பிரச்சினை என்றதும், கிளி அவனை எச்சரித்தது அவனின் குணம் அறிந்தே.

பரமநாதனின் எண்ணமெல்லாம் தனக்கு மிக அருகாமையில் இருக்கும் புவனாவோடு எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்பதையே எண்ணிக்கொண்டிருந்தது.

''அண்ணை! நீங்கள் எழுதின சிறுகதையொன்று பேப்பரிலை வந்ததல்லோ. நாங்கள் எல்லோரும் அந்தக் கதையைப் படிச்சனாங்கள். புவனாக்காவும் அதைப் படிச்சிட்டு நல்ல கதையென்று கூறினவ...''

சுகுணா கூறிமுடிக்கவில்லை. பரமநாதன் ஆச்சரியத்தோடு புவனாவை நிமிர்ந்து பார்த்தான்.

தான் விரும்பும் ஒரு நல்ல உள்ளம் தனது சிறுகதையொன்றை நல்லது எனக் கூறியதைத் தெரிந்துகொண்ட பரமநாதன் பெருமையடைந்தான்.

''எப்படி நல்ல கதையா...?''

புவனாவோடு கதைக்க வேண்டுமென்பதற்காக அவளோடு பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தான் பரமநாதன்.

''ஓமோம்! நல்லகதை. ஒரு சைவக்கோயிலிலை அன்னதானம் கொடுக்கிறோம் என்ற போர்வையில் ஏழ்மைப்பட்ட, தாழ்த்தப்பட மக்களைப் பாகுபாடாக நடாத்தும் மனிதர்களை இனம்கண்டு நன்றாகச் சாடியிருக்கிறீர்கள்.''

புவனாவின் புகழ்ச்சியுரை அவனைச் சிறிது வெட்கமடையச் செய்தது.

'பக்தகோடிகள்' என்ற தலைப்பில் எழுதிய அந்தச் சிறுகதையை, அரிசி ஆலையில் தொழில் புரியும் அவனது சக தொழிலாளர்கள் சிலர் படித்துவிட்டு, பரமநாதனை நன்கு பாராட்டியிருந்தார்கள்.

இப்போது புவனாவும் அந்தக் கதை குறித்துப் பாராட்டிய போது, பரமநாதனுக்கு இதயத்தில் இனம்புரியாத ஒரு மகிழ்வு ஏற்பட்டது.

''அந்தக் கதையை எழுதுவதற்கான கரு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?'' புவனா கேட்டாள்.

''அந்தப் 'பக்தகோடிகள்' கதை, இணுவில் பகுதியில நான் ஒரு மில்லிலை வேலைசெய்யும்போது, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலிலை நடந்த ஒரு சம்பவம் அது''

''ஒருநாள் அந்தக் கதையை எழுதி, அதை மேசையிலை வைச்சிட்டு நான் வெளியிலை போயிட்டன். பிறகு வந்தா, அந்தக் கதை குறித்து முதலாளி என்னோடை காரசாரமாக விவாதிக்கத் தொடங்கிவிட்டார். நானும் விட்டுக்குடுக்கேல்லை.

முடிவில் அடிதடியில் இறங்கவேண்டிய கட்டம் வந்திட்டுது. அண்டைக்கு மட்டும் கூட வேலை செய்தவன் என்னைப் பிடிச்சிருக்காவிட்டால், என்ரை கையிலை கிடந்த சவள் அவற்றை தலைமண்டையைப் பிளந்திருக்கும்....''

கூறும்போதே அவன் முகம் இறுக்கமடைந்ததை அவதானித்தாள் புவனா.

''அந்தக் கதை குறித்து முதலாளி ஏன் உங்களோடை ஆத்திரப்படவேணும்...?''

''அந்தக் கதையிலை அன்னதானம் கொடுத்த பெரியமனிதன் அந்த முதலாளிதானே!''

''ஓ....!''

புவனா வியப்புடன் அவனை நோக்க, கிளியும், சுகுணாவும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''இவன் இப்படித்தான் புவனா நடந்ததை அப்படியே பகிரங்கப் படுத்திப்போடுவான்.'' என்றாள் கிளி.

(பாட வருவாள்...)

# மௌனத்தின் தேடல்கள் – 20

## ஒரு தாயின் சபதம்

கஞ்சிதான் சமைக்கின்றேன்
என் பிஞ்சுகள் பசிபோக்க
பட்டினி எம் நண்பன்
பசிப்பிணி எம் தோழன்
புற்றரை எம் படுக்கை
நிலா முற்றங்கள் எமக்கில்லை
எத்தனை இன்னல்கள்...
எத்தனை துன்பங்கள்...
நீ எப்படியடித்தாலும்
எப்படி வதைத்தாலும்
எம் கைகள் உள்ளவரை
எம்மைக் காக்க....
எம் பிள்ளைகள் உள்ளவரை
உன் கால்டி விழமாட்டோம்
உன் பாதம் தொழமாட்டோம்!

புதுக்கவி

## அந்த மரமா? அகதிமுகாம்

ஓ.... அன்றொருநாள்
கூடிவாழ்ந்த உறவுகளெல்லாம்
குண்டுவிமானத்தின் சத்தம்கேட்டு
திக்குத்திசை தெரியாது தலைசுழல
கூடிழந்த குருவிகளாய் வெளியேறியோர்
யாருமே கவனிப்பாரின்றி மரநிழலில்
பொழுதைக் கழிப்பதைப் பாருங்கள!
இனியும் இழக்க ஏதும் உண்டா?
பழைய பசளைப்பையில் கட்டிய
பொருட்கள் விருட்சத்தில் தொங்குகின்றன
இதுதானா - இவர்கள் தேடிய சொத்து
பாலுக்குப் பரிதவித்து பச்சிளம் குழந்தைகள்
படுக்கக்கூடப் பாயின்றி- வெறும்
பாரிலே சுருண்டு துயில்கின்றன - தாய்
முருங்கையிலையிலே சோறு தயாரிக்கிறார்
உதவிக்கரம் நீட்டுவோரே!
உடனடியாக இவரை மீட்டெடுங்கள்

இரா. குமரகுரு, பண்டத்தரிப்பு.

## போரெனும் நரகத்தால்!

போரெனும் தீயினால்
கருகியவர் எத்தனை பேர்?
கதிகலங்கி நின்றவர்கள் எத்தனை பேர்?
கணவனை இழந்தவர்கள் எத்தனை பேர்?
அங்கங்களை இழந்து
அங்கவீனமானோர் எத்தனை பேர?
சொந்த ஊரிழந்தவர்கள் எத்தனை பேர?
குடியிருந்த வீடிழந்தவர் எத்தனைபேர்!
கொஞ்சி மகிழ்ந்த
உறவிழந்தவர்கள் எத்தனை பேர்?
மருத்துவமின்றி மடிந்தவர்கள் எத்தனைபேர்?
இத்துன்பங்களையெல்லாம்
அனுபவித்தோர் எத்தனை எத்தனைபேர்?
இவற்றில் ஒன்றுதான் இக் குடும்பமும்!

V.S.தனேஸ்,
மல்லாவி.

## பயணத்தில் ஒன்று!

இரக்கமில்லாதவர்கள்
கந்தகம் தனைக் கக்கி
எமைத் துரத்துகையில்
கூடியிருந்து மகிழ்ந்த ஊரிழந்து
சொந்த உறவுகளிழந்து
அகதிகளானபோது
மரநிழல்களும்
ஓலைக்குடிசையும்தான்
எமக்குத் தஞ்சமாயின
அதன் நிஜப்படமாய்
இங்குமோர் அவலம்
மௌனத்தின் தேடலில்....

இன்பராஜ்,
மிசாலையூர்.

## தோற்றம்

இந்தப் பொல்லாத பூமியில்
தமிழர்களாய்ப் பிறந்ததற்காக
எமக்குக் கிடைத்த பரிசு
இதுதான்!
பட்டினியும் பசியும் ~ எமை
கட்டியணைத்ததால்தான்
நாம் இப்படி காட்சி
தருகின்றோம்!

க.விக்னா, திருமலை.

## நிதர்சனம்


வயல் உழுது நெல் அறுத்து
உண்டு களித்த உன் பொழுதை...
நாலறையில் வீடுகட்டி - நீ
வாழ்ந்த உன் வீட்டை....
நேற்று வந்த வேற்று மனிதர்
பறித்துப்போனார்!
அகதியாக ஆலமர நிழலில்
அடுப்பெரிக்கும் பெண்ணே!
நாளை அவைகூட நீயிருக்கமுடியாது
பறிக்கப்படும் – நீயோ ஊரூராய்
அகதியென்று அலையவேண்டும்
நான் பிறந்த புழுதி மண் எங்கே என்று
இந்தச் சிறுசுகள் – நாளை
உன்னைக் கேள்வி கேட்கும் அப்போது
அவர்கள் விடும் நெருப்புமூச்சுக்கள்
எதிரி உயிரையே விலைபேசும்!

M.சந்திரகலா, உரும்பிராய்.

## இடப்பெயர்வு

அன்று பாரினில்
வெடித்தது யுத்தம் – இன்று நாம்
தெருவில் இருக்கின்றோம்
இருக்க இல்லிடமின்றி
அணிய ஆடையின்றி
மகிழ்வாகக் குடிக்க குளிக்க
வீட்டில் கிணறின்றி
படுக்க இடமின்றி
அனாதையாக அலையும்
பெற்றோர் பிள்ளைகளின்
அவலவாழ்வை எண்ணி
வேதனையடைகிறேன்!
அவர்களின் வேதனை களைந்து
அவர்கள் சுதந்திரமாக வீடுசெல்ல
இறைவா! நீதான்
இரங்க வேண்டும்!

திருமதி. செ.பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை.



## பகைவனே...!

பொறுத்தார் பூமியாள்வார்
பொங்கினார் காடாள்வார்-என்பது
எமக்குத் தெரியாதா என்ன?
பொறுமை காத்திடுவோம்-நாம்
ஆனால் வெந்தபுண்ணில்
வேல் பாய்ச்சாதே! - எரியும்
வீட்டில் எண்ணெய்யை ஊற்றாதே!
நீரில் தத்தளிக்கையில்
தாட்டு விளையாடாதே!
இடம்பெயர்ந்து பரிதவித்து
நிற்கையில் பார்த்து நகைக்காதே!
பார் நமைப்பார்...!!
பொறுமைக்கும் எல்லையுண்டு
சீண்டாதே...!
நாமனைவரும் அணிதிரண்டால்
பொசுங்கிடுவீர் நீவீரெலாம்
உருத்தெரியாமல்!

வி.எஸ். ஜீபத்,
மல்லாவி.

## மரவீடு

ஆடுகட்டவும்
ஆறி அமரவும்
சோறு பொங்கவும்
சேர்ந்து விளையாடவும்
மரமே எமக்குப் புகலிடம்
இல்லை எமக்கு இது இல்லிடம்!

பா.லோகநாயகி,
பருத்தித்துறை.

## நம்பிக்கையோடு...

திறந்தவெளியில்
பிறந்தமேனியோடு - எம்
பிள்ளைகள்!-எம்மிடம்
பொருளாதாரமுமில்லை!
பொருட்களுமில்லை!
சொந்தமாய் நிலமுமில்லை!
அதனால்- நாம்
சோர்ந்து விடவுமில்லை!
நம்பிக்கொண்டிருக்கிறோம
நல்ல விடிவு வருமென்று!

சி.சங்கீதா,
நல்லூர்.

## முடிவில்லா வாழ்வு

எரிக்கப்படுகின்றது அடுப்பு – ஆனால்
அதில் வேகுவதோ அவளின் மனம்
தாயே உங்களின் வாழ்வோ
யுத்தத்தோடு போராட்டம்
மரநிழல் வாழ்க்கையோ உங்களிற்கு
நிரந்தரமாயின – ஆனால் நாளை
அருகில் எதையும் அறியாமல்
விளையாடும் இந்தச் சிறார்களின்
எதிர்காலம் யார் கையில்...?
அகதி என்ற பட்டம் – உங்களோடு
முடிவடையாது – இனி இவர்களோடும்
ஆரம்பமாகும் இதை உலகு உணருமா?


M.இந்திரகலா, யோகபுரம்.

## இனவாதத்திற்காய்...

கொழுத்தும் வெயிலுக்குள் இருந்து
குடும்பம் நடத்துகின்றோம் நாங்கள்
இதை அறிந்தும் நீங்களோ...
அரசியல் இலாபத்திற்காய்
உயர் பாதுகாப்பு வலயம் அவசியம் என
குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து
அறிக்கை விடுகின்றீர்கள்
இனவாதத்திற்காய் நீங்கள்- உங்கள்
மனிதாபிமானத்தை அல்லவா தொலைக்கின்றீர்கள்!

வி.மயூதாஸ், புலோலியூர்

## மௌனத்தின் தேடல்கள் – 22



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை *மிகச் சிறிய* கவிதைகளாக்கித் *தபால் அட்டையில்* சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

*கிடைக்கவேண்டிய இறுதித்திகதி* - 07.08.2004

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் - 22
சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## ஏக்கம் தீருமா...?

வானமே கூரையாகக் கொண்ட
எம் இல்லத்திலே வயிற்றை வளர்ப்பதற்கு
வாங்கிய உணவுப்பொருட்களை
உலையிலிட்டு வயிறார உண்டு
வாழ்வதற்கு வசதியாகக் கிடைத்த
இடம் இதுவே!
இடப்பெயர்வுகள் பல கண்டும்
இன்னல்கள் பல நேரிட்டபோதிலும்
எம் இதயத்தின் ஏக்கம் தீருமா...?
எம் வாழ்வில் எப்போது விடிவு ஏற்படும்...?

கந்த.ஞானமுத்து, கைதடி.

## ஏக்கத்தில்....

ஊர்கூடி உறவு கொண்டாடி
வாழ்ந்த காலத்தில்
உழுதுண்டு எமைக்காத்த தாய் நிலத்தில்
இனப்போர் மூண்ட காலத்தில் - கதிகலங்கி
கால்போன கோணத்தில்
கடல்கடந்து நாம் வாழ்ந்த சோகத்தில்
போரோய்ந்த கணத்தில்
ஊர்மீண்ட வேகத்தில் நாம் வாழ்ந்த
உறைவிடம் இருந்த கோலத்தில்
விளைநிலமும் பாதுகாப்பு வலயத்தில்- இன்று
எம் வாழ்வோ தெருவின் முற்றத்தில்....
எம் அழுகைக் குரலோ உலக அரங்கத்தில்
விடைகாண இன்னும் எத்தனை நாள்
என்ற ஏக்கத்தில்.....!

த.அகல்யா, சந்திதி.

## அனுப்புங்கள்

இது வெறும் கற்பனைச் சித்திரமல்ல
ஈழத்தமிழரின் நிகழ்காலச் சி(ச)த்திரம்!
இதனை அனுப்புங்கள் உயர்பாதுகாப்பு வலயம்
அவசியம் அவசியம் என அங்கலாய்க்கும்
அந்த இரக்கமற்ற பிறவிகளுக்கு
ஏனெனில்...
இதைப் பார்த்தாவது அவர்களின்
இதயம் இளகுகின்றதா? பார்ப்போம்.

தமிழ்ப்பித்தன், வராத்துப்பளை.

## நம்பிக்கை

மரநிழலே எங்கள் வீடானாலும்....
மனதுக்குள் வேதனைகளைச் சுமந்து நின்றாலும்....
ஏழை நிதமும் ஏழையாக வாழ்ந்ததுமில்லை!
பணக்காரன் என்றும் பணக்காரனாய்
இருந்ததும் இல்லை!
கஷ்டம் எங்களைத் தழுவியபோதும்....
எங்கள் இதயத்தில் என்றோ ஒருநாள்
நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையோடுதான்
வாழுகின்றோம்!


அ.தில்லைநாயகி. பொலிகண்டி.




# நந்தா நடிக்கும் 'அகரம்'

'மௌனம் பேசியதே', 'புன்னகைப் பூவே' படங்களைத் தொடர்ந்து நந்தா நடிக்கும் படம் 'அகரம்'. அவருக்கு ஜோடியாக ஹர்திப் சிங் என்ற புதுமுகம் நடிக்கிறார். இயக்குநர் அகத்தியன், சீதா, மலையாள நடிகர் பிஜுமேனன் நடிக்கின்றனர். இது ஒரு அக்ஷன் படமாகத் தயாராகிறது. 'அரவிந்தன்' படத்தை இயக்கிய நாகராஜ் இப்படத்தை இயக்குகிறார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்க. ஸ்ரீ புவனேஸ்வரி பிச்சர்ஸ் தயாரிக்கிறது.

# முரளியின் வேண்டுகோள்!



அழுத்தமான குடும்ப செண்டிமெண்ட் படங்கள் வந்தால் அதில் கண்டிப்பாக முரளி இடம்பெற்றிருப்பார். கொஞ்சநாட்களாக ஆளைக் காணவில்லை. திடீரெனப் பார்த்தால் மீரா வாசுதேவனுடன் 'அறிவுமணி' படத்தில் டுயட் ஆடிக்கொண்டிருந்தார்.

என்ன கொஞ்சநாட்களாக ஆளையே காணவிலலை என்று கேட்டால் பொலபொலவென கொட்டினார். நல்ல கதையம்சம் உள்ள படங்களில் மட்டும் நடித்துக்கொண்டிருந்தேன். ஒன்றரை ஆண்டுகளாகப் படங்கள் இல்லாததால் இடைவெளி ஏற்பட்டு விட்டது. 'அறிவுமணி' கதை மிகவும் அருமையான சப்ஜெக்ட். மிகவும் எதிர்பார்ப்புடன் நடித்திருக்கிறேன்.


எனக்கு கஷ்டம் வரும்போதெல்லாம் மீடியா நண்பர்கள்தான் தூக்கிவிடுவார்கள். என இந்த படம் வெற்றிபெற்று மீண்டும் திரையுலகில் பிரகாசிக்க உதவிசெய்யுங்கள். இப்போது வரும் படங்களெல்லாம் வேகமான அக்ஷன் படங்களாகவே இருக்கின்றன. குடும்ப சென் மென்ட், அழுகை, ஆர்ப்பாட்டம் இதெல்லாம் மறந்துபோய்விட்டது. அறிவுமணியில் இப்போதைய டிரண்டு போல வேகமும் இருக்கிறது. சென்டிமென்டும் இருக்கிறது.

வேகமான பாடல்கள், ஒரு பாடல் மன்மதராசா ரைப்பில் எடுத்திருக்கிறோம். பொதுவாக நான் வேகமான டான்ஸ் அசைவுகளை வைத்துக்கொள்வதில்லை. இப்போதைய டிரண்ட்ப வேகமான. அசைவுகள் தேவைப்படுகிறது. இந்தப் பாடல் காட்சியின்போது இடுப்பில் பலமுறை சுளுக்கியது.

உதவி இயக்குனராக இருந்து நடிப்புக்கு வந்தவன் நான். இயக்குநர் ஆகவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. வயது இருக்கும்போதுதான் நடிக்கமுடியும். ஆனால் எந்த வயதிலும் இயக்குநராக ஆகமுடியும்" என்றார்.

# ஜுனியா சுஹாசினி

தெலுங்கில் இந்த ஆண்டு இவர் அறிமுகமான 'சண்டிகாரு' 100 நாட்களைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறது. நம்ம பழைய ஹீரோயின் ரஞ்சனி சாயலில் இருக்கும் இவரது பெயர் சுஹாசினி. ஆந்திராவைச் சேர்ந்தவர்.



படித்துக்கொண்டே சினிமாவில் நடிக்க வந்துவிட்டார். சிநேகா நடிக்கும் 'அது' மூலம் தமிழில் அறிமுகமாகிறார். இச்சமயத்தில தனது படத்துக்கு ஹோம்லி ஹீரோயினை வெகுநாட்களாகத் தேடிக்கொண்டிருந்தார் இயக்குநர் கே.எஸ். ராஜ் (ராஜாவின் பார்வையிலே படத்தை இயக்கியவர்). அவரது பார்வையில் இப்போது அகப்பட்டுவிட்டார் சுஹாசினி.

ராஜ் இயக்கும் 'ஞாபகம் வருதே' படத்தில் இவர்தான் ஹீரோயின். கவர்ச்சியாக நடிக்கமாட்டோம் எனக்கூறும் ஒருசில நடிகைகளின் பெயர்களுடன் சுஹாசினியையும் சேர்த்துக்கொள்ளலாம். அமைதியான குணம் கொண்டவர் சுஹாசினி. ஷுட்டிங் ஸ்பொட்டிலும் அதிகம் பேசுவதில்லை. ஆனால் நடிப்பில் வெளுத்து வாங்குகிறாராம்.


கங்கை அமரனின் மகன் வெங்கட்பிரபுவை இவர் காதலிக்கிறார். ஆனால் எஸ்.பி.பாலசுப்பிரமணியனின் மகன் சரணுடன் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. இதுதான் 'ஞாபகம் வருதே' படத்தின் தீம் எனக்கூறும் ராஜ், 'சுஹாசினி மணிரத்தனம் விட்டுச்சென்ற இடத்தை இந்த சுஹாசினி பிடிப்பார்' என்கிறார்.

# நாயகியின் கும்மாளம்

'எனக்கே எனக்கா' படு வேகமாக வளர்ந்துவரும் படங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய படம். அதென்ன குறிப்பிட்டு என்கிறீர்களா? அரசாங்க இடங்களில் ஷுட்டிங் நடத்துவதற்கான கட்டணத்தை ஏகத்துக்கும் அரசு உயர்த்திவைத்திருக்கும் நிலையில்...


கொடைக்கானலில் பதினைந்து நாட்கள் முகாமிட்டு ஒரு பாடல் காட்சியை ஷுட் பண்ணினார்களாம். மஸ்துதானே இது? இது ஒருபுறமிருக்க..

பட்டப்பகலில், வெட்ட வெளியில் படத்தின் நாயகி ஆனந்தி போட்ட' கும்மாளததில் கொடைக்கானலே சூடாகிப் போனதாகச் சொல்கிறார்கள் நேரில் பார்க்கக் கொடுத்துவைத்தவர்கள்.




# சிம்பு – கோபிகா நடிக்கும் 'தொட்டி ஜெயா'

'காக்க காக்க' படத்துக்குப் பின் எஸ்.தாணு தயாரிக்கும் படம் 'தொட்டி ஜெயா' இப்படத்தில் தாடி கொண்டு பேட்டை ரௌடியாக நடிக்கிறார் சிம்பு. அவருக்கு ஜோடி 'ஆட்டோக்கிரா.:.ப்' கோபிகா. அஜித்தை 'முகவரி' வெற்றிப் படத்தைத் தந்த துரை, இப்படத்தை இயக்குகிறார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக் ஒளிப்பதிவு ராஜசேகர்.




# நாணயத்திற்கு மட்டுமல்ல செய்திக்கும் இரண்டு பக்கம்தான்!



சிம்ரன் இடத்தை சீக்கிரமே பிடிப்பேன் என சவால்விட்டுககொண்டிருக்கும் நமிதா தமிழ் பத்திரிகையாளர்கள் மீது கோபமாக இருக்கிறார். ஏன்? நமிதா நுங்கம்பாக்கத்தில் தனது தோழர் கபூருடன் சேர்ந்து இருப்பதையும், குடி- கூத்து பண்ணுவதையும் எழுதியதால்தான்.

அப்படியும் விக்ரமாதித்தனாய் விடாமல் பத்திரிகையாளர்கள் துரத்தினால்... தெலுங்கு பிரஸ்காரங்க பெர்ஸனல் லை:.ப் பத்தி எழுதுறதில்லை. ஆனா நீங்க கன்னாபின்னான்னு எழுதுறீங்க எனச் சொல்லிவிட்டு மறுபடி முருங்கைமரம் ஏறிவிடுகிறது நமீதா வேதாளம்.

ஆனால் இப்படி எழுதுற பிரஸ்சுக்கு தயாரிப்பாளர்கள் தாங்க்ஸ் பண்ணுகிறார்களாம். இது ஏன்....?

முன்னாடியெல்லாம் கபூரோட வந்து ஸ்பொட்ல டேக்குக்கு வராம ரென்சன் பண்வார். ஆனா இப்போ பத்திரிகையில வந்தபிறகு தொழில் பண்ணுற இடத்துக்கு தோழரைக் கூட்டிவர்றதில்லை என்கிறார்கள்.

செய்திக்கும் இரண்டு பக்கம்தான்.
நமீதாவுக்கு நஷ்டம். தயாரிப்பாளர்களுக்கு லாபம்!

# சினிமாச் சிதறல்




'கிரிவலம்' படத்தில் 'பாய்ஸ்' சித்தார்த்துக்கு பதில் ஷாம் நடிக்கிறார்.

- - - - - - - - - - - -

பிரசாந்த் - லகான் கிரேசிசிங் நடிக்கும் படத்திற்கு 28 ஸடெப்ஸ் அல்லது ஜாக்கி என பெயர்சூட்ட உள்ளனர்.

- - - - - - - - - - - -

'நியூ' வெற்றியால் எஸ்.ஜே.சூர்யா செம குஷியாக இருக்கிறார். ஆனால் சரத் தவிர வேறு எந்த ஹீரோவும் ஒரு போமால்ரிக்குக் கூட சூர்யா விடம் பேசவில்லையாம்.

- - - - - - - - - - - -

**'பிரியமான தோழி' எதிர்பார்த்த அளவு ஓடாததால் தனது அடுத்த படத்தை வேறு பாணியில் தரும் பணியில் இறங்கியிருக்கிறார் இயக்குநர் விக்ரமன். புதிய பட அறிவிப்பை விரைவில் எதிர்பார்க்கலாம்.**

- - - - - - - - - - - -

தேவயானியை வைத்து தெலுங்கில் படம் இயக்கிக்கொண்டிருக்கும் ராஜகுமாரன், விரைவில் தமிழ்ப்படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

- - - - - - - - - - - -


கமல் சூப்பராகக் கோப்பி போடுவாராம். சொல்லிப் பூரிப்படைகிறார் கவிஞர் வைரமுத்து. அதைக் குடிக்கவே நான் அடிக்கடி கமல் வீட்டுக்குச் செல்கிறேன் என்கிறார்.

- - - - - - - - - - - -

விஜயகாந்தின் அடுத்த படமான 'நிறைஞ்ச மனசுக்காரனில்' நடிக்க தொடர்ந்து 60 நாட்களுக்கு நவ்யா நாயரிடம் கால்ஷீட் கேட்டுள்ளனர். இதனால் இப்படத்தில் நடிப்பதா கூடாதா என யோசித்து வருகிறாராம் நவ்யா.

## வருகிறார் விந்தியா

**'கன்னி நிலா' படத்தில் நடித்துவரும் விந்தியா, 'ஒரு பிரமச்சாரியின் கனவு' என்ற புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இதில் லிவிங்ஸ்டன் ஹீரோவாக நடிக்க அவருக்கு ஜோடியாக நடிக்கிறார் விந்தியா. மேலும் ஓரிரு படங்களில் நடிக்கப் பேச்சுவார்த்தை நடக்கிறது.**




# ஷாக் திரைவிமர்சனம்

இந்தியாவில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற 'பூத்'தை மொழிமாற்றம் செய்து தமிழக ரசிகர்களுக்கு 'ஷாக்' கொடுக்க முயன்றிருக்கிறார் தியாகராஜன். நடிகர் நடிகைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. பாடல்கள் இல்லை. சண்டைகள் இல்லை. இவை எதுவுமே இல்லாமல் திகிலை மட்டுமே நம்பி படத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த முயற்சியில் ஒருசில இடங்களில் வெற்றிபெற்றும் இருக்கிறார்.

பிரமாண்டமான செட், கண்ணைப்பறிக்கும் லைட்டிங் என அரங்கிற்குள் செய்யக்கூடியவையும் இல்லை. அதே போல் அவுட்டோர் என்று சென்னைக்கு வெளியேகூடப் போகாமல் சென்னைக்குள்ளேயே ஒரேயொரு செட்டைப் போட்டு மொத்தப் படத்தையும் முடித்திருக்கிறார் விவரமான தயாரிப்பாளர் தியாகராஜன்.

படத்தின் முதல் பாதி மொத்தமும் எல்லாக் காட்சிகளிலும் பிரசாந்தும் மீனாவும் மட்டுமே வருகிறார்கள். ஷேர் மார்க்கெட்காரரான பிரசாந்த், வீட்டிலிருந்து கிளம்பி அலுவலகம் போகிறார். அங்கு வேலை முடித்துவிட்டு திரும்பவும் வீட்டுக்கு வந்து சேருகிறார். இதில் இரண்டு இடங்களில் கார் பார்க் பண்ணுவது உட்பட எல்லாச் செயல்களையும் காட்டுகிறார்கள். ஒரு மாற்றமும் இல்லாத இந்தக் காட்சி முதல் பாதியில் திரும்பத் திரும்ப வருகிறது. அது ஏன் என்றுதான் புரியவில்லை.



மிகச் சாதாரணமாகத் தொடங்குகிற படம் மீனா முதன்முதலில் கண்ணாடியில் பேயைப் பார்க்கும்போது சூடு பிடிக்கிறது. அந்தச் சூட்டை இடைவேளைக்குள் நமத்துப் போக வைத்துவிடுகிறார்கள்.

படத்தில் மொத்தம் ஒன்பதே நடிகர்கள். இவர்களில் சரத்பாபு, தேவன், அப்பாஸ், கே.ஆர்.விஜயா ஆகியோர் கொடுத்த வேலையைச் செய்துவிட்டுப் போகிறார்கள். நடிப்பதற்கு வாய்ப்புள்ள கரக்டர்கள் மீனா, பிரசாந்த், சுகாசினி, தியாகராஜன் ஆகியோருக்குத்தான்.

ஏற்கனவே பேயைப் பார்த்து வெறுத்துப்போயிருக்கும் ரசிகர்களுக்கு மேலும் வெறுப்பூட்டிய இன்னொரு பேயாக வருகிறார் சுகாசினி. உடலில் தெரியாவிட்டாலும் அவருடைய முதுமை முகத்தில் நன்றாகத் தெரிகிறது.



இன்ஸ்பெக்டர் சிவம்... நல்ல சிவம் என்று சுய அறிமுகத்தோடு வரும் தியாகராஜன் கொஞ்சம் சிரிப்பூட்டுகிறார். ரசிகர்களைக் குழப்பி பயப்படுத்துவதற்கென்றே கலைராணி வேலைக்காரி முனியம்மாவாக வருகிறார் (வேலைக்காரி என்றாலே முனியம்மா என்று பெயர்வைப்பதை எப்போ விடுவார்களோ?). அவர் எட்டுரூபாய்க்கு நடிக்கச்சொன்னால் எண்ணூறுரூபாய்க்கு நடித்துத் தள்ளியிருக்கிறார். பார்க்கச் சகிக்கவில்லை. தன்னுடைய கரக்டரைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் மீனா. கணவரோடு கொஞ்சுவது, பேயைப் பார்த்து பயப்படுவது, பேயாகவே மாறி ஆர்ப்பாட்டம் செய்வதென எல்லா நிலைகளிலும் ஓ.கே.

பிரசாந்த வழக்கம் போல எப்போதும் ஒரேமாதிரியாகவே இருக்கிறார். திறந்து கிடக்கும் வீட்டில் மனைவியைத் தேடும் நேரத்திலும் விறைப்பாகவே இருப்பது ஒட்டவில்லை.

இசையை ஒரிஜினலிலிருந்தே எடுத்துவிட்டார்கள் போலும். ஓரிரு இடங்களில் பயமூட்டுகிறது.

படத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் ஒளிப்பதிவு. எம்.வி. பன்னீர்செல்வம் திகில் படத்துக்குத் தேவையானமாதிரி ஷாட் வைக்கிறார். முதல் பாதியை ஒப்பிடும்போது இரண்டாவது பகுதி பரவாயில்லை.

பொதுவாக இம்மாதிரிப் படங்களில் பேய் என்பது பொய். யாரோ ஒருவனின் விளையாட்டு என்று முடிப்பார்கள். இந்தப் படத்திலோ பழி வாங்கும் மூர்க்கத்தில் இருக்கும் பேய், தான் குடியேறியிருக்கும் பெண், சட்டத்தால் பாதிக்கப்படுவாள் என்றதும் பழிவாங்காமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவைத்து விட்டு போய்விடுகிறது. பேய் இருப்பது உண்மைதான் என்பதுபோல முடித்திருப்பது நன்றா?

நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் ஆகியவற்றில் முதலிரண்டில் ஓ.கே வாங்கும் தியாகராஜன் தயரிப்பாளராகவும் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறார்.

- - - - - -

## மீண்டும் பல்லவி

**அம்பிகாவைப் போல பல்லவியும் சினிமாவில் நடிக்க வந்துவிட்டார். ஓரிரு ரீவி நாடகங்களில் நடித்த இவர் தற்போது 'மனசே மௌனமா' படத்தில் நடித்து வருகிறார்.**

- - - - -

## ஜெயிப்பாரா மாதவன்?

**'ரன்' படத்துக்குப்பின் பெரிய அளவில் வெற்றியைச் சந்திக்காத மாதவன், சீமான் இயக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். அடுத்த மாதம் இப்படத்தின் படப்பிடிப்புத் தொடாங்குகிறது.**




உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட ஒரு சர்வே மருத்துவம் படிக்கும் மாணவ மாணவிகளில் 75%பேர் படிக்கும்போதே செக்ஸ் வைத்துக் கொள்வதாகச் சொல்கிறது. இதனை மையமாக வைத்தே தனுஷ் நடிக்கும் 'டாக்டர்ஸ்' படம் உருவாகிறது.

# கவிதைக் கலசம்

## மௌனத்தின் தேடல்

என் இதயத்தின்
மௌனத் தேடல்கள்
இன்னும்தான் புரியவில்லை
அரும்பு மீசைத் துடிப்பில்
உதிர்ந்து விழும் - உன்
சிரிப்புக்கூட அப்படித்தானே
விதி வழியே வந்து - நீ
விழிகளின வழியே
காத்திருப்புக்களை
நீண்டதாக்குவதும்
கண்ணீரில் விம்பம்
பதித்துப்பின் துளியாய்
சிந்திச் சிதறுவதற்கும்
காரணம் தேடும்போது
காணாமல் போவதும்
இன்னும்தான் புரியலையே!
ஒன்று மட்டும் தெரியும்
கல்லறைக்குள் உறங்கும் உன்
காலடிகள் தேடிய - என்
கண்ணீர்ப் பயணம்
இன்னும் தொடர்கிறது.

M.சுதாகர், பருத்தித்துறை.





தொடங்குதலம் தூக்கியெறிதலம்
பிழை புரிதலும் வதைபடுதலம்
குழம்பிக் கலங்குதலம்
மீண்டும் தொடங்குதலம்
மீண்டும் தூக்கியெறிதலம்
வெற்றி பெற

## இன்றியமையாதவை

பேதுரு யேசுதாசன்

(கருமூலம் - லியோ டோல்ஸ்டோய்)

## சமூகத்துச் செய்திகள்

நேற்றய சேதி
நெஞ்சினைத் துளைத்தது
இன்றைய செய்திகளுடன்
பத்திரிகைப் பக்கங்களில் நான்!
சடலம் மீட்பு ~பாலியல்
வல்லுறவு, கோஷ்டி மோதல்
கொலைகள், திருட்டு
ஏனடா இவ்(ல்) வாழ்க்கை
என்றாகிற்று
நாளைய சேதிக்காய் என்
இதயம் தாழ்ப்பாழ்
போட்டுக்கொண்டது
தன் கதவறைக்கு
சமூகத்தின் கொடூரங்களை
சுமக்கமுடியாத...
மனப்பாரச் சுமைகளினால்
தாழ்பாழ் போட்டிருந்த
கதவறைக்குள்ளே
என்றோ ஒருநாள் என்மூச்சு
பேச்சின்றி நிற்கும்
இது உண்மை!

ஜெ.சுபாஷினி,
நல்லூர்.

## நிர்வாணமாய்....

எம்மைவிட்டுக்
கழற்றப்பட்ட அந்த
ஆடைபற்றிய நினைவுகளை
நாம் மறந்துபோய்
நிர்வாணமாகவே வாழப்
பழகிவிட்டோம்
அம்மணத்திலேயே -அழகு
பார்க்க தெரிந்துவிட்ட
எமக்கு அந்த ஆடைக்காய்
நாம் கொடுத்த விலைகள்
மறந்துபோச்சு
அதைத் தைப்பதற்காய் நாம்
சிந்திய உழைப்பு மறந்துபோச்சு
நிர்வாணத்தையே பரிபூரண
சுதந்திரமாய் எண்ணியபடி நாம்
அதனால்த்தான்
அவர்கள் இப்போதும்
எங்கள் வீதிகளில்
தங்கள் ஆடைகளுடன்
சுதந்திரமாய்.....
பவனி வருகிறார்கள்.

வேல்நந்தன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## என் காதல்

முகவரி தவறிப்போன
கடிதம் போல - என்
காதல் திசை மாறியதாய்
உணர்கின்றேன் - என்
காதலுக்கு அர்த்தங்கள்
தேடினேன் - அது
கண்ணுக்குத் தெரியாத
காற்றைப் போல....

R.சுகி,
வேலணை.

## உனக்குமா புரியவில்லை?

தனித்திருக்கின்றேன் ஆனால் தவமிருக்கவில்லை
பெயர் சொல்லி அழைக்க யாருமின்றி
பேச்சுத் துணைக்குக்கூட எவருமின்றி
தனிமைப் படுத்தப்பட்டதனால்
தவித்துப்போய்த் தனித்திருக்கின்றேன்

விழித்திருக்கின்றேன் ஆனால் விரதமிருக்கவில்லை
விழிவெள்ளம் கரைபுரண்டு பெருகுவதனால்
இமைகளெனும் அணைகள் வரிவடைந்து விட்டன
அவை இணையமுடியாது விலகியிருப்பதால்
வழியின்றி விழித்திருக்கின்றேன்

பசித்திருக்கின்றேன் ஆனால் நோன்பிருக்கவில்லை
உள்ளத்து இயக்கங்கள் உணர்வற்றுப் போனதனால்
உடல் இயங்க வேண்டுமென்று
உள்ளம் நினைக்காததனால்
உணவை மறந்து பசித்திருக்கின்றேன்



தவமின்றி தனித்திருந்து
விரதமின்றி விழித்திருந்து
நோன்பிருந்து பசித்திருந்து
நான் யாசிப்பது என்னவென்று
உனக்குமா புரியவில்லை.

பிரம்ம சாத்வி.

## உரிமை கொடு...

கார் காலக் காற்றில்
கலந்திடும் கனிவான வேளையில்
இனிய உன் நினைவுகளை
இன்றும் நினைவுடன்
சுமந்தவாறு என் பயணம்...

நெஞ்சம் மறக்காத
நெடுங்கால உறவாகி விட்ட
உயிரின் உயிரே!
ஓர் பொழுதில் உன் நினைவு
சுடும் தீயாகி எரிக்க.....
ஓர் பொழுதில் உன்நினைவு
நெஞ்சில் இதமாகி அணைக்க....
தவணைமுறையில் - என்னைக்
கொல்லும்....

கோடை காலத்து நதியாக
கொதிக்குமென் இதயத்தை
கொன்றுவிடு....!
நீ வந்து கொல்லும்வரை
உன்னோடு ஓர் நிமிடம்
நான் பேச உரிமை கொடு!

மா.சிவசோதி.
கரவெட்டி.

## வாழ்க்கை என்பது....

வாழ்க்கை என்பது
ஒரு இசை: அதைப் பாடு
ஒரு சோகம்: கடந்து வா
ஒரு துன்பம்: எதிர்கொள்
ஒரு கடமை: செய்து முடி
ஒரு ரகசியம்: கண்டுபிடி
ஒரு பரிசு: ஏற்றுக்கொள்
விளையாட்டு: விளையாடு
போராட்டம்: போராடு
புதிர்: தீர்த்துவை
சவால்: சந்தி
அழகு: ரசி
உண்மை: உணர்ந்துகொள்
பயணம்: முடி
வாக்குறுதி: நிறைவேற்று
லட்சியம்: அடைந்துவிடு
சந்தர்ப்பம்: பற்றிக்கொள்
சாதனை: துணிந்து செய்
அன்பு: கண்டுபிடி

-பகவத்கீதை சொன்னது.

## உதயம் வருமோ....

அழகு பொழிகின்ற மடியை மிடியாக்கும்
அழிவின் நதிமூலம் என்ன? நீலக்
கலகம் சொரிகின்ற குருதி மழை நீளச்
சபித்த ரிஷிமூலம் என்ன?

பல உறவு சேர்த்து பகிர்ந்து இதமுண்ட
பழைய சுகம் எங்கு போச்சு? - முகம்
கலைந்து சிதறுண்டு புவியில் அலைந்தோய்ந்து
கருகும் எமதன்பின் மூச்சு!

படலையடி வேலிக் ிளுவை நிரை தாண்டிப்
படரும் விசப்புற்று என்றாய் - தமிழ்
துடிக்கும் இதை மாற்றித் துரவை வடிவாக்க
முடியும்.... அட பாம்பே உன்னால்!

வரங்கள் பெற வேள்வி தவங்கள் புரிந்தேங்கிக்
கிடக்கு எமதன்னை பூமி வரும்
உறுதிமொழி.... சாபம் தனையே தருமென்றால்
உதயம் வருமோடா சாமி.

வ.சிவாஜி
கரணவாய்

## பிரியமானவனுக்கு....

பூட்டி இருந்த என்
இதயக்கதவினை
புன்னகை என்னும் பூட்டினால்
மெல்லத் திறந்தாய்
யாரும் அற்ற அனாதை இவளுக்கு
உறவென்று வந்து
ஒட்டிக் கொண்டவள் நீ!
சோகங்களே சொந்தங்கள் என்று
வாழ்ந்திருந்த எனக்கு
அன்புக்கு அர்த்தமும் சொன்னாய்
என் உயிர் மூச்சு நீயே என்று
வாழ்ந்திருந்தேன் – இன்று
என்னை விட்டு நீண்டதூரம்
சென்றதும் ஏன்? ஓ....!
இதுதான் விதியன்றோ –அன்பே!
நீயும் நானும் சேர்ந்திடும் ஓர்
இனிய நாளும் இங்கு வாராதோ
அதுவரை காத்திருப்பேன் உனக்காக
என் உயிர்மூச்சு உள்ளவரை....

சிந்து,
பருத்தித்துறை.

## வாசகர் நாதம்

வலம்புரி நாளிதழின் வாரமலராய்
வெள்ளி வைகறையில் எம் கைகளில்
தவழ்ந்திடும் சங்குநாதமே!
உன் புனித பணி இனிதே தொடரட்டும்!
சங்குநாதமே நீ உன்னுள் தாங்கி வரும்
அத்தனை அம்சங்களும் தரமானவை
இன்றைய நிலையில் அதுவும் யாழ். மண்ணில் இருந்து
வர்ண அச்சில் வெளியாகும் சங்குநாதத்தின் மகிமை
பாராட்டத்தக்கது.
குறுக்கெழுத்துப் போட்டி. தேடல் அறிவை வளர்ப்பதுடன்
எமது திறமைக்கும் சவாலாகவும் உள்ளது
இதுபோன்றதுதான் விஞ்ஞானச் சங்கத்தின் புதிரும்.
மேலும் நான் அடிக்கடி வினவும் பொது அறிவுத் தேடல்
பகுதியையும் இணைத்து வாரம் தோறும்
வினாக்கள் தொடுத்து சரியான விடையெழுதும்
அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசு வழங்கலாம் தானே.
வாழ்க சங்குநாதம்! வளர்க உன் பணி! தொடர்க உன் பணி!

த.சி.சயந்தன், வட்டுக்கோட்டை.

எம் தாய் நாட்டில் தவண்டு வரும் சங்குநாதமே!
நீ சுமந்து வரும் பல்சுவை அம்சங்களும்
இனிமையிலும் இனிமை.
அதிலும் என் மனதை தொட்டவை
கவிதைக்கலசம், ஆலடிமாநாடு மற்றும்
அனைத்துமே சிறப்பானவை.
மேலும் உனது பணி
சிறப்பாகத் தொடர வாழ்த்துக்கள்.

A.அமலிகா, இரணைப்பாலை.

# வடிவேலு வாத்தியார்

சிறுகதை

வடிவேலு வாத்தியாருக்கு வகுப்புக்குள் நுழையும்போதே நெஞ்சுப்படபடப்பு ஆரம்பித்துவிட்டது. 'அந்தப் பயல் கோபி இண்டைக்குப் பள்ளிக்கூடம் வந்திருப்பானா? வாராட்டால்... அப்பாடா தப்பிவிடலாம். வந்திருந்தால் அவ்வளவுதான். வாட்டி எடுத்துவிடுவான்.

அண்மைக்கால ரி.வி.தொடர்களில் வந்து அட்டகாசம் செய்யும் ஒரு குண்டுப் பையனைப் போல இந்தக் கோபியும் பாடசாலையிலும், வகுப்பிலும் செய்யும் அட்டகாசங்களை வடிவேலு வாத்தியாரால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. அவன் படிக்கும் எட்டாம் வகுப்பிற்கு வடிவேலு வாத்தியாரதான் வகுப்பாசிரியர். வகுப்பில் சமயமும், தமிழும் அவர்தான் எடுக்கவேண்டும்.

பாடம் எடுக்கும்போது குறுக்குக் கேள்விகள் கேட்டு அவன் வாத்தியாரைப் புரட்டி எடுத்துவிடுவான். பணக்கார வீட்டுப்பையன். வீட்டில் தகப்பன், சிறியதகப்பன், இரண்டு அண்ணன்மார், மாமா என்று எல்லோருமே வெளிநாட்டுக்காரர்கள்.

எட்டாம் வகுப்பு படிக்கும் போதே ஹெல்மெட் எதுவும் இல்லாமல் போக்குவரத்துப் பொலீஸாருக்கே டிமிக்கி கொடுத்துவிட்டு சந்தி சந்தியாக ஹீரோ கொண்டா ஓடித்திரிபவன். அவனைவிட வயதில பெரியவர்கள்தான் அவனின் நண்பர்கள். இருட்டில் நின்று எதுவும் செய்யத் துணிந்தவர்கள்.

எல்லாவற்றையும்விட அவன் கொஞ்சம் புத்திசாலியும் கூட. வாய் கொடுத்தால் தப்பிக்கொள்ள முடியாது. அதனால் வடிவேலு வாத்தியார் எப்போதும் அவனிடம் மிகவும் அவதானமாகவே இருப்பார். யாராவது எக்கேடாவது கெட்டுப்போகட்டும். இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று இருந்துவிடுவதே மேல் என்பது அவர் எப்போதோ எடுத்துவிட்ட முடிவு.

வடிவேலு வாத்தியார் பாடம் எடுக்கும்போது எப்போதுமே மூக்குக் கண்ணாடி அணிவார்.

ஒருநாள் மூக்குக்கண்ணாடி அணிந்து தமிழ்ப்பாடம் எடுத்துக்கொண்டிருக்கும்போது இந்தக் கோபி எழுந்து அவரின் மூக்குக்கண்ணாடியைக் காட்டிக் கேட்டான்....

"சேர் நீங்கள் போட்டிருப்பது என்ன?"

"இது தம்பி மூக்குக் கண்ணாடி....."

"இதை ஏன் போடுறீங்கள்...?"

"இது தம்பி... எனக்குக் கண் பார்வைகுறைவு. அதனால் போடுறன்..."

"கண்ணுக்காகத்தானே போடுறீங்கள்?"

"ஓம்"

"அப்ப ஏன் சேர் அதை மூக்குக்கண்ணாடி என்று சொல்லுறீங்கள். கண்ணுக்குப் போடும் கண்ணாடி என்று சொல்லலாம்தானே...?"

போய்ச்சுடா. தமிழ் அகராதியைப் புரட்டினாலும் விளக்கம் சொல்லமுடியாத கேள்வி. வகுப்பு குபீர் என்று சிரித்தது. வடிவேலு வாத்தியார் அடக்குவதற்காகப் பிரம்பை எடுத்தார். நல்ல வேளையாக அதற்குள் பாடம் முடியும் மணியடித்துவிட்டதால் ஒருவாறாகத் தப்பிக் கொண்டார்.

இன்னொருநாள் 'சமய பாடம் எடுத்துக்கொண்டிருக்கும் போது இந்தக் கோபி எழுந்து தனக்குப் பக்கத்தில் இருக்கும் பையனைக் காட்டிச் சொன்னான்,

"சேர் இவன்ர அப்பாவின் பெயர் ஆறுமுகமாம்....."

"சரி"

"அம்மாவின் பெயர் பார்வதியாம்"

"சரி"

"ஆறுமுகம் யார் சேர்?"

"முருகன்... முருகக் கடவுள்"

"பார்வதி யார் சேர்"

"உமாதேவியார். சிவனின் ஒரு பாகம். சக்தி."

"முருகன் உமாதேவியாரின் பிள்ளைதானே சேர்.....?"

"ஓம்.........."

"அப்படியெண்டால் ஆறுமுகத்தைப் பார்வதி கல்யாணம் செய்யலாமோ சேர்...... அதுவும் தாயும், பிள்ளையும். சைவசமய விதிக்கு இது பிழையெல்லோ.....?"

போச்சுடா. கிருபானந்தவாரியார் மீண்டும் பிறந்து வந்தாலும் பதில் சொல்லமுடியாது. இந்து கலாசார அமைச்சாலும் தீர்த்துவைக்க முடியாத பிரச்சினை. வகுப்பு அல்லோல கல்லோலப்பட்டது. நல்லவேளையாக அப்போதும் மணியடித்ததால் அன்றும் வாத்தியார் தப்பித்துக் கொண்டார்.



இதனால்தான் வாத்தியாருக்கு அவனைக் கண்டாலே குலை நடுக்கம். இந்தக்காலத்து மாணவர்களுடன் முண்டவும் முடியாது. அவர்கள் போக்கிலேயே விட்டுவிடவேண்டும். அல்லது விட்டுப்பிடிக்கவேண்டும். வெளிநாட்டுப் பணத்தின் ஆட்சியாலோ அல்லது அவர்களிடம் ஏற்பட்டுவிட்ட பரிணாம வளர்ச்சியாலோ தெரியாது மாணவர்கள் இப்போது ரொம்பவும் மாறித்தான் விட்டார்கள்.

எட்டாம் வகுப்பு வந்துவிட்டது.

"குட்மோர்னிங் சேர்"

"குட்மோர்னிங்... குட்மோர்னிங்"

வாத்தியார் எல்லோரையும் அமரும்படி வலதுகையால் சைகை காட்டியபடியே கோபியின் மேசைப் பக்கம் மெதுவாகக் கண்ணோட்டம் விட்டார்.

'அப்பாடா, அவன் இண்டைக்கு வரேல்லை.....' வாத்தியாருக்கு அவரை அறியாமலேயே உள்ளத்தில் புளகாங்கிதம் ஏற்பட்டது.

"சரி பிள்ளைகள், நாம் இன்று கடிதம் எழுதுவது எப்படி என்பது பற்றிக் கற்கப்போகிறோம். நான் இப்போது கரும்பலகையில் ஒரு மாதிரிக் கடிதம் எழுதப்போகிறேன். நீங்கள் எல்லோரும் அதைக் கவனமாக அவதானிக்கவேண்டும்."

வடிவேலு வாத்தியார் தமிழ் பண்டிதர் என்பதால் எப்போதும் இலக்கண சுத்தியுடனேயே பேசுவார். மாணவர்களும் அவ்வாறே பேசவேண்டும் என்பது அவரின் கண்டிப்பான கட்டளை (கோபியைப் பொறுத்தவரையில் வேண்டுகோள்.)

வாத்திரியார் கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார். மாணவர்கள் எல்லோரும் அமைதியாக அதை அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

"மோர்னிங் சேர்..."

'வந்துட்டான்ரா..... வந்துட்டான்.'

"குட்மோர்னிங் தம்பி... வாரும் இரும்."

வாத்தியாருக்கு வேட்டிக்குள்ளே லேசாக வெடவெடக்க ஆரம்பித்துவிட்டது.

"Bad மோர்னிங் சேர்"

"என்ன தம்பி......."

"Bad மோர்னிங்"

வாத்தியாருக்கு எல்லோரும் எப்போதும் சொல்லிப் பழக்கப்பட்டுவிட்டதால் குட்மோர்னிங்கிற்கு அர்த்தம் தெரியும். ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக அவன் சொல்லும் Bad மோர்னிங்கிற்கு உடனே அர்த்தம் புரியவில்லை. ஆனாலும் அவனுக்கு இன்று வீட்டில் ஏதோ பிரச்சினை என்று மட்டும் அவன் முகத்தைப் பார்த்துப் புரிந்துகொண்டார்.

"சரி சேர் நீங்க எழுதுங்கோ...."

'அப்பாடா அமர்ந்துட்டான். எழுதச் சொல்லிட்டான்.' இண்டைக்கு அவன் ஏதும் பிரச்சினை பண்ணுவான் போலத்தெரியவில்லை. வாத்தியாருக்கு சிறுதெம்பு வந்துவிட்டது. திரும்பிக் கரும்பலகையில் கடிதம் எழுத ஆரம்பித்தார். எழுதிக் கொண்டே இருந்தார்.

"மன்மதராசா... மன்மதரசா... கன்னி மனசைக் கிள்ளாதே...."

வாத்தியாருக்கு உண்மையிலேயே கோபம். தலைக்குமேல் வந்துவிட்டது.

"ஆற்ரா அவன் வகுப்பிலை றேடியோ போடுறது.....?"

கோபமிகுதியால் அவருக்கு இலக்கணத்தமிழ் கூட மறந்துவிட்டது.

"அது ரேடியோ இல்லை சேர்... கோபியின் ஷெல்போன"

"என்னது?"

"ஷெல்போன் சேர்"

கோபியின் பக்கம் பாத்தார். அவன் கொம்பாஸ்பெட்டி போல ஏதோ சிறிய பொருள் ஒன்றை காதுக்குள் பிடித்துக் கதைத்துக்கொண்டிருந்தான்.

"என்ன மாமா இன்னும் எழும்பேல்லையா.....?"

"(இல்லைக் கோபி பயப்படாத விரைவில எழும்பிடும்)......."

"ச்சீய்....." கோபி ஆத்திரத்துடன் தலையைச் சிலுப்பிக்கொண்டே போனைக் காதிலிருந்து எடுத்து காற்சட்டைப்பொக்கற்றினுள் வைத்தான்.

"என்ன தம்பி.. என்ன பிரச்சனை" பிரச்சனைக்குரியவன் கோபி என்பதால் வாத்தியார் மெதுவாகக் கோபியின் பிரச்சினையை விசாரித்தார்.

கோபியின் பக்கத்து மேசை மாணவன் அதற்குப்பதில் சொன்னான்.

"சேர், கோபியின் மாமா கனடாவில இருந்து கோபிக்கெண்டு சிறிய பிஸ்டல் ஒண்டு கொண்டுவந்தவராம்..."

"என்ன தம்பி பிஸ்டலோ?"

"ஓம் சேர். பிஸ்டல் சின்னத் துவக்கு. அந்தத் துவக்கால ஒருவரின் நெற்றியை நோக்கிச் சுட்டால் அதிலிருந்து ஒரு கிடைச்சித் தக்கைக் குண்டு வெளியேறி நெற்றியில வந்து அடிக்குமாம். அது ஆளைக் காயப்படுத்தமாட்டுதாம். ஆனால் அது வந்து அடிக்கும் வேகத்தில் அடிவாங்கிய ஆள் மயங்கி விடுவானாம். கனடாவில திருடர் பயத்திற்காக இதை எல்லோரும் வைச்சிருப்பினமாம். மாமா கொடுத்த அந்தத் துவக்கால கோபி நேற்று அவன்ர அல்சேசன் நாய்க்குட்டியச் சுட்டுப்பார்த்தானாம். அது மயங்கிப் போய் இன்னும் எழும்பேல்லையாம்."

"டேய் கோபி..... சேருக்கு காட்டடா அந்தத் துவக்கை...."

கோபி எழுந்து நின்று பொக்கற்றில் இருந்து அந்தப் பிஸ்டலை எடுத்து வடிவேலு வாத்தியாரின நெற்றியை நோக்கி நீட்டினான்.

"சரி தம்பி பாத்திட்டன்... பாததிட்டன். அதை உள்ள வையும்" என்று சொல்லியபடியே வடிவேலு வாத்தியார் தனது மேசையின் கீழே புகுந்துவிட்டார். இவன் அதை அப்படி நீட்டிக் காட்டும்போது தப்பித் தவறி அல்லது வேண்டுமென்றே கூடச் சுட்டாலும் சுட்டுவிடுவான்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டிலிருந்து சந்தைக்குப் போய்க்கொண்டிருக்கும்போது வீதியோரத்தில் வாத்தியாரால் 'தறுதலைகள்' என்று வர்ணிக்கப்டும் சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்த கிரிக்கற் பந்து வந்து மூக்கில் அடித்த அடி வாத்தியாருக்கு இன்னும் நினைவில் இருக்கிறது.

கோபி அந்தத் துவக்கை பொக்கற்றினுள் வைத்துவிட்டான் என்பதை மேசையின் கீழ் இருந்தபடியே பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டபின் வாத்தியார் மெதுவாக வெளியேவந்து நிமிர்ந்தார்.

"சேர் இதுமட்டுமில்ல உங்கடையப் போல கோபியிடமும் ஒரு மூக்குக்கண்ணாடி இருக்குதாம். அதுவும் கனடாவில் இருந்து வந்ததாம். ஆனால் அதைப் போட்டுக் கொண்டு பார்த்தால் உயிரில்லாத பொருட்களோ உடுப்புகளோ ஒன்றும் தெரியாதாம். உயிருள்ள உடம்பு மட்டுமே தெரியுமாம். கறுப்புச் சட்டை போட்டிருந்தால் மட்டும் சட்டைதான் தெரியுமாம். உடம்பு தெரியாதாம்..."

இதையும் கோபியின் பக்கத்து மேசைப் பையனே சொல்கிறான். வாத்தியாரால் எதையுமே நம்ப முடியவில்லை. ஆனால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. எல்லாவற்றையும் நேரில் கொண்டுவந்து காட்டுகிறார்களே! சண்டையை நிற்பாட்டி வெளிநாட்டுச சாமான்களை உள்ளே வர அனுமதித்த பின்பு எத்தனை வினோதமான நம்பமுடியாத சிலவேளை ஆபத்தான பொருட்கள் எல்லாம் வந்து சேருகின்றன.

வாத்தியார் வெளிநாட்டு வரவுகளையும் விஞ்ஞானத்தின் புதுமைகளையும் பற்றிச் சிந்தித்து தனக்குள் வியந்துகொண்டிருக்கும்போது கோபி தனது மேசையை விட்டு எழும்பினான்.

"சேர், எனக்குத் தலை இடிக்குது. றொக்கியைப் பார்க்கவேணும். நான் வீட்டை போகப்போறன்"

"சரி தம்பி, போட்டுவாரும் அதிபரிடம் சொல்லிவிட்டுப்போம்"

கோபி புத்தகப் பையுடன் வகுப்பைவிட்டு வெளியேறிவிட்டான். வாத்தியாருக்கு அப்பாடா என்றிருந்தது. கோபி வீடு செல்லப் போகிறான் இன்றைக்கு ஒருவாறு தப்பிவிட்டேன். கரும்பலகையில் எழுதிய மாதிரிக் கடிதத்தைப் பார்த்துக் கொப்பிகளில் எழுதும்படி மாணவர்களுக்குக் கூறிவிட்டு கோபி உண்மையிலேயே வீடு செல்கிறானா என்பதை உறுதிப்படுத்துவதற்காக தனது மேசையில் இருந்தபடியே பாடசாலை வாசற்கதவை நோட்டம் விட்டார்.

## புதுக்கவி

என்னடா அது! கோபி ஒரு புதுவிதமான பச்சை நிற சைக்கிளில் போகிறான். சைக்கிளை அவன் காலால் மிதிக்கவில்லை. ஆனால் சைக்கிள் வேகமாகச் செல்கிறதே! மோட்டார்சைக்கிளா? அப்படியும் இல்லையே! சைக்கிளில் இருந்து புகையும் வரவில்லை. சத்தமும் வரவில்லை. வாத்தியார் அதிசயம் தாங்கமுடியாமல் கதிரையில் இருந்தே எழுந்துவிட்டார்.

"சேர் கோபி ஓடிப்போவது பற்றியில் ஓடும் மோட்டார் சைக்கிள். இதுவும் கனடாவில் இருந்து வந்தது. சத்தமும் போடாது புகையும் வராது"

வாத்தியார் அதிசயத்துடன் எழுந்து நிற்பதைக் கண்டு கோபியின் பக்கத்து மேசைப் பையன்தான் இதையும் கூறுகிறான்.

'என்ன உலகமடா இது! போகிற போக்கைப் பார்ததால் கொஞ்சக்காலத்தில் பூமியில் இருந்து நிலவிற்குப் பாதை போட்டு ரயிலும் ஓடுவார்களோ இந்த விஞ்ஞானிகள்!'

முதற்பாடம் முடியும் மணி அடிக்கிறது. வடிவேலு வாத்தியார் வகுப்பைவிட்டு வெளியேறுகிறார். கோபியின் தொல்லையில் இருந்து இன்றைய தினம் தப்பித்துக்கொண்டாலும் அவரின் மனதைப் பெரியதொரு சந்தேகம் குடைந்துகொண்டிருந்தது.

'இந்தக் கோபி எல்லாவற்றையும் கொண்டுவந்தான்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

[library stamp]



# மறவாதே!



துன்பம் கண்டு துவளாதே!
துவண்டு நீயும் தூங்காதே!
இன்பம் எனக்கு இல்லையென
இனியும் வீணில் கலங்காதே!

காலும் கையும் இருக்கும் வரை
கவலை என்பது நமக்கில்லை
நாளும் நன்கு உழைத்திட்டால்
நன்கு உயரலாம் மறவாதே!


ஒழுங்காய் கடமைகள் செய்திடுவாய்
ஒவ்வாத பழக்கம் கைவிடுவாய்
உழைப்பால் எதையும் சாதிக்கலாம்
உண்மை இதுவே மறவாதே!

A. ரோகிணி, கொக்குவில்.

# இவை உங்களின் ஓவியங்கள்



அ. சஞ்ஜீவ்
யா/டிரிபேக் கல்லூரி.



கயான்
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை.



S. தர்ஷிகா
யா/இந்து மகளிர் கல்லூரி.

# சிறுவர் அரங்கம்



## உழைப்பைத் தந்த உத்தமர்கள்

| | |
|---|---|
| மின்சாரம் | - மைக்கல் பரரே |
| தொலைபேசி | - அலக்ஸாண்டா கிரஹாம்பெல் |
| வானொலி | - மார்க்கோனி |
| தந்தி | - மோர்ஸ் |
| ஒலிபரப்பு | - தோமஸ் அல்வா எடிசன் |
| தொலைக்காட்சி | - ஜெ. எல். பெயார்ட் |
| வானியல் தொலைநோக்கி | - கலிலியோ கலிலி |
| எக்ஸ்- கதிர்கள் | - கொன்ராட் ரோன்றஜென் |
| ரேடியம் | - பியறியும் கியூரி அம்மையாரும் |
| மின்னற்கடத்தி | - பெஞ்சமின் பிராங்ளின் |

V. துவாரகா, திருநெல்வேலி.

## விடுகதை

1. கொளுத்திய பின் கோடி கும்பிடு. அது என்ன?
2. கொக்கு நிற்க நிற்க குளம் வற்ற வற்ற. அது என்ன?
3. கூடவே வருவான். ஆனால் உதவி செய்யமாட்டான். அவன் யார்?
4. குனிந்த கிழவிக்கு கூனெல்லாம் பல்லு. அது என்ன?
5. குள்ளக் கோழிக்கு குடலுக்குள் சதங்கை. அது என்ன?
6. சன்னல் பின்னல் கயிறு சாதியில்லாக் கயிறு. எண்ணெய் படாத கயிறு. அது என்ன?
7. சலசலவென சத்தம் வரும் பேச மட்டும் வராது. அது என்ன?
8. கோயிலைச் சுற்றி கறுப்பு கோயிலுக்குள்ளே வெளுப்பு. அது என்ன?
9. குண்டுச் சட்டியிலே கெண்டை மீன். அது என்ன?
10. சின்ன மச்சான் குனிய வச்சான். அவன் யார்?

## உலகின் பெரிய பறவை



உலகின் மிகப் பெரிய பறவை தீக்கோழியாகும். எழுந்து நின்றால் 2.5 மீற்றர் உயரமும் 150கிலோகிராம் எடையும் கொண்ட இப்பறவை மிக வேகமாக ஓடி எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியது.

ஆபிரிக்க சவன்னாப் புல் நிலங்களில் காணப்படும். அதன் நீண்ட கழுத்தும் கூர்மையான பார்வையும் நீண்ட தூரம் அவதானித்து எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள உதவுகிறது.


வலிமையான நீண்ட கால்கள்: மணிக்கு 60 கி.மீ வேகத்தில் விரைந்து ஓடும் திறனுடையவை. எதிரிகளைக் கண்டால் முகத்தை நிலத்தினுள் புதைத்துக்கொள்ளும் என்ற கூற்று தவறானது. நிலத்தினுள் முகத்தைப் புதைத்து உணவை (புழு, பூச்சி) தேடுகிறது அவ்வளவுதான்.

L. கர்த்திகா, வல்வெட்டி.

திறமை உங்களுக்கு ஏற்பட வேண்டுமானால் திறமை வேண்டுமானால் நீங்கள் மதிப்புத் தரவேண்டும்.
-கார்லைல்.

## கண்டு பிடியுங்கள்

குஷியாக கைகளை விரித்துக்காட்டும் இந்த நான்கு தவளைகளில் இரண்டு மட்டும் இரட்டைப் பிறவிகள். அந்த இரட்டைத் தவளையர்கள் யார்? என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.




## உலகில் மிகப் பெரியவை

| | |
|---|---|
| 1.ஆசியாக் கண்டம் | 2.பசுபிக் சமுத்திரம் |
| 3.ஆஸ்திரேலியா தீவு | 4.எவரெஸ்ட் சிகரம் |
| 5.இமயமலை | 6.அமேசன் ஆறு |
| 7.காஸ்பியன் ஏரி | 8.லண்டன் நகரம் |

இ.ஜிகிதா,
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்.

விடைகள்
விடுகதைகள்
1.கற்பூரம் 2. விளக்கு 3. நிழல் 4. கரிக்கரிவாள் 5.வேர்க்கடலை 6. தயிர் கடைதல் 7. அருவி 8. சோற்றுப்பானை 9. நாக்கு 10. முள்
கண்டுபிடியுங்கள் ~ 2,4

# தப்புக் கணக்கு

என் மனம் உள்ளுக்குளளேயே அழுதது.

போன வருஷம் ஹொஸ்டலிலிருந்து விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தபோது எவ்வளவு சந்தோஷமாக இருந்தது. தினமும் அப்பா சினிமா, பூங்கா என்று கூடடிக்கொண்டு போனார். அம்மாவோ, விதவிதமாக பலகாரம் செய்துதந்தா. ஆனா இந்த வருஷம் எல்லாமே தலைகீழா இருக்கே!

ஏண்டாப்பா ஹொஸ்டலிலயிருந்து விடுமுறைக்கு வந்தோமெண்டு இருக்கு. இங்க வந்ததிலயிருந்து யாருமே என்னைக் கவனிக்கிறதேயில்லை. நானாகப் போய்,

'அப்பா, பூங்காவுக்குப் போகலாமாப்பா' என்று கேட்டேன். அதுக்கு அப்பா கோபமாப் பேசினார். அப்பா தான் இப்படியெண்டா, அம்மா அதுக்கு மேல.

'அம்மா ஹொஸ்டல்ல அப்பம் செய்யமாட்டாங்கம்மா. இங்க செய்து தாங்கம்மா. சாப்பிட ஆசையா இருக்கு' என்று கேட்டதுக்கு அம்மா என்ன பதில் சொன்னாங்க தெரியுமா?

'அப்பமும், தோசையுமா இப்ப உனக்குவேணும்' எண்டு கடுகடுத்தா. நாலு மாசமா ஹொஸ்டல்ல இருந்திட்டு வந்த பையனுக்குச் சொல்லுற பதிலா இது!


கொஞ்சநேரம் பக்கத்து வீட்டு சங்கரோட விளையாடிட்டு வீட்டுக்கு வந்தேன்.

சங்கரின்ர அம்மாவும் என்ர அம்மாவும் கதைச்சுக் கொண்டு இருந்தார்கள்.என்ன கதைக்கிறார்கள் எண்டு ஒட்டுக் கேட்டேன்.

'போன வருஷம் மூர்த்தி விடுமுறையில் வந்து நிற்கும் போது ஏக தடபுடலா இருந்ததே. இப்ப, எந்தநேரமும் அவனைத் திட்டிக்கொண்டே இருக்கிறீர்களே ஏன்?!' என்று சங்கரின்ர அம்மா என்ர அம்மாவைக் கேட்க,

ஓமக்கா, போன வருஷம் ஏகதடபுடல்லா அவனை சந்தோஷமா இருக்கவைச்சம். ஆனா விடுமுறை முடிஞ்சு கொண்டுபோய் விடும் போது எனக்கு மனசு கலங்கிப் போச்சு. மூர்த்தியும் ஒரு மாசமா வீட்டு நினைவில அழுதுகொண்டே இருந்தானாம். அவன்ர ஆசிரியர் எங்களைக் கூப்பிட்டுச் சொன்னார்.

அதனாலதான் இந்த வருஷம் அவன் விடுமுறையில வந்ததும் ஹொஸ்



டலே பரவாயில்லை எண்ட நினைப்பு வருகிறமாதிரி நானும், அவரும் மனசைக் கல்லாககொண்டு கடுமையாக நடந்துகொண்டோம்'.

அம்மா சொல்லச் சொல்ல என் தப்பு எனக்குப் புரிந்தது. இனிமேல் இந்த மாதிரி பிழையா நினைக்கமாட்டேன்.

நல்ல அம்மா, நல்ல அப்பா!

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

# விஞ்ஞானத் துளிகள்

## உள்நாட்டுச் சூழலில் பிறநாட்டுப் பாதீனியத்தின் பாதிப்புகள்

ஜெயராணி நந்தகுமார், M.PHIL.
சிரேஷ்ட விரிவுரையாளர்
தாவரவியல் துறை.
யாழ். பல்கலைக் கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### சாகியங்களின் பாதிப்பு

பாதீனியத்தின் வேர், தண்டு, இலை, கனி ஆகிய வற்றிலிருந்து தோன்றும் நிரோதிகளும் (INHIBITORS), நீர்முறையரிப்புக்களும் (LEACHATES) அதாவது உயிருடன் இருக்கும்போது தோன்றும் கசிவுகளும் (EXUDATES) இறந்தபின் பிரிந்தழியும்போது தோன்றும் நீர்முறையரிப்புக்களும் பிற தாவர இனங்களின் முளைத்தல், வளர்ச்சி, பூக்கொள்ளல், கனிகொள்ளல், பச்சிலைய உற்பத்தி போன்றவற்றை நிரோதித்து பெருமளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தும். அவரையினத் தாவரங்களில் வேர்ச் சிறு கணுக்கள் தோன்றுவதைப் பாதித்து அவற்றின் வளர்ச்சியில் பாதிப்புகளை ஏற்படுத்தும். அதனால் மண்ணில் மறைமுகமாக ஏற்படும் நைதரசன் வளத்தைக் குறைக்கும். இதனால் சாகியத்தின் கட்டமைப்பிலேயே மாற்றங்களை ஏற்படுத்தி சூழலின் சமநிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இதனால் சாகியத்தின் இனவாரியான அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதுடன், உணவுச் சங்கிலிகள், உணவுவலைகளிலும், நுண்ணங்கிகளின் இனவாரியான கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். பெரும்பாலான நுண்ணங்கிகள் கனிப்பொருள் வட்டங்களில் பங்காற்றி மண்ணின் வளத்திற்கும் சூழலில் அழுக்ககற்றுவதற்கும் பெருமளவு உதவுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவரையினத் தாவரங்களிலும் பிற சில இனத் தாவரங்களிலும் வேர்ச் சிறுகணுவாக்கத்திற்கு (ROOT NODULATION) உதவுவது சில இனப் பற்றீரியங்களாகும். மண்ணில் நுண்ணங்கிகளின் பகுப்பியல்பு பாதிப்படைந்தால் பாரிய விளைவு ஏற்படும். சூழல் சூனியமாகிவிடும்.

### விவசாயம்:

சூழலில் பிற இனத் தாவரங்களில் பாதீனியத்தினால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் பயிர்த் தாவரங்களிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். அதனால் உறபத்தி குறையும். மேலும் பாதீனியத்தின் மகரந்த மணிகள் பிற இனத் தாவரங்களின் பூக்களை அடைந்தால் கருக்கட்டலையும் அதன் பயனாக கனி கொள்ளலையும் குறைக்கும். இப்பாதிப்பு சூழலிலுள்ள பிற தாவர இனங்களை மாத்திரமல்லாமல் பயிர்த் தாவரங்களிலும் பெருமளவில் பாதிப்புக்களை ஏற்படும்.

### மனிதனில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

பாதீனியம் தோலில் பட்டால் எரிச்சல், நமைச்சல், சொறிவு, வீக்கம் போன்ற குணங்குறிகளைத் தோற்றுவிக்கும். ஒவ்வாமை (ALLERGY) உள்ளவர்களுக்குத் தொய்வு, மூச்சுத்திணறல், மூக்குச்சிந்துதல், தொண்டை நோ, தொண்டை வீக்கம், கண்சிவத்தல் போன்ற குணங்குறிகளைத் தோற்றுவிக்கும். இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவாகவிருப்பது பாதீனியம் செடியைக் காட்டிலும் அதன் மகரந்தமணிகளாகும்.

அதனால் அது பூத்துச் சொரிந்திருக்கும் காலம்தான் இத்தகையவர்களுக்கு மிகவும் ஆபத்தான காலமாகும். இவர்கள் பாதீனியத்தை நெருங்காமலிருப்பது நல்லது. ஏனையவர்கள் இதை அழிக்க முற்படும்போது தாவரத்தின் அடியில் பிடித்து, இலைகளைச் சிதைக்காமல் பிடுங்குவது நல்லது; ஆயினும் சிறந்த வழி - கையுறைகளை (GLOVES)ப் பயன்படுத்துவது. கையுறைகள் கிடைக்காது போனால் கால்மேசை (SOCKS) யோ அல்லது பொலித்தீன் பைகளையோ கையுறையாகப் பயன்படுத்தலாம். ஒரு சுத்தமான துணியினால் மூக்கையும் வாயையும் மூடிக் கட்டியிருப்பது நல்லது (பீடைநாசினிகள் விசிறும்போது கட்டுவதுபோல)

### உயிர்ப்பல்வகைமையில் பாதிப்பு

உலகிலேயே உயிர்ப் பல்வகைமை (BIODIVERSITY) இலங்கையில் உயர்வானது. தமிழ்ப்பிரதேசங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு பிரதேசத்தில் இனப்பல்வகைமை (SPECIES DIVERSITY) அதிகமானதாகவிருந்தால் அப்பிரதேசம் சமநிலையில் உள்ளது என்று கொள்ளப்படும். பல இனங்கள் இல்லாது, சில இனங்கள் அதிக தொகையிலிருந்தால் சமநிலை தளம்பியுள்ளது என்று கொள்ளப்படும். சூழல் அழுக்கான இடங்களில் (POLLUTED PLACES) இனப்பல்வகைமை குறைவாகவிருக்கும். பாதீனியம் பிற இனங்களை நசுக்கி நலிவுறச்செய்து மறைந்து போகவும் செய்யும். அதனால் சூழலின் சமநிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்தும். நாம் ஆய்வு மேற்கொண்ட இடங்களில் பிற இனங்களின் எண்ணிக்கை குறைவாகவும், அதே இடங்களில் (SITES) பாதீனியம் இல்லாதிருந்தால் பிற தாவர இனங்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகமாக இருந்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. இவ்வண்ணம் பாதிப்படைவது அருமையாகக் கிடைக்கும் சிறந்த மூலிகைத் தாவரங்கள் ஆகும் என்பது குறிப்பிடதக்கது.

பாதீனியத்தின் விதைகள் (கனிக...) முளைக்கும் போது தோன்றும் நிரோதிகள் ஏனைய இனங்களின் முளைத்தலை நிரோதிக்கும். மேலும் பாதீனியத்தின் நாற்றுக்கள் அகலமான, ரோசா உருவிலுள்ள, நிலத்தில் படிந்து கிடக்கும் இலைகளை உடையவை. அதனால் ஏனைய தாவர இனங்கள் முளைத்து வளருவதற்கு தடையாகவிருக்கும். நாம் அறவீடுகள் மேற்கொண்ட இடங்களில் பாதீனியம் நாற்றுக்கள் அடர்த்தியாகவுள்ள இடங்களில் ஏனைய இன நாற்றுக்கள் காணப்படவில்லை. அல்லது மிகக் குறைவாகக் காணப்பட்டன.

### பிறப்புரிமை அடிப்படையில் பாதிப்புக்கள்

ஒவ்வொரு பிரதேசத்திலும், அப்பிரதேசத்துக்குரிய அங்கிகளின் சந்ததிச் சுவடிகளின் (GENES) தொகுப்பு சந்ததிச் சுவட்டுக் குட்டை (GENE POOL) எனக் கொள்ளப்படும். அப்பிரதேசத்துக்குரிய அங்கிகள் சந்ததிச் சுவட்டுக் குட்டையில் தமக்குரிய பரம்பரையலகுகளை பகிர்ந்து கொண்டேயிருக்கும். இந்தநிலையில் பாதீனியம் புகுந்ததால் சந்ததிச் சுவட்டுக் குட்டையில் உள்ளீடு ஏற்பட்டுள்ளது. மேலும் பாதீனியத்தின் தாக்கத்தினால் அப்பிரதேசத்தில் ஏதாவது இனங்கள் மறைந்தால் சந்ததிச் சுவட்டுக் குட்டையில் இழப்பு ஏற்படும். இது தொடர்ந்து நிகழ்ந்தால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும். சூழல் அழுக்காவது போல், பாதனியம் புகுந்ததால் சந்ததிச் சுவட்டுக் குட்டை அழுக்காகியுள்ளது எனக் கொள்ளலாம். சூழலியல் அடிப்படையில் இது பெரியதொரு பாதிப்பாகும.

(தொடரும்)

# கொம்பியூட்டர் கல்வி

## மவுஸைப் பற்றி அறிந்து கொள்வோம்

இன்று கொம்பியூட்டரின் ஒரு முக்கிய அங்கமாக மவுஸ் மாறிவிட்டது. மவுஸ் வேலை செய்யாவிட்டால் கொம்பியூட்டரில் ஒன்றுமே செய்ய முடியாது எனப் பலர் நினைக்கும் அளவுக்கு மவுஸின் ஆதிக்கம் ஓங்கி நிற்கிறது.

1990ஆம் வருடத் தொடக்கத்தில் மவுஸைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. அப்போதெல்லாம் டொஸ் ஒப்ரேட்டிங் சிஸ்டத்தில் வேர்ட்ஸ்டார், லோட்டஸ் 1-2-3 மற்றும் டிபேஸ் போன்ற அப்ளிக்கேஷன்களைத்தான் பயன்படுத்திக் கொண்டிருந்தோம்.

விண்டோஸ் ஒப்ரேட்டிங் சிஸ்டமும், அதில் இயங்கக்கூடிய அப்ளிக்கேஷன்களும் வெளிவர ஆரம்பித்தவுடன் மவுஸின் தேவையை கொம்பியூட்டர்ப் பயனாளர்கள் உணர ஆரம்பித்தனர்.

*மவுஸை அறிமுகப்படுத்தியது யார்?*

பலர் தவறுதலாக அப்பிள் நிறுவனம்தான் மவுஸைக் கண்டுபிடித்தது என எண்ணிக்கொண்டிருக்கிறனர். இன்னும் பலர், ஜெராக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார் என்ற கொம்பியூட்டரில் பயன்படுத்தப்பட்ட மவுஸைப் பார்த்து அப்பிளின் steve jobs அதை கொப்பி செய்து தங்களது கொம்பியூட்டர்களில் புகுத்தினர் என நினைக்கின்றனர்.


உண்மையில் மவுஸைக் கண்டுபிடித்த பெருமை அப்பிள் நிறுவனத்துக்கும் கிடையாது. ஜெராக்ஸ் நிறுவனத்துக்கும் கிடையாது.

கலிபோர்னியாவின் மென்லோ பார்க் என்ற இடத்தில் உள்ள standard research institute என்ற அமைப்பைச் சேர்ந்த doug engelbart என்ற விஞ்ஞானிதான் மவுஸை உருவாக்கினார். 1960ஆம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டது. மவுஸ், லைட்பென் போன்ற பல டிவைஸ்களை உருவாக்கி, கொம்பியூட்டர் திரையில் இருக்கிற ஒரு பொருளின் மேல் கேர்சரைக் கொண்டுசெல்ல எது குறைவான நேரத்தை எடுக்கிறது என ஆராய்ந்தார். மவுஸ்தான் அதில் வெற்றி பெற்றது.

மவுஸ் கிளிக்குகள் எவை?

பொதுவாக மவுஸின் மேல் இரண்டு அல்லது மூன்று பட்டன்கள் இருக்கும். இடது, வலது மற்றும் நடு பட்டன்கள் என அவற்றைக் குறிப்பிடுவர்.

வலதுகை பழக்கமுடைய எல்லோருக்கும் மவுஸின் இடது பட்டன்தான் முக்கியமானது. (இடதுகை பழக்கம் கொண்டவர்களுக்கு மவுஸின் வலது



பட்டன் முக்கியமானது) வலதுகை பழக்கமுடையவர்களை அடிப்படையாகக் கொண்டு கிளிக்குகளைப் பார்ப்போம்.

மவுஸின் இடது பட்டனை அழுத்திவிடுவதை சிங்கிள் - கிளிக் அல்லது சுருக்கமாக கிளிக் என்பர். இடது பட்டனை மிக மிக வேகமாக இரு தடவைகள் அழுத்திவிடுவதை டபுள் கிளிக் என்பர்.

டபுள் – கிளிக் செய்ய நல்ல பயிற்சி தேவை. விரைவாக செய்வதற்குப் பதில் இடது பட்டனை இரு தடவைகள் மெதுவாக அழுத்திவிட்டால் நீங்கள் டபுள் – கிளிக் செய்திருப்பதாக கொம்பியூட்டர் கருதாது. மாறாக சிங்கிள் கிளிக்கை இருதடவைகள் செய்ததாக எடுத்துக்கொள்ளும்.

மவுஸின் வலது பட்டனை ஒருதடவை அழுத்திவிடுவதை ரைட் – கிளிக் என்பர். இப்படிச் செய்வதால் கட்டளைகள் அடங்கிய மெனு கிடைக்கும். context sensitive menu அல்லது shortened menu என இதை அழைப்பர். இதிலுள்ள வேண்டிய கட்டளையை கிளிக் செய்யலாம்.

மவுஸின் இடது பட்டனை அழுத்தி, அதைவிட்டு விடாமல் அப்படியே இழுத்துவந்து, வேண்டிய இடம் வந்தபின் மவுஸ் பட்டனை விட்டுவிடுகிற செயல் Drag and Drop. இடது பட்டனுக்கு பதில் வலது பட்டனை அழுத்தி செய்வது Right Drag and Drop. இங்கு கூடுதலாக மெனு ஒன்று கிடைக்கும்.

மவுஸ் வகைகள் எவை?

நாம் பயன்படுத்தும் சாதாரண மவுஸின் அடியில் பந்து ஒன்று இருக்கும். மவுஸின் கேபிளை கொம்பியூட்டரின் பின்புறம் உள்ள போர்ட்டில் செருகி இருப்பார்கள். மவுஸ்பாட் எனப்படுகின்ற அட்டையில் வைத்து மவுஸை நகர்த்தும் பொழுது பந்து நகரும். Xஅச்சு மற்றும் Yஅச்சு ஆகியவை கணக்கிடப்பட்டு அதற்கேற்ப திரையில் மவுஸ் பொயின்டர் நகரும்.

மவுஸின் கேபிளினால் எழுகிற பிரச்சினைகளைக் கண்டதனால் வயர்லெஸ் மவுஸை உருவாக்கினார்கள். விலை அதிகம் என்பதால் வயர்லெஸ் மவுஸை வாங்க பலர் தயங்குகின்றனர்.


சாதாரண மவுஸின் பந்தினால், அழுக்குகளும், தூசிகளும் மவுஸின் வயிற்றுக்குள்ளே போய் மவுஸை சரியாகச் செயல்பட விடுவதில்லை. எனவே அப்ரிக்கல் மவுஸைக் கண்டுபிடித்தார்கள். நியாயமான விலையில் இது கிடைப்பதால் இதற்கு பெரும் வரவேற்பு உள்ளது.

ஸ்குரோல் செய்வதற்கு வசதியாக மவுஸின் மேல் ஒரு உருளையைக் கொடுத்து அதை வீல் மவுஸ் என வெளியிட்டுள்ளார்கள்.

# குடும்பத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

திருமணம் என்பது ஓர் தெய்வக ஏற்பாடு. இப்பூப் பந்தலின் கீழ் நுழையும் வாயிலுள்ளவர்கள் மோகம் எனும் நிழலை மாத்திரமல்ல வாழ்க்கை என்னும் நிஜத்தையும் யோசிக்கவேண்டும். ஓர் ஆனுக்கும் பெண்ணிற்குமிடையே நிரந்தர உறவை ஏற்படுத்துவதே இத்தூய்மையான திருமண ஏற்பாட்டின் நோக்கமாகும்.

திருமணம் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் அன்பான பிணைப்பை, உறவை ஏற்படுத்துவதுடன், வாழ்வின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளவும் கிடைத்த வரம் என்றே கூறலாம். தனிமை, அவநம்பிக்கை போன்ற



மன வெற்றிடத்தை திருமணமானது நிரப்பி விடுகின்றது. ஆம்.. திருமணமானது அனேக பிரச்சினைகளிற்கு முற்றுப் புள்ளி வைத்தாலும் சிலரிற்கு புதிய பிரச்சினைகளையும் ஏற்படுத்திவிடும். அல்லது பழைய பிரச்சினை தராமலும் விடும்.

இரு மனங்களின் சங்கமமான திருமணம் ஒத்துப் போகலாமே தவிர, இருவரும் எல்லாவிதத்திலும் ஒருமனப்பட்டதுபோல் இருக்கவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. சங்கடங்கள் ஏற்படும் போதுதான் இருவருக்குமிடையான உண்மையான அன்பை நிரூபிக்க சந்தர்ப்பம் கிடைக்கின்றதென்பார்கள். இவ்வேளையில் மாறிமாறி ஒருவர் மேல் ஒருவர் பழிபோடுவதைத் தவிர்த்து, யார்மேல் குற்றம் பிடிப்பது என்பதையும் தவிர்த்து பிரச்சினைக்கு என்ன செய்யலாம் என்ற ஆக்கமுடைய செயலை நடைமுறைப்படுத்துவதே சிறந்ததாகும்.

ஆனால் நம்மவர்களிடையே இந்த நிலைமைகள் எவ்வளவு தூரம் உள்ளது என்பது கேள்விக்குறிதான். குழ்ந்தையில் காலாட்டவும், கைவீசவும் கற்றுத்தந்த பெற்றோர் இன்று வாய் திறந்து ஓர் வார்த்தை பேசத் தடை விதிக்கிறார்கள். ஏன்? பெண் என்பதற்காகவா? பிறக்கும் போது பெற்றோரால் ஏந்தப் பட்டு, பருவவயதில் ஆடவன் கரம் தவழப்பட்டு, முதுமையில் அவள் பிள்ளைகளிடம் கரை சேர்கின்றாள் என்றால்.. ஏன் பெண் என்ன சுயசிந்தனை அற்றவளா?

ஆரம்பக் காலங்களில் தெய்வமாகப் போற்றப்பட்டவள், பூச்சிக்கபபட்டவள் இன்று ஒவ்வொரு மனங்களிற்கும் ஒவ்வொரு நிலையில் காட்சியளிக்கின்றாள் என்றுதான் கூறலாம்.

வாழ்க்கை என்றால் நிட்சயம் திருமணம்தான் வாழ்க்கையா? என்பதும் எம்மைப் பொறுத்தவரை ஓர் தேடலாகவே உள்ளது. அவள் தனிமைப்பட்டவளாக இருக்காது, பாதுகாப்புடன் இருக்கவேண்டுமென்பதற்காக நல்லதென நினைத்துப் போடப்பட்ட 'வேலி' தான் திருமணமே தவிர, திருமணம்தான் வாழ்க்கை எனக் கூறமுடியாது.

தான் பிறந்த குடும்பத்திலும் சரி, புகுந்த வாழ்விலும் சரி, வாழும் சமூகத்திலும் சரி அவளுக்கென்ற அமைதி, சந்தோஷம், நியாயமான விருப்பம் என்பன கிடைக்கின்றதா? அல்லது பெற்றுக்கொள்கின்றாளா? பாரதி கனவு கண்ட அஞ்சா நெஞ்சமும் நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் உடைய பெண்ணை இவ்வுலகில் துளிர்விட யார் தான் விடுகின்றனர்? அப்படி அவளை விட்டால் ஆண்களின் முதல் நிலைத்தன்மை பின் தள்ளப்படுமா?

ஆண், பெண் இருவரும் அவரவர்தான். உணர்வு நிலைத் துடிப்பில் மாற்றம் பெறுகினறனர். சாப்பாடும் கல்வியும், உடையும்தான் அவளின் தேவைகளா? ஆண்கள் எது செய்தாலும் எப்படி நடந்தாலும் அதைப் பற்றிக் கேட்க ஒருவருமில்லை. அவன் சமூக ரதியில் எப்படியும் பேசலாம், சிரிக்கலாம், பழகலாம். பொழுதைக் கழிக்கலாம். ஆனால் ஒரு பெண் தனது சகோதரத்துடன் கூட கதைக்கவும் முடியாத நிலை...

பெண்கள் தான் சமூக வண்டியின் அச்சாணி. அதற்காக வண்டியை இழுத்துச் செல்லும் அடிமை மாடாகி விடக்கூடாது. 'தனது இன்பத்தைக் கருவாக்கியவள். விண்ணவருக்கும் மண்ணவருக்கும் விலையற்ற செல்வம்'. 'பெண்ணின் பெருமையே பெருமை அன்பின் தன்மையும் தாயையும் அழைத்திடும் அருமை'. அனபும் உறுதியும் நம்பிக்கையும் விலைமதிப்பற்றது. அதிலும் தாயன்புக்கு இவ்வுலகில் ஈடு இணை எதும'ல்லை.

இன்று சமூக மட்டத்தில் சிந்தனை மாறியுள்ளது. எந்த நாடு எப்படியான கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளது? ஆண்களைப் போல ஆற்றலினாலே அரசாளும் பெண்கள் நம் நாட்டின் கண்கள். தலைபோகும் போது நாமே தன்மானம் காப்பாற்ற வேண்டியவர்கள். பெண்களாலே உலகிலே பெருமைகாணும் இன்பம் தோன்றும் நிலை என்றும் வேண்டும். குடித்தனம் வாழ்ந்திட உதவியாய் என்றும் குலமது வாழ்ந்திட வழி சேர்ப்பவள். மலைபோல் துன்பம் வந்தபோதும் மலர் முகம் காட்டி மகிழ்ந்திடச் செய்பவள்.

ஆனால், அவள் படிப்புக்கும் பட்டத்திற்கும் மட்டும் தான் கும்பிடுபோடுவதா? பெண்ணிற்கு பாட்சை ஒன்றா? இரண்டா? பிறந்தது முதல் சோதனைகள்தான். கைவிட்டால வேதனை.

B.A, M.A... படித்தவளுக்கு எவனோ ஒருவன மாப்பிள்ளை. கேள்விக்குப் பதில், ஒருகை வளையல் வரதட்சணை. பணம் இருந்தால் தான் திரும்பியே பார்ப்பான். ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி. ஆடு மாடு போல் அடங்கி நடக்கனும். வேலை என்று வெளியில் போய் வந்தாலும் அதன்பின் அடிபட்டுக் கிடக்கவேணும்.

இன்றைய காலகட்டத்தில் பெண்களின் உரிமைக்காக குரல் எழுப்புபவர்கள் பெண்களின் உரிமைகள் மீறப்படும் இடங்களில் தட்டிக் கேட்பதென்பது தாமதமே. பெண்கள் படிக்கவேண்டும. ஆனால் சமூக சேவையிலோ, பொது செயற்பாடுகளிலோ ஈடுபடக்கூடாது என்பார் சிலர். பெண்கள் அடக்க ஒடுக்கமாக இருக்கவேண்டும், படி தாண்டக்கூடாது என இரும்புவேலி இடப்படுகின்றது.

கல்வி, கலாசாரம், இலக்கியம், நாடகம், சமூக விடுதலை போன்ற துறைகளில் ஈடுபடுவதை சற்றுப் பின் தள்ளியும் கீழ்நோக்கியும் பார்க்கின்றனர். தாய் தந்தையர் கூறுபவர்களிற்கே கழுத்தை நீட்டவேண்டிய நிலை. அவள் தனது இன்பத்திற்குரியவளாகவும், பணிவிடைக்குரியவளாகவும் மட்டுமே முக்கியமாக நோக்குகின்றான்.

(தொடரும்)



# மகளிர் உலகம்

## எப்பொழுதும் குழந்தைகளை நேரடியாகக் கண்டிக்கக்கூடாது

குழந்தைகளை நல்ல விதமாக வளர்ப்பது ஒரு கலைதான். வளரும் குழந்தைகளிடம், 'நீ அப்படி இருக்காதே. இப்படிச் செய்யாதே. அவனைப் பார்; அவன் எப்படி அழகாய் நடந்துகொள்கிறான். அதுபோல் நீயும் நட!' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே இருந்தால் அதற்கு தன்மீதே நம்பிக்கை போய்விடும். பின்னாளில் குழந்தைகளைச் சரியாக வளர்க்கவில்லையோ என்று வருந்தவேண்டி வரும்.

'பொய் சொல்லாதே; திருடாதே. ஏனடா இப்படி எல்லாம் செய்கிறாய்?' என்று கடிந்துகொண்டால், குழந்தைகளுக்கு மீண்டும் மீண்டும் அதைச் செய்யத் தோன்றும். இப்படிச் சொல்வதை விட்டு விட்டு, அரிச்சந்திரன் கதை, ராமர் கதை என்று புராணங்களில் உள்ள நல்ல விஷயங்களைச் சொல்லிக்கொடுத்தால், அதன்படி நடக்க வேண்டும் என்ற உத்வேகம் பிறக்கும். நீதிக்கதைகள் நிறையவே உள்ளன. அவற்றை எடுத்துச் சொல்லுங்கள்.



இதற்கெல்லாம் நேரமே கிடையாது என்று நீங்கள் தவிர்த்துவிட்டால் குழந்தைகள் நல்ல விதமாய் வளரவில்லையே என்று நீங்கள் வருத்தப்படுவதில் அர்த்தமேயில்லை. நீங்கள் முயற்சி எடுத்து குழந்தைகளை நல்லவிதமாய் வளர்க்கும் போது, உங்கள் கணவர் அதற்கு எதிர்மறையாய் நடந்துகொண்டாலும் ஆபத்துத்தான்.

குழந்தைகளை வளர்ப்பதில் அப்பா, அம்மா இருவருக்குமே சம பங்கு உண்டு. நம்போக்கில் குழந்தைகள் வளரவேண்டும் என்று எதிர்பார்ப்பதைவிட அவற்றின் போக்கில் நாம் போய் நல்ல விஷயங்களை எடுத்துச்சொல்வது இன்றியமையாதது.

குழந்தைகளுக்கு கடவுள் மீது ஈடுபாடு ஏற்படும் வகையில் சில கதைகளைச் சொல்லவேண்டும். அதற்காக தினசரி பூசை செய்தால்தான் பலன் என்பதுபோல் மூட நம்பிக்கையை வளர்க்கவேண்டாம். மனிதனை விட ஆற்றல் மிகுந்த சக்தி ஒன்று உண்டு என்றும், அந்தச் சக்தி குழந்தைகளிடமும் இருக்கிறது என்றும், அந்தச் சக்தியை நல்லவிதமாய்ப் பயன்படுத்த வேண்டும் என்றும் விளங்கும்படி நல்ல கதைகளை எடுத்துச்சொல்லுங்கள்.

தினமும் காலைவேளையில் நேரத்துக்கே எழுந்து உடற்பயிற்சி செய்யச் சொல்லிக் கொடுங்கள்.

விடுமுறை நாட்களில் கோயில்களுக்கு அழைத்துச் சென்றால் நல்லது. வளர்ந்த பின் அவன் எதையும் புரிந்துகொள்வான் என்றாலும், சிறிய வயதிலேயே இப்படிப் பழக்கி வந்தால், தீயபழக்கங்களும், கெட்ட சகவாசங்களும் இவனை ஈர்க்காமல் பாதுகாக்கலாம்.

## சமைத்துச் சுவைப்போம்

### வெங்காயப் பகோடா



**தேவையான பொருட்கள**

| | |
|---|---|
| கடலை மா | - 1/4Kg |
| அரிசி மா | - 200g |
| வெங்காயம் | - 100g |
| பச்சை மிளகாய் | - 10 |
| எண்ணெய் | - 1/2 l |
| உப்பு | - அளவிற்கு |
| அப்பச்சோடா | - அளவிற்கு |
| கறிவேப்பிலை | - அளவிற்கு |

செய்முறை:-

முதலில் வெங்காயம், பச்சை மிளகாய் இரண்டையும் பொடியாக நறுக்கி வைத்துவிட்டு கடலை மா, அரிசிமா இரண்டையும் அரித்து அதற்குள் நறுக்கிய வெங்காயம், ப.மிளகாய், உப்பு, கறிவேப்பிலை, அப்பச்சோடா ஆகியவற்றைச் சேர்த்து சிறிதளவு சூடாக்கிய எண்ணெய் சேர்த்து பிசைந்து குழைக்கவும். கொஞ்சம நீர் விட்டுக் குழைத்த பின் மாவை சிறுசிறு உருண்டைகளாகவோ, தட்டைகளாகவோ தட்டி எண்ணெயில் பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.

பொதுசன நூலகம்



# நம்மை நிர்மூலமாக்கும் மூலம்

### மூலநோய் என்றால் என்ன?

மலம் வெளிவரும் பொழுது, ஆசனவாயில் ஏற்படும் சில பிரச்சினைகள்தான் மூலமாக உருவாகிறது. மூலத்தில் வெளிமூலம், உள்மூலம் என்றிருக்கின்றன.

### இது எதனால் வருகிறது?

மூலநோய்க்கு முக்கிய காரணம் மலச்சிக்கல்தான். சிரமப்பட்டு மலம் கழிக்கையில் மலம் கழிக்கும் இடத்தின் விரிவடையும் தன்மை போய், இறுகிவிடுவதாலே இந்த நிலை ஏற்படுகிறது.

### பிற காரணங்கள்

காரம் அதிகமாகச் சாப்பிடுகிறவர்களுக்கு மூலநோய் அதிகம் வர வாய்ப்புண்டு. ஒரே இடத்திலேயே அதிகநேரம் அமர்ந்து வேலை செய்கிறவர்களுக்கும் மூலநோய் வரும் வாய்ப்புண்டு. உதாரணமாக ரெய்லர்கள், ஆசிரியர்கள், டிரைவர்கள் மற்றும் கொம்பியூட்டர் வேலை செய்பவர்கள். அடிக்கடி அதிகமாக ரென்சன் அடைபவர்களுக்கும் மூலநோய் வரச் சந்தர்ப்பம் உண்டு.


மூலநோய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வரக்கூடிய பொதுவான நோய்தான். கருவுற்றிருக்கும் பெண்களுக்கும், பிரசவகாலத்தில் அதிகப்படியாகச் சிரமப்பட்டுக் குழந்தையைப் பெறும் தாய்மார்களுக்கும், அடிக்கடி பிரசவம் ஆகும் பெண்களுக்கும் மூலம் வரச் சந்தர்ப்பம் உண்டு.

### மூலம் என்பது பரம்பரை நோயா?

மூலநோய் பரம்பரையாக வருவதில்லை. எனினும் பல வீடுகளில் தலைமுறை தலைமுறையாக ஆரம்பத்திலிருந்தே, ஒரேமாதிரியான எல்லா உணவு வகைகளிலும் காரத்தை அதிகமாகச் சேர்ப்பார்கள். அந்த மாதிரி காரம் அதிகம் சேர்க்கும் குடும்பத்தினருக்கு மூலநோய் வரும். இதைத் தவிர்க்க, காரத்தைத் தவிர்த்து சாப்பாட்டு முறைகளை மாற்றி உண்ணவேண்டும்.

### நோயின் அறிகுறிகள்

மூலநோய் வந்தவர்கள் மலத்தை முறையாக, எளிதாகக் கழிக்கமுடியாதவர்களாக இருப்பார்கள். சிரமப்பட்டு மலம்




கழிக்கும் போது மலம் கழிக்குமிடத்தில் புண்கள், வெடிப்புகள் ஏற்படும். சிலருக்கு மலம் கழிக்கும் உணர்வு ஏற்படுகையில் மலம் வராது. ஆனால் ரத்தம் சொட்டுச்சொட்டாக வரும். ஒரு சிலருக்கு ஆசனவாயில் சிறிய பந்து மாதிரி உருண்டையாக நின்றுகொண்டிருக்கும். மலம் வெளிவருகையில் ஆசன வாயில் வலி, மலம் வெளியான பிறகு எரிச்சல், மலத்தோடு சீழ், இரத்தம் வந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும்.

மூலநோயின் அவஸ்தையால் உடலின் மென்மையான பாகங்கள் பாதிப்படையும். ஒருசிலருக்குக் கண்பார்வை மங்கும். இடுப்புவலி நீடிக்கும்.

ஒரு சிலருக்குப் புற்று நோய் இருக்கும். அது மூலநோய் மாதிரி அறிகுறிகளை ஏற்படுத்தும். புற்றுநோய் இருப்பது தெரியாமலேயே மூலநோய்க்கு மருந்து சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள். புற்றுநோயா எனக் கண்டறிய சோதனை முறைகளை மேற்கொண்டுவிட்டு அதற்குத் தகுந்தவாறு சிகிச்சை முறைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

அறுவைச்சிகிச்சை செய்தவர்களுக்கும் இந்நோய் வரும். புண் எங்கோ இருக்கும். இரத்தக் கசிவு எங்கோ வரும். கசிவோடு நாற்றமும் இருக்கும். பெண்களாக இருந்தால், மாதவிலக்குக் காலங்களில் உபயோகப்படுத்துவது போல் சானிடரி நாப்கின் வைக்கக்கூடிய நிலையும் வரும்.

### உணவு முறை

மூலநோய் வருவதற்கு உணவு முறையும் ஒரு காரணமாகும். உடலின் உஷ்ணத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய உணவையும், மலச்சிக்கல் ஏற்படாமலிருக்க எந்த உணவுகளைச் சாப்பிட வேண்டுமோ அதையும் சிறிய வயதிலிருந்தே பழக வேண்டும். நாக்கின் ருசிக்கு ஏற்ப கண்டதைச் சாப்பிடக் கூடாது. வெளியில் கண்ட இடங்களில் சாப்பிடுவதையும் தவிர்க்கவேண்டும்.

மூலநோய் உள்ளவர்கள் மிளகாய், மிளகு தவிர்த்துக் காரமில்லாத உணவு வகைகளைச் சாப்பிடவேண்டும். நீர் நிறைய அருந்தவேண்டும். குறிப்பாக வெதுவெதுப்பான நீர் அடிக்கடி அருந்தவேண்டும்.

நல்லெண்ணெய், முட்டை, கோழி ஆகியவை சாப்பிட்டால் உஷ்ணநிலை அதிகரிக்கும் எனவே உணவில் மேற்கண்டவற்றைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

# இலக்கை நோக்கிய கனவு

ஐம்பதுக்கும் மேற்பட்ட சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்த ஒருவர், அவர்கள் அனைவரிடமும் பொதுவாகவுள்ள சில விஷயங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அவை இவைதான்.



பொருளாதாரத் தேவையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு வீடு கட்டவேண்டும். கலர் ரீ.வி வேண்டும். வோஷிங் மெஷின் வேண்டும். ஏ.சி வேண்டும் என்று குறைந்தது பத்து இலட்ச ரூபாயை பத்து வருடத்துக்குள்ளாக பார்த்துவிடவேண்டுமென்ற வெறி அவர்களுக்கு இருந்திருக்கிறது. ஆர்வம்தான் அவர்களுக்கு பணம் சம்பாதிக்கும் வழிகளை தெரிவித்திருக்கிறது.

அவர்கள் மற்றவர்களின் விமர்சனத்தைப் பற்றிச் சதா கவலைப்படுவதில்லை. சாதனையாளர்களைச் சோர்வடையச் செய்வதற்கென்றே ஒரு கும்பல் காத்திருக்கும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதையெல்லாம் பொருட்படுத்த ஆரம்பித்தால் எந்த ஒரு செயலைச் செய்யும்போது அதற்கு 'என்ன எதிர்ப்பதில் கிளம்பும்' என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தால் நேரம் கெட்டு, யோசனைகளும் செயலிழக்கும் என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இலக்கை நோக்கி அனைவரும் கனவு கண்டிருக்கிறார்கள். தாங்கள் தலைவனாக, நிர்வாகியாக, அதிகாரியாக எப்படி மாறவேண்டும் என்பதை அவர்கள் சிறுவயதிலேயே தீர்மானித்திருக்கிறார்கள். அதை நோக்கி மெதுவாக நகர்கிறார்கள். எத்தனை இடர்பாடு வந்தாலும் அவர்கள் உள்மனது அந்த இலக்கை நோக்கியே கனவு காண்பதாகத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பட்டினி கிடந்திருக்கிறார்கள்.

வாழ்வின் ஆரம்பக் கட்டத்தில் சில காலங்களுக்காவது பசியின் கொடுமையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதற்காக வாழ்க்கையைப் பலியாக்கிவிடாமல், சொந்த சோகங்களை மறந்துவிட்டு, பின்னால் வரப்போகும் விருந்துக்காகத்தான் அன்று பட்டினிகிடக்க வேண்டியிருக்கிறது என்று தங்களைத் தாங்களே ஆறுதல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பாராட்டுக்காக ஏங்கியதில்லை. செய்கிற செயல் பலராலும் கைதட்டப்பட்டு உடனே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர்கள் நினைத்ததே இல்லை. தங்களுடைய வழி இது. சரியான பாதை இதுதான். பாராட்டப்பட்டாலும் தூற்றப்பட்டாலும் காரணம் தாங்கள் தாங்கள்தான் என்ற திட உணர்வை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

# ஒலிம்பிக்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)


நிறவேற்றுமை காரணமாக சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தடைசெய்யப்பட்டிருந்த தென்னாபிரிக்காவும் இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டது.

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட 169 நாடுகளில் 64 நாடுகள் பதக்கங்களை வென்றன.

இதேவேளை, ஆரம்ப நிகழ்ச்சிகளில் ஆப்கானிஸ்தான் கலந்துகொண்டாலும் போட்டி நிகழ்வு எதிலும் கலந்துகொள்ளவில்லை. உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வுகளைத் தொலைக்காட்சி மூலம் உலகிலுள்ள சுமார் இரண்டு மில்லியன் மக்கள் கண்டுகளித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிலாரஸ் நாட்டைச் சேர்ந்த VITALE SHERBO இவ்வருட ஒலிம்பிக்கின் ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் ஆறு தங்கப்பதக்கங்களை வென்றார். அதுவும் ஒரே நாளில் நான்கு பதக்கங்களை வென்றது ஒரு சாதனையாகும்.

1992ஆம் ஆண்டு



**25வது ஒலிம்பிக் போட்டியை ஸ்பெயின் நாட்டு அரசர் JUAN CARLOS I ஆரம்பித்துவைத்த மகிழ்ச்சியில்**

ஒலிம்பிக் போட்டிகளில் உலகின் கவனத்தை ஈர்த்த சம்பவமானது 10ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் இடம் பெற்றது. இப்போட்டியில் வெற்றிபெற்ற எதியோப்பிய கறுப்பின வீராங்கனை டெராட்டு டூலு (DE RARTU TULU) தன்னுடன் போட்டியில் ஓடி வந்த தென்னாபிரிக்க வெள்ளையின வீராங்கனை எலானா மேயர் (ELANA MEYER) வெற்றி இலக்கை அடையுமவரை காத்திருந்து அவரைக் கைகொடுத்து வாழ்த்தினார். இந்தச் சம்பவமானது தென்னாபிரிக்காவிற்கு ஒரு படிப்பினை எனப் பலரும் சந்தோசித்தனர். நிறவெறி ஆதிக்கத்தால் தென்னாபிரிக்காவானது 1992ஆம் ஆண்டுக்கு முன்னைய ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளாது இருந்தது.

மேலும் டூலு மற்றும் மேயரின் இந்த இணைப்பானது எதிர்காலத்தில் இரு இனங்களுக்கிடையில் நல்லுறவை வளர்க்கும் ஒரு ஆரம்பமாக இருக்கும் எனவும் பலர் ஆனந்தப்பட்டனர்.

ஒலிம்பிக் பதக்கம் வென்ற முதல் ஆபிரிக்க கறுப்பினப் பெண் என்ற பெருமை இவருக்கு உண்டு. இவர் எதியோப்பியாவின் OROMO என்றழைக்கப்படும் ஆயுதக் குழுவின் உறுப்பினருமாவார். தனது 16வது வயது வரை தான் ஒரு சிறந்த ஓட்ட வீராங்கனை என்பது டூலுவுக்குத் தெரியாமல் இருந்தது.

1992ஆம் ஆண்டு டூலு 10,000m ஓட்டப் போட்டியில் 6,100m வரை இரண்டாவதாகவே வந்துகொண்டிருந்தார். அதற்குப் பின்னரே அவர் தன்னுடன் ஓடி வந்த மேயரை முந்திச்சென்றார்.

1996ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் மீண்டும் கலந்துகொண்ட டூலுவுக்கு கிடைத்தது நான்காம் இடமே. இருப்பினும் அவர் தனது முயற்சியை விடவில்லை. 2000ஆம் ஆண்டு அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட டூலு பத்தாயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார். இதன் மூலம் ஒலிம்பிக்கின நீண்டதூர ஓட்டப்போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.




**25வது ஒலிம்பிக் போட்டிக்காக அறிமுகப்படுத்தப்பட்ட MASCOT.**

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியில் ரஷ்யா 45தங்கம், 38 வெள்ளி, 29 வெண்கலம் உட்பட 112 பதக்கங்களை மொத்தமாகப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. அத்துடன் அமெரிக்கா மொத்தமாக 108 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தையும், ஜேர்மனி மொத்தமாக 82 பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடத்தையும் தட்டிச்சென்றது.

இதேவேளை போட்டியை நடாத்திய ஸ்பெயின 13 தங்கம், 7 வெள்ளி, 2 வெண்கலம் உட்பட மொத்தமாக 22 பதக்கங்களைப் பெற்று பத்தாம் இடத்தைப் பெற்றது.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல - 21

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'ஆட்டோகிரா.ஃப்' நாயகிகளில் ஒருவரான இவரே சேரனின் அடுத்தபடத்திற்கான சோடி. இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 21**
**'சங்குநாதம்'**
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:-**
சரியான விடை எழுதுபவர்களில் ;மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசுபெறும் அதிஷடசாலிகள தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல: - 21

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................
அனுப்புபவரின் முகவரி :-........................
........................
........................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 19
சரியான விடை





நடிகர் பிரசாந்த்

### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல. 19 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | சா.மரியதாஸ் தபாற்கந்தோர் வீதி, மானிப்பாய். |
| இரணடாம் பரிசு | :- | V.துவாரகன் 5ஆம் வட்டாராம், புங்குடுதீவு. |
| மூன்றாம் பரிசு | :- | த.தனரூபினி நெல்லண்டை, பருத்தித்துறை. |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

பா.தர்சினி, சண்டிலிப்பாய், கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை.. செ.நன்நிலா, நீர்வேலி. R.சுகி, வேலணை. சி.நிரோஷன், யாழ்ப்பாணம். இ.சுவர்னா, பூளாய். S.நிகேதினி, வண்ணார்பண்ணை. வ.சிவாஜி, கரணவாய். ந.சஞ்சயன், யாழ்ப்பாணம். சி.புருசோத்தமன், யாழ்ப்பாணம். சு.மகாலட்சுமி, முல்லைத்தீவு. S.இன்பராஜ், மீசாலை. R.ராஜசந்திரன், நாவாந்துறை. சி.துஸ்யாந்தினி, யாழ்ப்பாணம். N.ராகவன், திருவையாறு. L.சுவஸ்திகா, உடுப்பீட்டி. K.புஸ்பராணி, தம்பிசிட்டி. இ.தவசீலன், பொற்பதி. S.விதுஷன், வண்ணார்பண்ணை. S.பாக்கியநாதன், சங்கானை. க.வத்ஷலா, சித்தன்கேணி. K.யாழினி, கொக்குவில். யோ.ஜெகதீஸ்வரி, சாவகச்சேரி. T.S.கீதா+பூரணி, வட்டுக்கோட்டை. க.கிரிஜா, மானிப்பாய். ந.அபிராமி, பூளாய். மு.ஜெயந்தி, சித்தன்கேணி. ம.ரஞ்சன், திருமுறிகண்டி. V.இளங்கோ, கோப்பாய். L.அபிராமி, வல்வெட்டித்துறை. ச.திலகவதி, சங்கானை.




**இ.விஜயசிறி**
வயது:- 17
வேலணை கிழக்கு
4 ஆம் வட்டராம்
வேலணை.
பேனாநட்பு,
பத்திரிகை, வானொலி.

**சி.சிவரூபன்**
வயது:- 18
84, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிரிக்கெற், நண்பர்களுடன் அரட்டை.

**I. அஜய்**
வயது:- 18
C/O தர்ஷன் வீடியோ
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
T.V, கிரிக்கெற்.

## வடிவேலு...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி....)


ஏன் அந்த உடம்பை மட்டும் காட்டும் மூக்குக்கண்ணாடியைப் போட்டுவரவில்லை. இது ஆண்கள் மட்டும் படிக்கும் பள்ளிக்கூடம் என்பதால் போட்டுவரவில்லையோ? பெண்களும் சேர்ந்து படிக்கும் பள்ளிக்கூடம் என்றால் போட்டுவந்திருப்பானோ? உடுப்பைக் காட்டாமல் உடம்பை மட்டும் காட்டுமாமே! கறுப்புச்சட்டை போட்டால் மட்டும் உடம்பு தெரியாதாமே!

இன்றைக்கு வீடு சென்றதும் முதலில் ஒரு கறுப்புத்துணி எடுத்து காற்சட்டையொன்று தைப்பிக்கவேண்டும். இனிமேல் உள்ளே கறுப்புக் காற்சட்டை போட்டு அதற்கு மேல் வேட்டி கட்டிக்கொண்டுதான் ஒவ்வொருநாளும் பாடசாலைக்கு வரவேண்டும். ஒரு நாளைக்கு அவன் அந்தக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பாடசாலை வந்தாலும் வருவான். வரக்கூடியவன்.'

மனதிற்குள் ஒரு திடமான முடிவுடன் தனக்குத்தானே தலையை ஆட்டியபடியே அடுத்த வகுப்பை நோக்கிச் செல்கிறார் வடிவேலு வாத்தியார்.

○○○

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 21




*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 21**
**'சங்குநாதம்'**
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

முழுப் பெயர் :- ........................................
முகவரி :- ........................................
........................................
........................................

இங்கே வெட்டுக ........................................

### இடமிருந்து வலம்

(1) [illegible]ரின் வேதனை கண்டு மனதில் உருவாகும் உணர்வு. (4) சங்கம் வளர்த்த தமிழ். (8) பருவகால மாதங்களில் ஒன்று. (9) புஷ்பங்களிலொன்று. (10) ஆன்மீக ஈடேற்றத்திற்காக இதனை அனுஷ்டிப்பர்.

### மேலிருந்து கீழ்

(1) நாட்டில் இது ஏற்பட்டால் மக்கள் பட்டினியால் இறப்பர். (2) பஞ்சபூதங்களிலொன்றின் தேவையேற்படும்போது இது ஏற்படும் (குழம்பியுள்ளது). (3) சாதனை புரிவோரை இது தேடிவரும். (5) நல்லவழியில் இதனைத் தேடவேண்டும் (கீழ்மே). (6) உண்மையான இவன் உற்றநேரத்தில் உதவுவான். (7) ஊர்வன இனத்தைச் சார்ந்த உயிரினங்களில் ஒன்று. (8) கூந்தல் - இப்படியுமழைப்பர்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.19இன் விடைகள்

#### இடமிருந்து வலம்

(1) செய்மதி (4) கனிவு (5) சால்வு (6) அபயம் (7) துளசி (9) திடம் (10) நுளம்பு.

#### மேலிருந்து கீழ்

(1) செஞ்சாந்து (2)மப்பு (3) ஆனி (4) கம்பளம் (8) சிரம் (11) உதிரம்.

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | அ.அனுஜா கீரிமலை வீதி, சித்தன்கேணி. |
| இரண்டாம் பரிசு | :- | க.மனோகரன் சங்கத்தானை, சாவகச்சேரி. |
| மூன்றாம் பரிசு | : | ஞா.இராஜோதயன் கோப்பாய் தெற்கு, கோப்பாய். |

### போட்டியில்கலந்துகொண்டுபாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. வே.கதிரமலை, கட்டுடை. சி.பிருந்தா, புத்தூர். சி.சியாமளா, சுன்னாகம். ந.சஞ்சயன், யாழ்ப்பாணம். யோ.சிவாஜினி, சாவகச்சேரி. வ.மன்னர் அன்ரனி, குருநகர். பா.தர்சினி, சண்டிலிப்பாய். கே.அரசேஸ்வரன், நல்லூர். கோ.சத்தியப்பிரியா, யாழ்ப்பாணம். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. பா.செல்வராணி, சங்கானை. து.இந்திரவதனா, வல்வெட்டித்துறை. க.மலர், யாழ்நகர். கே.வி.ரி.துறை, பருத்தித்துறை. க.வத்ஷலா, சித்தன்கேணி. ந.நவஜீவன், பூளாய். வ.மகீபன், கரவெட்டி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. ம.எழிலரசி, புதுக்குடியிருப்பு. சி.விவேகானந்தன், வியாபாரிமூலை. K.புஸ்பராணி, தம்பிசிட்டி. R.ராஜசந்திரன், நாவாந்துறை. மாருதி, ஆவரங்கால். ச.திவ்வியா, அச்சுவேலி.

லொஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற உலக மகளிர் டென்னிஸ் போட்டியில், தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள அமெரிக்க வீராங்கனை டேவன்போர், முதல் இடத்தில் உள்ள சக நாட்டு வீராங்கனையான செரினா வில்லியம்சை 6–1, 6–3 என்ற நேர் செட் கணக்கில் வென்று பட்டம் பெற்றார். வெற்றிக் கோப்பையுடன் டேவன்போர்ட்.






பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஆலன் ராபர்ட் உயரமான கட்டடங்கள் மீது ஏறுவதில் அசகாயசூரர்.

இவரை 'ஸ்பைடர்மேன்' என்றும் அழைப்பதுண்டு. புதிய மொபைல் போனை அறிமுகப்படுத்தியுள்ள இந்தோனேசிய சாட்டிலைட் கார்ப்பேரேஷனுக்குச் சொந்தமான, ஜகார்த்தா நகரில் உள்ள 361 அடி உயரமான, 27 மாடி கட்டடத்தின் மீது ஏறி சாகசம் புரிகிறார் ஆலன் ராபர்ட்.



வடபெல்ஜியம் ஜீபிரக்கில் நடைபெற்ற மணற்சிற்ப திருவிழாவில் ஜுராஸிக் பார்க் படத்தில் வரும் ஒரு காட்சியைப் போன்று உருவாக்கப்பட்ட மணற் சிற்பம் இது.






இவருமொரு பேரழகன் தான். இத்தாலியில் அண்மையில் நடைபெற்ற பருமனான ஆண்களுக்கான அழகுப் போட்டியில் தன்னை அழகனென நிரூபிக்க போட்டியில் கலந்துகொண்ட ஓர் ஆண்.

நம்மூர் 95 இடப்பெயர்வு போன்று இதுவுமொரு இடப்பெயர்வுதான். இந்தியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இடம்பெயர்ந்து செல்ல அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்காக இந்திய விமானப்படையின் ஹெலிகொப்ரர்கள் தண்டவாளப் பாதையில் தரையிறங்க அந்த உதவிகளை பெறுவதற்காக விரைந்து செல்லும் மக்கள் கூட்டம்.

இப் பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தாரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது